ஸ்ரீ தமிழ்
உண்மை நின்றிட வேண்டும்

**ஆசிரியர் – பதிப்பாளர் :**
இல. பத்மப்ரியா

**பொறுப்பாசிரியர் :**
வெ. ஜெயராமன்

**துணை ஆசிரியர்கள் :**
நா. பாஸ்கரன்
சி. பாண்டிக்குமார்

**வடிவமைப்பு :**
ஸ்ரீஸ்வயம்

**சட்ட ஆலோசகர்கள் :**
இல. ஸ்ரீராம்
த. பாஸ்கர்

**அலுவலக முகவரி:**
ஸ்ரீ தமிழ்
77/6, 10வது அவென்யூ,
அசோக்நகர்,
சென்னை –600 083

70102 81932

http://www.shreetv.tv
facebook.com/shreetv
x.com/Shreetv media
youtube com/ShreeTV
shreemedia.news@gmail.com

Press and Registration of Books Act-ன்படி எல்லா வழக்குகளும் சென்னையில் உள்ள உரிய நீதிமன்றங்களின் வரம்பிற்கு மட்டுமே உட்பட்டவை.

கதைகளில் வரும் பெயர்களும் நிகழ்ச்சிகளும் கற்பனையே. இதழில் வெளியாகும் விளம்பரங்களின் உண்மைத்தன்மைக்கு ஸ்ரீ தமிழ் நிர்வாகம் பொறுப்பல்ல. பேட்டிகள் மற்றும் சிறப்புக் கட்டுரைகளின் கருத்துகள் படைப்பாளர்களின் சொந்தக் கருத்துகளே!

**தனி பிரதி: ரூ 30/–**
**ஆண்டு சந்தா: ரூ 600/–**

# காத்திருக்கும் ஆபத்து – தப்புமா தமிழகம்?

ஊழல் என்பது ஒரு புற்றுநோய், இது ஒரு குடிமகனின் ஜனநாயகத்தின் மீதான நம்பிக்கையை அரித்து, புதுமை மற்றும் படைப்பாற்றலுக்கான உள்ளுணர்வைக் குறைக்கும் என்றார் முன்னாள் அமெரிக்க அதிபர் ஜோ பைடன். பல நாடுகளில் ஊழலுக்கு எதிரான மக்கள் புரட்சி என்ற பெயரில் ஜனநாயக ஆட்சிகள் தூக்கி எறியப்பட்டன. ஆட்சி மாற்றத்திற்குப் பின் அந்த நாடுகளின் பொருளாதார நிலையோ, பாதுகாப்போ, நிர்வாகமோ சீரடைந்து மக்களின் எதிர்பார்ப்புகள் பூர்த்தி அடைந்ததாகத் தெரியவில்லை. இன்று தமிழகமும் இந்த அழிவுப் பாதையில் நகர்வதாகத் தெரிகிறது.

ஊழல், நிர்வாகச் சீர்கேடு, சட்ட ஒழுங்கு சீர்கேடு, வாரிசு அரசியல், அதிகார துஷ்பிரயோகம், பிரிவினைவாத அரசியல், ஜாதி துவேஷம், கருத்துரிமை பறிப்பு என அனைத்து அவலங்களுக்கும் காரணமாகியுள்ளது தி.மு.க அரசு. இந்த அவலங்களை முன்நிறுத்தி ஆக்கப்பூர்வமான மாற்றத்தை ஏற்படுத்த எதிர்கட்சிகளோ, மக்கள் இயக்கங்களோ வலுவான நிலையில் இல்லை. இந்தச் சூழலை பிரிவினைவாத அமைப்புக்களும், தேச விரோத சக்திகளும் பயன்படுத்தத் தொடங்கியுள்ளனர். சென்னையில் நடந்த துப்புறவுத் தொழிலாளர் போராட்டத்திலும், சட்ட விரோதமாக முதல்வர் ஸ்டாலின் கலந்து கொண்ட கிராமசபை கூட்டத்திலும், சாம்சங் தொழிலாளர் போராட்டத்திலும் அர்பன் நக்சல்களின் முகம் தென்பட்டது.

நாட்டின் வளர்ச்சிக்கானத் திட்டங்களையும், பாதுகாப்பையும் உறுதி செய்யும் திட்டங்களையும் எதிரி நாட்டின் தூண்டுதலின் பெயரில் முடக்கும் தீய சக்திகளுடன் கூட்டணி சேர்ந்து மத்திய அரசுக்கு எதிரான அரசியலுக்குப் பயன்படுத்தியது தி.மு.க. இதே தேச விரோத கும்பல், இன்று தி.மு.க வின் பலவீனத்தை பயன்படுத்தி, தி.மு.க பயன்படுத்திய பிரிவினைவாத, அடிப்படைவாத, தேசத்துரோக கருத்தியலைக் கொண்டு தி.மு.க அரசை எதிர்த்து வருகிறார்கள். மக்கள் விரோத, தேச விரோத, ஊழல் ஆட்சி ஒழிவது நாட்டின் அத்தியாவசிய தேவை என்பதில் மாற்றுக் கருத்து இல்லை!. இந்த மக்கள் கோபத்தை எதிரி நாட்டு ஏஜண்டுகளும், அந்நிய சித்தாந்தவாதிகளும் பயன்படுத்த அனுமதித்தால் அது நாட்டிற்கு பேராபத்தாக முடியும். இலங்கை, வங்கதேசம், நேபாளம் போன்ற நாடுகள் சிக்கித் தவிப்பதுபோல் நம் தமிழகம் சிக்கலில் அகப்பட்டுவிடுமோ என்ற அச்சம் ஏற்படுகிறது.

2014 ஆம் ஆண்டு மத்திய காங்கிரஸ்-தி.மு.க கூட்டணி ஊழல் ஆட்சியைப் பயன்படுத்தி மக்கள் புரட்சி என்ற பெயரில் நம் நாட்டை உருக்குலைக்க அன்னா ஹஸாரேயை முன்நிறுத்தி கேஜ்ரிவால் கூட்டங்களின் உதவியுடன் பெரும் சதி நடந்தது. இறையருளால் மோடி அவர்கள் தேசிய அரசியலுக்கு வந்து பாரதத்தைக் காப்பாற்றினார்! இன்று தமிழகத்தைக் காக்க மோடியைப் போல் நல்லவரும், வல்லவருமான ஒருவர் வருவாரா!

# ஆம்பூரில் பாகிஸ்தான் ஆதரவு அடிப்படைவாதி - தமிழக அரசின் தொடர் தேசத் துரோகம்

– பால கௌதமன்

மு஼ஃப்தி சல்மான் அசாரி விரைவில் ஆம்பூருக்கு வருகிறார்! **அஹல் இ சுன்னத் யூத் ஆம்பூர் மிலாத் கமிட்டி** சமூக வலைதளங்களில் போஸ்டர்! யார் இந்த முஃப்தி சல்மான் அசாரி? குஜராத்தின் ஜுனாகத்தில் ஹிந்துக்களை நாய்கள் என்று வெறுப்பைக் கக்கியவன்! ஹிந்துக்களை இழிவாக பேசியதற்காக மும்பையில் இவனை குஜராத் காவல் துறையினர் கைது செய்தவுடன் நூற்றுக்கணக்கான முஸ்லீம்கள் காவல்நிலையத்தை முற்றுகையிட்டனர்.

முஃப்தி சல்மான் அசாரி, மும்பை குர்லாவில் கஸ்வா-இ-ஹிந்த் (இந்தியாவை இஸ்லாம் வெற்றி கொள்ளல்) என்ற விஷத்தைப் பரப்பியதற்காக மசூதிப் பொறுப்பிலிருந்து நீக்கப்பட்டான். அதன் பின் கர்நாடக மாநில ஹுப்ளியில் தஞ்சம் புகுந்தான்.

இஸ்லாமிய அமைப்பான **சூஃபி காஃன்ஹா அசோஷியேஷனின்** தலைவர் சூஃபி முகமது கௌசர் ஹாஸன் மஜிதி என்பவர் முஃப்தி சல்மான் அசாரி, கஸ்வா-இ-ஹிந்த் ஏற்படுத்துவதற்காக **ஹமாஸ்** போன்ற ஒரு அமைப்பை ஏற்படுத்த முயல்கிறான்! இந்தியாவை இஸ்லாமிய நாடாக்க தப்லீகி ஜமாதின் வழிமுறையை பின்பற்றுவதுடன் பாகிஸ்தான் பயங்கரவாதிகளுடன் தொடர்பிலிருக்கிறான். இவன் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அரசுக்கு கோரிக்கை விடுத்தார்.

2025ம் ஆண்டின் நடுப்பகுதியில் பல இஸ்லாமிய நாடுகளுக்கு முஃப்தி சல்மான் அசாரி பயணம் மேற்கொண்டான். 2025 ஆகஸ்ட் -செப்டம்பர் மாதங்களில் ஈராக் தலைநகர் பாக்தாதில், ஆப்ரேஷன் சிந்தூர் நடந்த நேரத்தில் இந்தியாவை வீழ்த்த பாகிஸ்தான் போர் கீதம் எழுதிப் பாடிய பாகிஸ்தான் பாடகர் ஹபீஸ் தாகீர் காதிரியை சந்தித்தான். இதே பயணத்தில் முப்தி சமர் அப்பாஸ் அட்டாரி என்ற பாகிஸ்தான் மதபோதகரைச் சந்தித்தான். இந்த சந்திப்பின் போது முஃப்தி சல்மான் அசாரி ஒரு **முஜாஹித்** அதாவது ஜிகாதில் ஈடுபடுபவர் என்று சமர் அப்பாஸ் அட்டாரி சான்றிதழ் கொடுத்தார். ஆப்ரேஷன் சிந்தூரில் பாகிஸ்தான் வென்றது இந்தியாவிற்கு மரண அடி கொடுத்தோம். மாட்டு மூத்திரத்தை குடிக்கும் நீயே இப்படி இருக்கும் போது ஜம் ஜம் தண்ணீர் குடித்த நாங்க எப்படி இருப்போம் என்றெல்லாம் பேசியவர் தான் இந்த பாகிஸ்தான் பஞ்சாபி மத போதகர் முப்தி சமர் அப்பாஸ்.



இந்தியாவிடம் ரபேல் இருக்கலாம், ஆனால் எங்களிடம் அபாபீல் உள்ளது என்று பேசியுள்ளார் முப்தி சமர் அப்பாஸ். அபாபீல் என்பது குர்ஆனில் வரும் குருவி வகை. இவை அக்சுமைட் யானைப்படை மெக்காவில் காபாவைத் தாக்க முற்பட்ட போது தங்கள் அலகுகளில் சிறு கற்களை சுமந்து வீசி அப்பெரும் படையை தோற்கடித்தன என்று வருகிறது. இதைக் கேட்டவுடன் பெருத்த கர ஒலி! எப்படிப்பட்ட மதவெறியூட்டப்பட்ட முட்டாள் கூட்டம்!

முப்தி சல்மான் அசாரி சந்தித்த மற்றொரு அடிப்படைவாத மதபோதகர், பாகிஸ்தானின் ஹஸன் நக்ஷாபந்தி. இந்தியாவை அழிக்க வேண்டும், இராமர் கோவிலை இடித்து மீண்டும் பாபர் மசூதி கட்டப்பட வேண்டும் என்று தொடர்ந்து பேசி வருபவன்.

பாகிஸ்தான் அடிப்படைவாதிகளை

> முஃப்தி சல்மான் அசாரி கஸ்வா-இ-ஹிந்த் ஏற்படுத்துவதற்காக ஹமாஸ் போன்ற ஒரு அமைப்பை ஏற்படுத்த முயல்கிறான்!
> - சூஃபி காஃன்ஹா அசோஷியேஷனின் தலைவர் சூஃபி முகமது கௌசர் ஹாஸன் மஜிதி

சந்தித்ததால் முப்தி சல்மான் அசாரியை தேசத் துரோகி என்று முத்திரை குத்தலாமா? இது நியாயமா? இந்தியாவில் இருந்து கொண்டே பாகிஸ்தான் முஸ்லீம்களை காணொளி வாயிலாக மூளைச்சலவை செய்வதுடன், பொய் பிரச்சாரத்திலும் ஈடுபடும் தேசத்துரோகி முப்தி சல்மான் அசாரி. இந்தியாவில் நபிகள் நாயகத்திற்கு அவமானம் இழைக்கப்பட்டபோது 57 இஸ்லாமிய நாடுகளும் மௌனம் காத்தன! எனவே இந்தியாவிற்கு எதிராக முஸ்லீம்கள் போராட வேண்டும் என்றும் பாகிஸ்தானியர்களைத் தூண்டியவன் சல்மான் அசாரி.

இந்த சந்திப்புகளுக்குப் பின், அதாவது 2025 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில், பெங்களூர் அமீர் கலீமி மசூதியில் உரையாற்றிய முப்தி சல்மான் அசாரி, இன்று நாய்களின் காலம், நம் காலம் இனி வரயிருக்கிறது. இறுதிப் போர் வர இருக்கிறது என்று பேசியுள்ளான். அமீர் கலீமி என்ற சூஃபி இஸ்லாமியப் பிரிவு பாகிஸ்தானின் தாவத் இஸ்லாமுடன் தொடர்புடையது. இந்தப் பிரிவைச் சேர்ந்த கோவை அப்துல் அஜீஸ் பகாவி, தமிழகத்தில் போரா முஸ்லீம்கள் மாநாடு நடக்கும்போது போராக்கள் அழிக்கப்பட வேண்டும் என்று பேசினார். இவர் ஸ்ரீபெரும்புதூரை அடுத்த பண்ணூர் அரபிக் கல்லூரியில் இஸ்லாமிய வரலாறு குறித்து பாடம் நடத்தி வருகிறார்.

இந்த முப்தி சல்மான் அசாரி, இந்தியாவைப் படையெடுப்பது மதக் கடமை என்பதை போதிக்க சுட்டிக் காட்டிய **அபு ஹுரைராவின்** ஹதீஸைத்தான், தேனி பெண்கள் மதரசாவின் முதல்வர் உஸ்தாத் பீர் முகமதும் மேற்கோள் காட்டினார். இதை வெளிக்கொண்டு வந்ததற்கு என் மீது வழக்குத் தொடுத்து பிரிவினைவாதத்தை ஊக்குவித்தது தமிழக அரசு. இப்படி ஒரு பயங்கரவாத ஆதரவு அரசு இருப்பதால் இன்று தமிழகத்தை தேர்ந்தெடுத்துள்ளார் முப்தி சல்மான் அசாரி.

இந்த பாகிஸ்தான் ஆதரவு அடிப்படைவாதி நிகழ்ச்சி நடக்க ஆம்பூரைத் தேர்ந்தெடுக்க காரணம் என்ன? 2015ஆம் ஆண்டு காவல் நிலையத்தைத் தாக்கி, பெண் காவலர்களை மானபங்கம் செய்து, காவலர்கள் உயிருக்கு பயந்து யூனிபார்மை கழற்றிவிட்டு 2 கிலோ மீட்டர் ஓடி, அரசு சொத்துக்களையும், ஹிந்துக்களின் சொத்துக்களையும் சேதப்படுத்தி காட்டுமிராண்டி ஆட்டம் ஆடியதை கொஞ்சம் நினைவுபடுத்துங்கள். இந்த வழக்கின் தீர்ப்பு அண்மையில் வந்தது. இதில் சிலருக்கு கடுமையான தண்டனை வழங்கப்பட்டது. இந்தத் தீர்ப்பு வரும் முன் முஸ்லீம்களுக்கு எதிராகத் தீர்ப்பு வந்தால் யாரும் போஸ்டர்கள் ஒட்டவோ, கொண்டாட்டங்கள் நடத்தவோ கூடாது என்று ஹிந்து அமைப்பினரை அழைத்து கட்டளையிட்டது காவல்துறை. இவ்வளவு பதட்டமான ஊரில், பாகிஸ்தான் அடிப்படைவாதிகளுடன் இணைந்து செயல்படும், **இஸ்லாத்திற்காகப் புனிதப் போர் புரிந்து பாரதத்தை வெல்வோம்** என்று மத நூலை மேற்கோள்காட்டி வன்முறையைத் தூண்டும் நிகழ்வின் போஸ்டர் வெளிவந்தபின்பும் அதை தடுக்கவோ, விழா அமைப்பாளர்கள் மீது நடவடிக்கை எடுக்கவோ, அரசு தயங்குவது ஏன்?

தமிழக அரசின் பிரிவினைவாத ஆதரவுப் போக்கை மத்திய அரசு வேடிக்கை பார்ப்பது நியாயமா?

> முப்தி சல்மான் அசாரி, இந்தியாவைப் படையெடுப்பது மதக் கடமை என்பதை போதிக்க சுட்டிக்காட்டிய அபு ஹுரைராவின் ஹதீஸைத்தான், தேனி பெண்கள் மதரசாவின் முதல்வர் உஸ்தாத் பீர் முகமதும் மேற்கோள்காட்டினார். இதை வெளிக்கொண்டுவந்ததற்கு என் மீது வழக்குத் தொடுத்து பிரிவினைவாதத்தை ஊக்குவித்தது தமிழக அரசு.



# மழை வெள்ள பாதிப்பு - வாங்க SIR வாங்க

– நாணா

"எங்கள் விவசாயிகளை காப்பாற்ற வேண்டும், அவர்களுக்கு காவிரி நீர் வேண்டும், தண்ணீர் கொடு, காவிரி ஆணையம் அமைத்துக் கொடு"

கொடுத்தாச்சு...

"சென்னையை சிங்காரச் சென்னை ஆக்க வேண்டும். ஸ்மார்ட் சிட்டிக்கு பணம் கொடு. மழை நீர் வடிகால் சரி செய்ய பணம் கொடு"

கொடுத்தாச்சு. கொஞ்ச நஞ்சமல்ல, 5400 கோடி...

கேட்டதெல்லாம் கொடுத்த பிறகும், கேட்காமலே கொடுத்த பிறகும் அதை சரியாகப் பயன்படுத்தாமல், சுரண்டி தின்றுவிட்டு, "ஏ, ஒன்றிய அரசே, மாநில உரிமையில் தலையிடாதே!" என்று ஆவேசமாக கத்துவதும், "மத்திய அரசு பணம் தரவில்லை, செறிவூட்டப்பட்ட அரிசிக்கு அனுமதி வரவில்லை, நெல் கொள்முதலில் ஈரப்பதம் நிர்ணயிக்கப் படவில்லை" என்றெல்லாம் மத்திய அரசை மட்டுமே குற்றம் சாட்டும் திராவிட மாடல் அரசின் கையாலாகாத தனத்தையும் போக்கிரித் தனத்தையும் பொறுப்பற்ற அரசியலையும் எப்படித்தான் விமர்சிப்பது என்று புரியவில்லை!

உற்பத்தி இருக்கட்டும், உற்பத்தியான பொருளைக் கூட பாதுகாக்கத் தெரியவில்லை என்றால்? வெள்ள நேரத்தில் தண்ணீரைத் தான் சேமிக்கதெரியவில்லை, கடலுக்குஅனுப்புகிறோம் என்றால் விளைந்த நெற்களையுமா? இதற்குக் கூட மத்திய அரசு வர வேண்டும். அப்படியானால் ஆட்சியை மத்திய அரசிடம் கொடுத்துவிட்டு பேசாமல் வீட்டில் இருக்கலாமே திராவிடக் கண்மணிகள்!

நடிகர் விஜய், கரூர் கூட்டத்தில் இறந்தவர்கள் குடும்பத்துக்கு நேரில் சென்று ஆறுதல் சொல்லவில்லையாம், மாமல்லபுரம் வரவைத்து பார்க்கிறாராம், திமுகவினரும் திமுக சொம்பு ஊடகங்களும் என்னமாய் குதிக்கின்றன!

> நடிகர் விஜய், கரூர் கூட்டத்தில் இறந்தவர்கள் குடும்பத்துக்கு நேரில் சென்று ஆறுதல் சொல்லவில்லையாம், மாமல்லபுரம் வரவைத்து பார்க்கிறாராம் திமுகவினரும் திமுக சொம்பு ஊடகங்களும் என்னமாய் குதிக்கின்றன!

கொள்முதலுக்கு வைத்திருந்த நெல்மணிகள் எல்லாம் பயிர் முளைத்து பாழாகி இருக்கிறதே, கரூருக்கு ஓடிச் சென்ற முதல்வர் இதை பார்க்க ஓடிச் செல்லாமல் வீட்டுக்கு வரவழைத்துப் பார்க்கிறாரே, திமுகவினர் குதிக்க வேண்டாமா? சொம்பு ஊடகங்கள் கத்த வேண்டாமா? அமைதி.. அமைதி...அமைதி...

இங்கே 20 லட்சம் டன் நெல் மழை வெள்ளத்தால் பாழாகி இருக்கிறது. எவ்வளவு பெரிய உழைப்பு, எத்தனை விவசாயிகள், எத்தனை எத்தனை விவசாயக் கூலிகள் கடும்பாடுபட்டு உழைத்திருப்பார்கள்! அவர்களுக்குத் தான் எத்தனை எத்தனை கனவுகள் இருந்திருக்கும்?

வெள்ளத்தால் விளையும் பயிர் சேதம், காப்பீடு இருக்கிறது. வறட்சியால் விளைபொருள் உற்பத்தி இல்லை, காப்பீடு இருக்கிறது. ஆனால் கொள்முதல் மையங்களுக்கு கொண்டு சென்று அடுக்கி வைத்திருக்கும் நெல் மணிகள் பாழாய் போனால் காப்பீடு இல்லையே? என்ன காரணம் சொல்லி அவர்களுக்கு காப்பீடு வழங்கப் போகிறோம்? காப்பீடு இல்லை, இழப்பீடு என்றால், செயல்படாத அரசு நிர்வாகமும் ஆட்சியாளர்களும் தண்டிக்கப்பட வேண்டாமா? ஒவ்வொரு கொள்முதல் மையத்திலும் ஒரு நாளைக்கு 2000 சாக்குகள்



எண்ணப்பட வேண்டும் என்றால், இங்கோ 900 சாக்குகள் மட்டுமே எண்ணப்பட்டுள்ளது. அதாவது பாதிக்கும் குறைவாக எண்ணப்பட்டதால் வந்த பாதிப்பு இது!

அரசு என்பது வெற்று சாதி ஒழிப்பு, திராவிட வெறுமை கோஷங்கள், அர்த்தமில்லாத வாதங்கள், வெட்டி வீராப்புக்கள், பெரும் ஊழல்கள், அடுத்த தேர்தலுக்கான மாய்மாலங்கள் என நம்பும் அரசியல் வியாதிகளின் கண்களுக்கு விவசாயிகளின் இடர் தெரியப் போவதில்லை!

உணவு என்பது பூமித் தாயின் வரம் அதை வீணாக்குவது என்பது பெரும் பாவம். துரதிஷ்டவசமாக பழி பாவத்துக்கு அஞ்சாத அரசாக திராவிட மாடல் அரசு மாறி இருக்கிறது! இந்த ஆட்சியில் நாள்தோறும் நடக்கும் பாவங்களில் மேலும் ஒன்று என்று சிந்திக்கிறது!

கிராமங்கள் தான் நாட்டின் உயிர்மூச்சு, விவசாயிகள் தான் நாட்டின் முதுகெலும்பு என்று நீட்டி முழங்கும் அரசு நிர்வாகம் விவசாயப் பகுதிகளுக்கு கொடுத்த முக்கியத்துவத்தை விட நகர் புறத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து வந்ததும் இதற்கு மற்றொரு காரணம்.


15 செண்டிமீட்டர் மழை வந்தாலும் சென்னை தாங்கும், 21 செண்டி மீட்டர் மழை வந்தாலும்

> தொடர்ந்து 50 மீட்டர் குழியே இல்லாத சாலைகளை காண்பிப்பவருக்கு விருது அறிவிக்கலாம்!

சென்னை தாங்கும், எவ்வளவு பெரிய மழை வந்தாலும் சென்னை தாங்கும் என்று மாறி மாறி பேசிய அமைச்சர்கள் ஒருவர் கூட மழை வந்தால் விவசாய உற்பத்தி பொருள் எப்படி பாதுகாக்கப்படும் என்று பேசவில்லை. அந்தத் திசை நோக்கி அவர்களின் கண்கள் போகவே இல்லை.

மழை வெள்ள பாதிப்பிலிருந்து சென்னையை காக்க 21 ஐஏஎஸ் அதிகாரிகள், பகுதிக்குப் பகுதி அமைச்சர்கள். விவசாயிகளைக் காக்க? சரி, சென்னையாவது காப்பாற்றப்பட்டு விட்டதா? எங்கே போயிற்று அந்த நாலாயிரம் கோடி என்றால் திராவிட மாடல் மர்ம தேசத்தில் ஆட்சியாளர்களைத் தவிர யாருக்கும் தெரியாத ரகசியம் ஆகிவிட்டது அது.

90 சதவிகிதம் வேலை முடிந்து விட்டது, 95% வேலை முடிந்து விட்டது, 60% வேலை முடிந்து விட்டது என்று ஆளாளுக்கு பேட்டி கொடுத்த பிறகு நேருவானவர் சொல்கிறார் 45 சதவிகிதம் மட்டுமே முடிந்துள்ளது என்று. இது சென்ற ஆண்டு. பாக்கி 55 சதவிகிதம் கடந்த



ஓராண்டில் முடிந்திருக்கும் என்று எண்ணினால் நீங்கள் வடிகட்டிய, மழைநீரை வடிகட்டிய முட்டாள்! நல்லவேளை, 4000 கோடி சென்ற ஆண்டிற்கு இந்த ஆண்டிற்கு வரவில்லை என்று கூறவில்லை, அதுதான் ஆறுதல்! சென்னை நகர சாலைகளில் மட்டும் 2000 குழிகள். (Pot holes).

தொடர்ந்து 50 மீட்டர் குழியே இல்லாத சாலைகளை காண்பிப்பவருக்கு விருது அறிவிக்கலாம்! இப்போது அந்த 2000 குழிகளை உடனடியாக அடைக்கப் போகிறார்களாம்! அதாவது மழை பெய்து கொண்டிருக்கும் போதே! அப்போது தானே அதுவும் மழையில் கரையும்! ஃபார்முலா ரேசுக்கு சாலை அமைக்கலாமே தவிர, பாமர மக்களுக்கு அமைக்க முடியாது என்ற தெளிவான பிடிவாதம்.

விஜபி வாழும் இடங்களுக்கும், பாமரர்கள் வாழும் இடங்களுக்கும் அத்தனை வேறுபாடு! தைரியமான சில காட்சி ஊடகங்கள் மட்டுமே இதை படம் பிடித்து காட்டி இருக்கின்றன! முதல்வர் ஸ்டாலினுக்கு மாரி செல்வராஜின் படத்தை பார்க்க நேரம் இருக்கிறது! ஆனால் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளைப் பார்க்க நேரமில்லை. சின்னவருக்கும் போட்டோ ஹூட்டிற்கு தான் நேரம் இருக்கிறது! மக்கள் என்ன கேள்வி கேட்டு விடுவார்கள், பாக்கலாம்!

இதோ வந்துவிட்டது ‘'SIR“ வாங்க சார், வாங்க என்று மக்களின் கோபத்தை SIR இடம் மாற்றி விட்டால் போகிறது!

சிறுபான்மை மக்களின் ஓட்டுரிமையைப் பறிக்கும் ஜனநாயக விரோத SIR-ஐ எதிர்த்து புறப்பட்டால் மக்கள் வெள்ள சேதத்தை மறந்து விட மாட்டார்களா என்ன? திராவிட மாடல் என்றால் சும்மாவா?

# ஃபாக்ஸ்கான் முதலீடு - ஓடாத குறும்படம் - லாயக்கற்ற திரைக்கதை

-அருண்பிரபு

நம் தமிழ்நாட்டில் பல விஷயங்கள் திரைப்படம் போலவே பேசப்பட்டு ஓட்டிவிடப்படுகின்றன. குறிப்பாக திராவிட மாடல் திமுக சம்பந்தப்பட்ட விவகாரங்கள். சமீபத்திய உதாரணம் ஃபாக்ஸ்கான் நிறுவனம் ரூ 15000 கோடி முதலீடு செய்கிறது. ஒப்பந்தம் போட்டுவிட்டோம். 14000 பேருக்கு வேலைவாய்ப்பு என்று முதல்வர் சொன்னார். தைவான் நாட்டுக் கம்பெனியான ஃபாக்ஸ்கான் அதை மறுத்துவிட்டது. புதிதாக முதலீடு எதுவும் போடவில்லை முதலிலேயே போட்ட ஒப்பந்தம் தான் என்று சொல்லிவிட்டது. என்ன பிரச்சனை?

ஃபாக்ஸ்கான் நிறுவனத்தின் தலைமை அதிகாரி சென்னை வந்துள்ளார். மாநில முதல்வரைச் சந்தித்துப் பேசியிருக்கிறார். அப்போது ஏற்கனவே போட்ட ஒப்பந்தப்படி 13000 கோடி சொச்சம் முதலீடு கணக்குப்படி படிப்படியாக வந்து கொண்டிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார் அந்த அதிகாரி. உடனே ஃபாக்ஸ்கான் தமிழகத்தில் முதலீடு செய்கிறது. அதுவும் 15000 கோடியாக்கும் என்று ஒரு அறிக்கை. இந்த ஃபாக்ஸ்கான் ஐஃபோன் உதிரிபாகம் இணைப்புத் தொழிலை 2017லிருந்து தமிழகத்தில் செய்கிறது. இந்தக் கம்பெனியின் துணை நிறுவனமான யுஷான் டெக்னாலஜி என்ற நிறுவனம் கடந்த வருடம் அக்டோபரில் 13,180 கோடிக்கு பல்வேறு ஸ்மார்ட் ஃபோன்களின் உதிரிபாகம் ஒருங்கிணைக்கும் வேலைக்குத் தமிழகத்துடன் ஒப்பந்தம் போட்டுள்ளது. இந்தத் திட்டத்தின் படி 14000 பேருக்கு வேலை கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது.




இந்த ஆண்டு சீனாவில் இருந்து நகர்த்தி ஐஃபோன் ஒருங்கிணைப்புத் தொழிலில் 13,000 கோடிகள் போட்டு விரிவாக்கத் திட்டம் தீட்டியுள்ளது. இது ஏற்கனவே போட்ட திட்டத்தின் பகுதிதான். தேவைக்கேற்ப கூடக் குறைய பணம் போடுவோம் என்று நீண்டகால நோக்கில் தொடங்கப்பட்டது இந்தத் தொழில். தைவானுக்கு எப்போதும் சீனா என்றால் பயம். அதனால் பல்வேறு தொழில்களை வெவ்வேறு நாடுகளுக்கு நகர்த்தி வைக்கிறது. இதைப் புது முதலீடு பிடித்து விட்டோம் என்று சொல்லி ஐஃபோன் அல்லாத ஸ்மார்ட் ஃபோன் தொழிலில் 14000 பேருக்கான வேலைவாய்ப்பை இதோடு இணைத்து புதிய திரைக்கதையைத் தமிழக அரசு எழுதியது. ஆனால் என்னை வைத்துக் காமெடி கீமெடி பண்ணாதீங்க என்று ஃபாக்ஸ்கான் நிறுவனம் மறுத்துவிட்டது.

எந்தப் பத்திரிக்கையும் இதைச் சரிபார்த்து எழுதவில்லை. அப்படியே ஓட்டிவிட்டார்கள். ஏன்? 95% பத்திரிக்கை டிவிக்களில் உ.பி களே உள்ளனர். அந்த நிறுவனம் மறுத்தவுடன் அமைச்சர் டிஆர்பி ராஜா ஒரு கதை ஓட்டினார். அதாவது 15000 கோடி பணம் போடுவது ஒரு ஃபாக்ஸ்கான். அதை மறுத்தது வேறொரு ஃபாக்ஸ்கான். அதாகப்பட்டது ஒன்று ஐயம்பேட்டை அறிவுடை நம்பி கலியப்பெருமாள் சந்திரன், இன்னொன்று ஐயம்பேட்டை அறிவுடை நம்பி கலியப்பெருமாள் இந்திரன்.

அப்படியேதும் இல்லை ஒரே ஃபாக்ஸ்கான் தான் என்று பலரும் சமூகவலைத் தளங்களில் பேச, அதெல்லாம் முதலீடு வரும் பாருங்க என்று முடித்துக் கொண்டார் அமைச்சர். கோபால் பல்பொடி விற்கும் நாடுகள் என்று விளம்பரத்தில் சொல்வது போல பல நாடுகளுக்குப் போனார் முதலீடு ஈர்த்தார் என்று முதல்வர் பற்றிச் சொல்கிறார்கள். ஆனால் பெரிதாக எந்தப் புதிய முதலீடும் வரவில்லை என்றும் விவரமறிந்தவர்கள் சொல்கிறார்கள். ஏன்? போன இடங்களில் பழைய ஒப்பந்தப்படி விரிவாக்கப்பணிக்கான முதலீட்டைப் பற்றிப் பேசிவிட்டு அவர்கள் முதலீடு செய்கிறார்கள் என்று சொல்லிப் புது முதலீடு போலக் காட்சிப்படுத்துகிறது அரசு என்கிறார்கள் நிபுணர்கள். இதைப்பற்றியெல்லாம் அக்கறை இல்லாத சாமானியத் தமிழனும், ஏதுக்கடா வம்பு என்று விவரமறிந்த தமிழர்களும் இருப்பதால் திரைக்கதை சொதப்பினாலும் மீண்டும் மீண்டும் கதையை ஓட்ட முடிகிறது. இப்படியே போனால், தமிழகத்தின் எதிர்காலம் என்னவாகும் என்ற கேள்வி மக்களிடையே எழுந்துள்ளது.

# கோயிலை உத்திரகிரியை மண்டபமாக்கிய சபரீசன் குடும்பம்

-ப்ரியா வெங்கட்

தமிழகத்தில் திராவிட மாடல் ஆட்சி வந்த பின் பொது இடங்கள், தெருக்கள், அரசு திட்டங்கள் என எதையெடுத்தாலும் அதை தங்கள் சொத்துப் போல் பாவித்து கருணாநிதி, ஸ்டாலின் பெயரைச் சூட்டி மகிழ்ந்து வருகிறது. இதை யாரும் பெரியளவில் தட்டிக்கேட்காத நிலையில் இன்று ஆலயத்தையும் தங்கள் குடும்ப சொத்தாக நினைக்கத் தொடங்கி விட்டனர். அதன் விளைவாக சபரீசனின் தந்தை 30ம் நாள் துக்க காரிய நிகழ்வை கோவில் வளாகத்தில் நடத்த விமர்சையாக ஏற்பாடு செய்தனர் திமுகவினர்.

திருநெல்வேலி மாவட்டம் அரியநாயகிபுரத்தில் இருக்கும் அரியநாயகி அம்மன் சமேத கைலாசநாதர் கோவில் வளாகத்தில் 15.10.2025 அன்று சபரீசனின் தந்தை அதாவது முதல்வரின் சம்பந்தியின் நினைவு நாள் காரியங்கள் நடைபெற இருக்கிறது என்று விளம்பரங்கள் வெளி வந்ததோடு மட்டுமல்லாமல், பிரதான வாயிலை மறைத்து பலிபீடம் அருகே ஏர்கூலருடன் கூடிய மேடை பந்தல் போன்றவையும் ஏற்பாடு செய்யப்பட்டன. இந்த விஷயம் வெளிவந்தவுடன் ஹிந்து முன்னணியும், ஸ்ரீடிவியும் தங்கள் கடுமையான எதிர்ப்பை பதிவு செய்தது. இதன் விளைவாக இந்த நிகழ்வு தடுத்து நிறுத்தப்பட்டு அன்னதானம் மட்டும் கோவிலில் வைத்து வழங்கப்பட்டு இருக்கிறது.

கோயில் இடத்தை நினைவு நாள் காரியத்திற்குக் கொடுக்கலாமா என்று செயல் அலுவலரிடம் கேட்டால், ஏழாம் நாள் திருநாள் மண்டகப்படி உபயதாரர் இறந்தவர் குடும்பத்தினராச்சே என்கிறார்! கோயிலின் உபயதாரர் என்றால் எந்த நிகழ்வையும் கோவிலில் நடத்தலாமா? இறந்தவர் குடும்பத்தினர் அவர் வீடு தானே என்று பூத உடலை நடு வீட்டிலா எரியூட்டினார்கள்? அதற்கு சுடுகாட்டிற்கு போனவர்கள், இந்த நிகழ்விற்கு கோயிலிற்கு வரக்காரணமென்ன?

கோயிலின் புனிதத்தை அழிக்கும் செயலைத் தடுத்த செயல் ஹிந்துக்களுக்கு கிடைத்த வெற்றியாக இருந்தாலும், எந்த அடிப்படையில் ஹிந்து சமய அறநிலையத்துறை இதற்கு அனுமதி கொடுத்தது?

இறைவன் உறைந்திருக்கும் இடம், அதாவது இறைவன் வாழும் இடம் என்பதால் தானே கோயில். இது சுப காரியங்களுக்கான இடம். ஊரில் மரணம் ஏற்பட்டால் பூத உடல் எடுத்துச் செல்லப்பட்டபின்னரே நடை திறந்து சுத்தி செய்தபின்னர் வழிபாடு தொடங்கும். இந்த நடைமுறைகள் இருக்கும் ஆலயத்தில் நினைவு நாள் காரியங்கள் நடத்தலாமா? நினைவு நாள் காரியம் நடத்த கோயில் என்ன உத்திரக்கிரியை மண்டபமா அல்லது சமுதாயக் கூடமா? விளக்கம் அளிப்பதையே முழுநேரத் தொழிலாகக் கொண்ட அமைச்சர் சேகர்பாபு இதற்கு ஏதாவது புது ஆகமம் எழுதுவாரோ?! இதுதான் ஆன்மிக ஆட்சியின் லட்சணமா?

இங்க ஒரு வேடிக்கை என்னவென்றால் இதற்கு பக்கத்து மாவட்டமான தென்காசியில் திருவாசகம் முற்றோதலை கோவில் வளாகத்தில் நடத்தவதற்கு அறநிலையத்துறை அனுமதி மறுக்கிறது, அதற்கு கட்டணம் கட்டினால் தான் அனுமதிப்போம் என்று கூறி பக்தர்களை விரட்டுகிறது. இறைவனுக்கு பிடித்தமான நிகழ்வுகளை நடத்தத் தடை ஆனால் ஆளுங்கட்சி குடும்பம் என்றால் கோவிலின் புனிதத்தைக் கெடுக்கும் நிகழ்வுக்கு அனுமதி!

அதிகார துஷ்பிரயோகம், ஆலயத்தின் மாண்பை அழித்தல், இறை சேவையை முடக்குவது என்பதைக் கங்கணம் கட்டிக்கொண்டு நடைமுறைப்படுத்தும் அறமற்றதுறை ஆலயத்தைவிட்டு வெளியேற வேண்டும். இறைவன் சொத்து இறைபணிக்கே என்ற நிலை உருவாக வேண்டும்.

அரியநாயகியம்மன் கோயிலில் நடந்த அபசாரத்திற்குக் காரணமானவர்களையும் அதற்கு உடந்தையாக செயல்பட்ட அறநிலையத்துறை அதிகாரிகள் மீது துறை ரீதியான நடவடிக்கையுடன் மத உணர்வைப் புண்படுத்தியமை, வழிபாட்டிற்கு இடையூறு போன்ற பிரிவுகளில் வழக்குப் பதிவு செய்யப்பட வேண்டும்.



# முறைச்சா அடிப்போம்! திருமாவளவனின் வன்முறை அரசியல் -

M. ஸ்ரீராம் B.com.,L.L.B.,
உயர்நீதிமன்ற வழக்கறிஞர்

உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி B.R.கவாய் அவர்கள் மீது செருப்பு வீசப்பட்ட விவகாரத்தில் தாக்கப்பட்டவர் மீது SC/ST வன்கொடுமை சட்டம் போட வேண்டும் என தாக்குதலுக்கு எதிராகப் போராடிவிட்டுச் செல்லும் வழியில் பார் கவுன்சில் வாசலிலேயே ராஜீவ் காந்தி என்ற வழக்கறிஞர் வாகனம் மீது விபத்தை ஏற்படுத்தி விட்டு தாக்குதலும் நடத்தினர் விசிகவின் குண்டர்கள்.

ஒரு தலைமைப் பண்போ, அடிப்படை மனிதாபிமானம் கொஞ்சமோ இல்லாமல் திருமாவளவன் அவர்கள் காரில் அமர்ந்துக் கொண்டு வேடிக்கைப் பார்த்தார். அதேசமயம் என்னை ஏன் அடித்தீர்கள் எனக் கேட்ட வழக்கறிஞர் மீது வன்முறை கட்டவிழ்த்து விடப்பட்டது. தன்னுடைய உயிரைப் பாதுகாத்துக் கொள்ள பார் கவுன்சில் தலைவர் அமல்ராஜ் அவர்களின் அறைக்குச் சென்ற போதும் கூட அவரை விடாமல் துரத்திய விசிகவின் குண்டர்கள் ஜாதிப் பெயரை கேட்டுத் தாக்குதல் நடத்தியதாக சொல்லப்படுகிறது.

தமிழ்நாட்டில் இருக்கும் ஒட்டுமொத்த வழக்கறிஞர்களின் நம்பிக்கையாக விளங்கும் பார் கவுன்சில் உள்ளேயே நடந்த இந்த தாக்குதல் சமுதாயத்தில் ஒருவித பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. இதை வைத்து மேலும் பிரச்சனைகளை தூண்டும் விதமாக திருமாவளவனை முறைத்ததற்காக அடித்தார்கள், ஜாதிக்காக அல்ல என்று பொதுக் கூட்டம் போட்டு பேசியும், அடி வாங்கிய வழக்கறிஞரின் மீது பி சி ஆர் வழக்கு போட வேண்டும் என்றும் சொல்லி விசிகவினர் போராட்டத்தில் குதித்தனர். இதற்கு பாதிக்கப்பட்ட வழக்கறிஞர் பாதுகாப்பு வேண்டி வழக்கு ஒன்றை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார்.

இதற்கிடையில், வழக்கறிஞர் மீதான தாக்குதலை தடுக்காமல் காரில் இருந்து ரசித்த விசிக தலைவர் திருமாவளவனுக்கு பாதுகாப்பை அதிகப்படுத்த வேண்டும் என்று காவல்துறையிடம் விசிக சட்டமன்ற உறுப்பினர்கள் கோரிக்கை வைத்து சினிமாத்தன காமெடியை அரங்கேற்றினர். சென்னை நீதிமன்ற வளாகம் மற்றும் சில மாவட்ட நீதிமன்ற வளாகங்களில் வழக்கறிஞர் தாக்கப்பட்ட சம்பவத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து போராட்டத்தில் குதித்தனர் வழக்கறிஞர்கள். இதற்கு எதிர்வினையாக விசிகவின் ஆதரவு வழக்கறிஞர்கள் நீதிமன்ற வளாகத்தில் போராட்டம் நடத்தினர். இதற்கெல்லாம் ஒருபடி மேலே போய் வழக்கறிஞர் ராஜீவ் காந்தி மீது விசிகவினர் நடத்திய தாக்குதல் வீடியோவை பகிர்ந்த பாஜக மாநில முன்னாள் தலைவர் அண்ணாமலை வெளியே நடமாட முடியாது,

யாரும் நிம்மதியாக தீபாவளி கொண்டாட முடியாது என்று வன்முறையைத் தூண்டும் விதமாக மிரட்டல் வீடியோக்களை வெளியிட்டு சமூக வலைதளங்களில் வைரலாக்கினர் சிறுத்தை குட்டிகள். இதையெல்லாம் உன்னிப்பாக கவனித்த நீதிமன்றம் பல காட்டமான கருத்துக்களைக் கூறியது.



திருமாவளவன் சமுதாயத்தில் ஜாதிய வன்முறையை தூண்டுவதாகத் தெரிவித்துள்ள நீதிமன்றத்தின் கருத்து கவனிக்கத்தக்கது. குற்றம் செய்தவர்கள், பாதிக்கப்பட்டவர் என்று இரண்டும் பேர் மீதும் வழக்கு பதிவு செய்வீர்களா என்றெல்லாம் கேள்வியை எழுப்பிய அதே வேளையில் இந்த வழக்கின் விசாரணையை உடனடியாக முடிக்க வேண்டும் எனவும் காவல்துறைக்கு உத்தரவிட்டுள்ளது. பொறுப்பற்ற தலைவர் என்று விஜய்யை வசைபாடிய இவர்கள் வன்முறையைத் தூண்டும் விதமாக செயல்படும் தன் கட்சியினரை அடக்காமல் பொறுப்பற்ற வகையில் திருமா செயல்படுவதை ஏன் யாரும் கண்டிக்கவில்லை. சட்டம் ஒழுங்கை தன் கையில் வைத்திருக்கும் ஸ்டாலினும் ஏன் இது குறித்து வாய் திறக்கவில்லை? எங்களிடம் அதிகாரம் உள்ளது, நாங்கள் ஆளுங்கட்சி கூட்டணியில் இருக்கிறோம் ஆதலால் நாங்கள் வைத்தது தான் சட்டம் காவல்துறையால் எங்களை எதுவும் செய்ய முடியாது என்கிற அதிகார துஷ்பிரயோகத்தையே இது காட்டியுள்ளது. அதற்கு காரணம் காவல்துறையின் பாரபட்சமான போக்கு.

கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட்டால் ஒழிய இந்த அராஜகத்திற்கு தீர்வு கிடைக்கப் போவதில்லை. இந்த வழக்கை தீவிரமாக விசாரித்து உடனடியாக வழங்கப்படும் தீர்ப்பும், அதன் பின் எடுக்கப்படும் கடுமையான நடவடிக்கை மட்டும் தான் பொது மக்களின் பாதுகாப்பையும் அவர்களுக்கு சட்டத்தின் மீதான மதிப்பு உயரவும் வழியாக இருக்கும்.

## விசிகவின் ஹிந்து வெறுப்பும் அவதூறுகளும்..

பின்தங்கிய கிராமங்களில் திருக்கோவில்கள் கட்ட உதவுகிறார் Zoho நிறுவனர் ஸ்ரீதர் வேம்பு. இது திருமாவளவனுக்கு எதிரான நேரடி போர் என்று பொதுக்கூட்டத்தில் பேசினார் விசிகவின் பால அறவாழி. பாஜக, ஆர்.எஸ்.எஸ் காரர்களையும், திரு ஸ்ரீதர் வேம்பு அவர்களையும் நாய் என்று அவதூறாக பேசினார். காவல்துறை வழக்கு பதியவில்லை.

ஹிந்து மதம் வழிபாட்டு உரிமையை மறுக்கிறது என்று பேசும் விடுதலை சிறுத்தைகள் கோவிலை ஏன் எதிர்க்கிறார்கள்? சர்சுகளும், ஜெபவீடுகளும், மசூதிகளும் திருமாவளவனுக்கு எதிரான போரில்லை என்றால் திருமாவளவன் கிறிஸ்தவ முஸ்லீம்களின் ஏஜெண்ட் என்பதை தைரியமாக அறிவிப்பார்களா?

சரக்கு இருக்கு மிடுக்கு இருக்கு பெண்களை தூக்கி வா. நாங்கள் ரவுடிகள் என்றெல்லாம் பேசும் கூட்டத்திற்குப் பண்பாட்டை பறை சாற்றும் கோவில்கள் எட்டிக்காயாகத் தானே இருக்கும். கல்வி கொடுத்து ஆன்மீகம் போதித்த




சுவாமி சகஜானந்தரையும், ஸ்ரீநாராயண குருவையும் பின்பற்றி இருந்தால் திரு ஸ்ரீதர் வேம்பு அவர்களின் அறச்செயலை இவர்களால் பாராட்ட முடியும். ஏற்றுக்கொள்ள முடியும்.

தமிழகத்தில் பகிரங்கமாக காவல்துறையினருக்கு எச்சரிக்கை விடுவதையும், வீதியில் ரவுடித்தனம் செய்வதையும் விசிக கட்சியினர் சகஜமாக்கி விட்டனர். இந்த நிலை நீடித்தால் தமிழகம் பல இன்னல்களை சந்திக்க நேரிடும் என்பதில் ஐயமில்லை


# அரசியல் உலா

- கரிகாலன்

தேர்தல் நெருங்கும் காரணத்தால் தோழமைச் சுட்டுதல் அதிகரிப்பது திமுகவுக்கு மற்றுமொரு தொடர் சறுக்கல். அதன் ஆரம்ப சறுக்கல்கள் அத்தனையும் இப்போது நீதிமன்றத்தில் தான் நடக்கின்றன.

கரூர் கூட்ட நெரிசல், தொடர் சம்பவங்கள் குறித்து சிபிஐ விசாரணைக்கு உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. நீதிமன்றம் சலிக்காமல் ஒவ்வொரு விஷயத்திலும் நியாயத் தீர்ப்பை வழங்குகிறது. திமுகவும் சளைக்காமல் தனது முறைகேடுகளைத் தொடர்ந்து வருகிறது.

திமுகவின் தகிடுதத்தங்கள் ஒவ்வொன்றாக வெளி வருகின்றன. கோவில் நிலங்களைத் தொடர்ந்து, சதுப்பு நிலங்களையும் முதல்வரின் இரும்பு கரம் கபளீகரம் செய்து வருவது இப்பொழுது அம்பலமாகி இருக்கிறது.



கரூர் கூட்ட நெரிசலில் உயிரிழந்த 41 பேரின் குடும்பங்களைச் சந்திக்க கரூர் செல்வதற்கு காவல்துறை அனுமதி மறுக்கும் என்ற சூழ்நிலையில் 33 பேரின் குடும்பத்தினரை மகாபலிபுரத்திற்கு நேரில் வரவழைத்து, சந்தித்து உருக்கமாகப் பேசினார் தமிழக வெற்றி கழக தலைவர் விஜய். அதைத் தவிர வெளியில் உலா வரவோ, பேட்டி தரவோ இல்லை. பொதுவெளியில் அவரது மௌனம் தொடர்கிறது.

### பெட்டிச் செய்தி 1

எதுவெல்லாம் விஜய்க்கு எதிராகத் திரும்பும் என்று நினைத்தார்களோ அனைத்துமே அவருக்கு சாதகமாக அமைந்து விட்டது. உறவுகளை இழந்த குடும்பத்தினர் கூட அவர் மீது கோபம் கொள்ளவில்லை. மகாபலிபுரத்தில் அவர்கள் மத்தியில் பேசிய விஜய் கட்சியை மீண்டும் மக்கள் இயக்கமாக மாற்றி விடலாமா என்று ஆலோசனை கேட்டிருக்கிறார். இனி விஜய் எதைச் செய்தாலும் அவரது ரசிகர்கள் மத்தியில் அனுதாபமும் ஆதரவும் கூடுமே தவிர குறையப்போவதில்லை.

ஆனால் “திமுக ஆட்சியை அகற்ற வேண்டும் என்றால் அதற்கு பலமான கூட்டணி வேண்டும்” என்பதை உணர்ந்துள்ள தவெக தொண்டர்களின் மனநிலை இப்பொழுது வெளிப்படையாகத் தெரியத் தொடங்கியுள்ளது. எடப்பாடியாரின் எழுச்சி மிகு பயணத்தில் அவர்கள் ஆங்காங்கே தவெக கொடிகளை உயர்த்திப் பிடிக்க, அதுவே பேசு பொருளானது.

ஒன்றிரண்டு ஊர்களில் அப்படிக் கொடி பிடித்த தவெக தொண்டர்களைப் பார்த்து உங்கள் கட்சித் தலைமையின் ஒப்புதலோடு இங்கே வாருங்கள் என்று அறிவுறுத்தினார் எடப்பாடி பழனிச்சாமி.

திமுகவும், அதன் கூட்டணி கட்சிகளும் அந்நிகழ்வைக் கிண்டலடித்தாலும்

கூட அவர்களுக்கு உள்ளூர உதறல் எடுத்து விட்டது. தவெக கூட்டணிக்காக பாஜகவை கழட்டி விடுவது நம்பிக்கை துரோகம் என்று அதிமுகவைப் பார்த்து ஒப்பாரி வைக்கின்றன சில அரசியல் ஓநாய்கள்.

தவெக அதிமுக உடன் சேர்ந்தால் அந்தக் கூட்டணி தோற்று விடும், விஜய்க்கு வரவேண்டிய சிறுபான்மை வாக்குகள் திமுக பக்கம் திரும்பி விடும் என்று உளவுத்துறை மூலம் அறிக்கை எழுதி வாங்குகிறது ஆளுங் கட்சி. அவர்கள் தரப்பிலிருந்து அதிகமாக வதந்திகளே உலா வருகின்றன.

ஆனால் உண்மையில் சில மாதங்களுக்கு முன்பாகவே விரைவில் கூட்டணி குறித்து விஜய் அறிவிப்பார் என்று தவெக தொண்டர்கள் எதிர்பார்க்கத் தொடங்கினர். கரூர் துயர சம்பவம் அந்த நிகழ்வை இன்னும் விரைவுபடுத்தி இருக்கிறது, எதிர்பார்ப்புக்கு வலு சேர்த்து இருக்கிறது என்று சொல்லலாம்.



தவெக கூட்டணி குறித்து சமீபத்தில் பேசிய ஊடகச் சாணக்கியர் சமூக ஊடகங்களில் பெரிதும் விமர்சிக்கப்பட்டார். “திமுகவை வீழ்த்துவதே ஒற்றை இலக்கு“ என்ற முடிவோடு அரசியல் கட்சிகள் தேர்தல் (குறுகிய கால) சமரசத்திற்கு தயாரானால் கூட சில தொண்டர்கள் அவ்வளவு எளிதில் அதை ஏற்கத் தயார் இல்லை என உணர முடிகிறது. நமது கட்டுரையை படித்த பிறகாவது அவர்களுக்கும் புரிதல் வரும் என நம்புவோம்.

அன்புமணி - மருத்துவர் ராமதாஸ் குடும்ப விவகாரம் கன்னித்தீவு கதை போல நீண்டு கொண்டே போகிறது. கட்சியை(?) யார் கட்டுக்குள் வைப்பது என்பதில் தான் போட்டி. மற்றபடி இருவருமே தேசிய ஜனநாயகக் கூட்டணியில் இணையவே விரும்புவதாகத் தெரிகிறது.



தேர்தலுக்கு ஆறுமாத கால அவகாசம் இருந்தாலும் தீபாவளிக்கு முன்பாகவே தமிழக உலாவைத் தொடங்கி இருக்கிறார் தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன். செல்லும் இடமெல்லாம் சிறப்பான வரவேற்பு. திரளான கூட்டம் வந்தபோதும் முந்தைய யாத்திரையோடு ஒப்பீடு வராமல் இல்லை. அணுகக் கூடியத் தலைவராக இருப்பது தான் அணுக்கத் தொண்டர்களை ஊக்கப்படுத்தும்



என்பதை அவர் உணர்ந்து பயணிக்கிறார்.

தொகுதி அளவில் சுணக்கமாக இருக்கக்கூடிய கூட்டணிக் கட்சியினருக்குள் இணக்கம் ஏற்பட வேண்டும் என்பதில் முனைப்பு காட்டுகிறார். கூட்டணி மலருமா, மலராதா? வழக்கம் போல காலம் தான் பதில் சொல்ல வேண்டும்.

## பெட்டிச் செய்தி : 2

இருப்பதை இழந்து விடக்கூடாது என்று திமுக தன் கூட்டணிக் கட்சிகளைத் தாங்கிக் கொண்டிருக்க, தவெக கூட்டு சேர்ந்தால் (இல்லை அதைச் சொல்லி மிரட்டினால்) தங்களுக்கும் வாழ்வு வரும் என்று காங்கிரஸ் ஏங்கிக் கொண்டிருக்க, தங்கள் பக்கம் மேலும் பல கட்சிகள் சேர்வார்கள் என்ற நம்பிக்கையோடு அதிமுக காத்துக் கொண்டிருக்க, இது எது பற்றியும் கவலையின்றி கூட்டணி குறித்த முடிவுகளை அதிமுகவிடம் குத்தகைக்கு விட்டுவிட்ட தமிழக பாஜக தீவிரமாக இயங்கிக் கொண்டிருக்கிறது.



# திருவாசகம் பாட கட்டணமாக உ.பி. வசூலித்த ரூ.200..! பரபரப்பைக் கிளப்பிய தென்காசி! – செங்கோட்டை ஸ்ரீராம்

தென்காசி காசி விஸ்வநாதர் திருக்கோவிலில் திருவாசகம் பாட கட்டணமாக உத்தரவு பிறப்பிக்கப்பட்டு ரூ.200 வசூலித்த செயல் அலுவலர் பொன்னி, சிவனடியார்களை அவதூறாகப் பேசியும் அவர்களை வெளியேற்றியும் அராஜகத்தில் ஈடுபட்டதால், செயல் அலுவலர் மீது நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி அக்.26 ஞாயிறு அன்று, தென்காசியில் சிவனடியார் பெருமக்களோடு இந்து முன்னணி திருவாசகம் பாடி அறப்போராட்டத்தில் ஈடுபடும் என்று அந்த அமைப்பு அறிவித்தது.

இதற்காக, அக்.26 ஞாயிறு காலை 10 மணிக்கு தென்காசி புதிய பேருந்து நிலையம் முன்பு ஆர்ப்பாட்டம் நடத்த அனுமதி கோரப்பட்டது. ஆனால், வழக்கம் போல், தென்காசி மாவட்ட காவல்துறை அறப்போராட்டம் நடத்துவதற்குக் கூட அனுமதி மறுத்தது. இது அப்பாவி மக்களின் உரிமைகளை, கருத்துச் சுதந்திரத்தை நசுக்கும் செயல் என சிவனடியார்கள் கூறினர். இதை அடுத்து, தென்காசி புதிய பேருந்து நிலையம் முன்பு கூடிய நூற்றுக்கணக்கான இந்துமுன்னணி நிர்வாகிகள் மற்றும் சிவனடியார்கள் அங்கிருந்து புறப்பட்டு இந்து முன்னணி அமைப்பின் மாநில துணைத்தலைவர் வி.பி.ஜெயக்குமார் தலைமையில் தென்காசி காசி விஸ்வநாதர் ஆலயம் நோக்கிச் சென்றார்கள். அவர்களுடன் இந்த அமைப்பின் மாநிலச் செயலாளர் கா.குற்றாலநாதன், சிவனடியார் திருக்கூட்ட தென்காசி மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கயிலை கிருஷ்ணன் உள்ளிட்ட சிலரும் சென்றார்கள். கோயிலை அடைந்து, “சிவாய நம” என நாமாவளி பாடி வலம் வந்து, பலீபீடம் அருகில் அமர்ந்து திருவாசகம் பாடினார்கள்.

நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்துகொள்ள, சுமார் ஒன்றரை மணி நேரம் நடைபெற்ற இந்த அறப்போராட்டத்தின் போது, திருக்கோயில் நிர்வாகத்தினர் வந்து தடுக்கவில்லை. ஆனால் இதற்கு முந்தைய வாரம் சிவனடியார்களை அவதூறாகப் பேசி வெளியேற்றியது திருக்கோவில் நிர்வாகம். காரணம், பல ஆண்டுகளாக நடைபெற்று வரும் வழக்கத்தை அனுசரித்து திருக்கோயிலில் திருவாசகம் பாடுவோம் என்றும், தடுத்தால் போராட்டம் நடத்துவோம் என்றும், சிவனடியார்களுடன் இந்து முன்னணி உறுதுணையாக நிற்கும் என்றும் குறிப்பிட்டிருந்ததால்! இதனை வி.பி. ஜெயக்குமார் தன் பேச்சில் குறிப்பிட்டார்.

குற்றாலநாதன் பேசிய போது, “தமிழக இந்துக்கள் சத்தி நாயனாராக மாற வேண்டிய கால கட்டத்தில் இருக்கிறோம். சிவபெருமானையும் சிவனடியார்களையும் இழித்தும் பழித்தும்

பேசியவர்களின் நாக்கை அரிந்தவர். அத்தகைய தீவிர பக்தியாளர்கள் அடியார்கள் வாழ்ந்த மண்ணில் நாம் கற்றுக் கொள்ள வேண்டியது நிறைய உள்ளது.” என்றார்.

இந்தப் பிரச்னையின் பின்னணி இதுதான். அக்.17ம் தேதி சமூகத் தளங்களில் ஒரு வீடியோ வைரலானது. அதில், தென்காசி காசி விஸ்வநாதர் கோயிலில் திருவாசகம் பாட அனுமதிக் கடிதம் கொடுத்திருந்தும் கோயில் செயல் அலுவலர் பொன்னி, தங்களை அவதூறாகப் பேசியும் அவமதித்தும் கொட்டும் மழையில் வெளியே துரத்தி விட்டதாக சிவனடியார் பெண்மணிகள் குற்றம் சாட்டியிருந்தனர்.


இது குறித்த தகவலும் வேகமாகப் பரவியது. சமூக வலைத்தளங்களில் இதைக் குறிப்பிட்டு, தென்காசி காசி விஸ்வநாதர் கோயிலில் திருவாசக முற்றோதல் மேற்கொள்வதைத் தடுத்து, சிவனடியார் பெருமக்களை வலுக்கட்டாயமாக வெளியேற்றியதற்கு அறநிலையத்துறை பதில் சொல்ல வேண்டும், குறிப்பாக வெளியில் கொட்டும் மழையில் அவர்களை சிறிது நேரம் கூட ஒதுங்கி இருக்கவும் விடாமல் துரத்தி விட்டிருக்கிறார்கள் இது கண்டிக்கத் தக்கது

> தமிழக
> இந்துக்கள் சத்தி நாயனாராக மாற
> வேண்டிய கால கட்டத்தில் இருக்கிறோம்.
> சிவபெருமானையும் சிவனடியார்களையும்
> இழித்தும் பழித்தும் பேசியவர்களின்
> நாக்கை அரிந்தவர்.

என்றும் கருத்துகள் பரவின.

திருவாசகம் முற்றோதல் என்பது காலகாலமாக நடந்து வருவது. இதற்கு ஏன் திடீரென கோயில் செயல் அலுவலர் தடை போட வேண்டும் என்று விசாரித்த போது தெரிய வந்தது, திருவாசகம் முற்றோதலுக்கு கோயில் அலுவலகத்தில் அனுமதி பெற்று, ரூ.200க்கு கட்டணம் செலுத்த வேண்டும் என்று ஒரு புதிய நடைமுறையைக் கொண்டு வந்ததாகவும், அதற்கு பக்தர்கள் மற்றும் சிவனடியார்கள் மத்தியில் எதிர்ப்பு எழுந்ததாகவும் கூறப்படுகிறது.

திருவாசகம் முற்றோதல் என்பதை அறநிலையத்துறையே ஊக்குவிக்க வேண்டும். ஆனால் மேற்கொள்ள வரும் அடியார்களைத் தடுத்து அவர்களிடம் கட்டணம் வசூலிப்பது கண்


Arulmigu Kasiviswanathaswamy Temple, Tenkasi [TM037880]
Tenkasi Town, Keelamuthaveethi, Tenkasi - 627811

Fasli Year : 1435

Donation Income
Original

| | | | |
|---|---|---|---|
| Receipt No. | : R3788025091200006840 | Service Date | : 12/09/2025 |
| Mobile Number | : 9443582575 | Date | : 12/09/2025 02:39:37 PM |
| Name/Address | : KAILAI PUNITHAR M KRISHNAN - TENKASI, Tenkasi - Tamil Nadu - India. | | |
| Remarks | : 12/09/2025 திருவாசகம் முற்றோதுதல் கட்டணம் | | |
| Payment Type | : Cash | | |
| Amount (₹) | : Rs.200.00 (Rupees Two Hundred Only) | | |

Remitter　Cashier　Manager　E.O Grade - I

டிக்கத்தக்கது என்று பக்தர்கள் எதிர்ப்பு தெரிவித்தனர். இந்நிலையில் இந்தப் பிரச்னை அறங்காவலர் குழுத் தலைவரிடம் சென்றபோது, நான் ரூ.200 கட்டி விடுகிறேன், நீங்கள் சென்று பாடுங்கள் என்று கூறினாராம். உண்மையில் இது ரூ.200ல் வந்து நிற்கவில்லை, மாறாக அடிப்படை உரிமைக்கு கட்டணம் வசூலிக்கும் அறநிலையத் துறையின் கிழக்கிந்தியக் கம்பெனி போன்ற வரிவசூல் மனப்பான்மையில் வந்து நிற்கிறது என்றார்கள் பக்தர்கள். இந்த ஒரு கோயிலில் இவர் கொடுப்பார், ஆனால் சுற்றுப் பகுதியில் உள்ள இலஞ்சி, குற்றாலம், செங்கோட்டை உள்ளிட்ட மற்ற எல்லா கோயில்களிலும் கட்டணம் இன்றியே திருவாசகம் படிக்கப்படுகிறது என்பதை பக்தர்கள் குறிப்பிடுகிறார்கள். மேலும் இதைப் பார்த்து விட்டு, இப்படியும் வசூல்வேட்டை நடத்தலாம் என்று அனைத்து கோயில்களிலும் கிளம்பிவிட வாய்ப்பு உள்ளதாகவும் குற்றம்சாட்டுகிறார்கள்.

இத்தனைக்கும் திருவாசகம் முற்றோதல் என்பது, தரிசனத்துக்கு வரும் பக்தர்களுக்கு எந்த வித இடையூறுமின்றி, நடமாட்டம் இல்லாத சஹஸ்ரலிங்க சந்நிதி ஒட்டிய மண்டபத்தில் வைத்து நடத்துகிறார்கள். மேலும் பகல் வேளைகளில் ஆலய ஆகம பூஜைகளுக்கு இடையூறின்றி தனியாக நடத்தப்படுகிறது. கோயில் மண்டபங்கள் பிராகாரங்களில் அமைக்கப்பட்டதே இது போன்ற அன்பர்களின் நிகழ்ச்சிகளுக்காகத்தான். ஆனால் அவற்றை அறநிலையத்துறை அதிகாரிகள் பல இடங்களில் தடுத்து தங்களுக்கான அலுவலகம் அமைத்து அல்லது வேறு வணிக நோக்கங்களில் கபளீகரம்



> நம் கோயிலில் நம் தெய்வத்தை வழிபட நாம் அனுமதி பெற வேண்டும் என்பதே கேவலம், அறநிலையத்துறை என்பது கணக்கு வழக்கு பார்க்க வந்த நிர்வாக அமைப்புதான். அதற்கு வழிபாட்டில் முடிவு செய்யும் அதிகாரம் கொடுத்தது யார்?

செய்துவிடுகிறார்கள்.

தென்காசியில் பிரச்னை பெரிதானதற்கு முக்கியக் காரணம், ரூ.200 கட்டண வசூல். என்னவோ தெரியவில்லை திமுக., ஆட்சியில் ரூ.200 என்பது எப்போதுமே பிரச்னைக்கு உரியதாகிவிட்டது. இவ்வாறு கட்டண வசூல் நடத்தப்படுவதாக சிலர் வாட்ஸ்அப்பில் பதிவு செய்து பரப்ப, அது செயல் அலுவலரின் கோபத்தைக் கிளறிவிட்டதாம்! நாங்கள் வசூல் செய்வோம் அதை எப்படி வெளியில் சொல்வாய் என்ற ரீதியில், இந்தக் குழுவினர் மீது பாய்ந்திருக்கிறார் கோயில் ஈ.ஓ., பொன்னி. அதன் வெளிப்பாடே அதற்கு அடுத்த வாரம் இந்த அனுமதி மறுப்பு, விரட்டி விடுதல் எல்லாம்!

“திருவாசக முற்றோதல் நிகழ்ச்சி நடத்தப் போவதாக செயல் அலுவலரின் அலுவலகத்தில் கடிதம் கொடுத்தோம். அலுவலகத்தில் உள்ளோர் வாங்கி வைத்துக் கொண்டார்கள். ஆனால் பிரச்சனை ஏற்பட்டதும், ஈ.ஓ., தன்னிடம் நேரடியாக அனுமதி கோரி கடிதம் கொடுக்கவில்லை என்கிறார். அப்படியெனில் எந்நேரமும் ஈ.ஓ., இந்த அலுவலகத்தில் இருப்பாரா?” என்று கேட்கிறார்கள் அடியார்கள்.

“குழுவை நடத்தும் கிருஷ்ணன், 75 வயது நிறைந்தவர் என்றும் பாராமல், வயதுக்குக் கூட ஒரு மரியாதை தராமல் தரக்குறைவாகப் பேசினார்கள். வெளியேறவில்லை என்றால் காவல் துறையில் புகார் கொடுப்போம் என்றார் ஈ.ஓ. மேலும், கையில் வைத்திருந்த குடையால் வயிற்றில் குத்தி அவமானப் படுத்தினார்” என்று அடியார் பெண்மணிகள் குற்றம் சாட்டினர். அவர்கள் அனைவருமே வயது ஐம்பதைக் கடந்த மூத்தவர்கள்தான்!

“இந்தக் கோயிலைக் கட்டிய பராக்கிரம பாண்டிய மன்னன், தன்னை படிக்கல்லில் சிலையாக வடித்து, கோயிலுக்கு வரும் பக்தர்களின் பாதங்களைத் தான் வணங்குவதாகக் கூறி எல்லோரும் கோயிலுக்கு வர வேண்டும் என்று ஒரு முறையை ஏற்படுத்தி வைத்தார். ஆனால் இன்று வெறும் ஒரு நிர்வாகப் பொறுப்புக்கு இப்போது வந்த செயல் அலுவலர், சிவனடியார்களைக் கூட கோயிலுக்குள் அமர்ந்து திருவாசகம் பாட அனுமதி மறுத்து வெளியே போ என்று விரட்டுகிறார். கடந்த 27 வருடங்களாக இங்கே திருவாசகம் முற்றோதல் செய்து வருகிறோம். இதுபோன்ற அவமானம் எங்களுக்கு இதுவரை ஏற்பட்டதில்லை” என்று அவர்கள் பொறுமுகிறார்கள்.

ஏற்கெனவே ஹிந்து என்கிற போர்வையில் வேற்று மதத்தினரே கணிசமான அளவில் இந்து சமய அறநிலையத்துறையில் பணியில் உள்ளார்கள் என்கிற தகவல்கள் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது. குறிப்பாக, சட்டப்படி அவர்கள் பணியில் சேர்ந்த போது ஹிந்துக்களாக இருந்தார்கள் என்ற அரசின் பதிலும் எரிகிற தீயில் எண்ணெய் ஊற்றியிருக்கிறது. அறநிலையத் துறையில் இத்தகைய நபர்களைத் தீவிரமாக கண்காணித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கோரிக்கைகள் இப்போது எழுந்துள்ளன.

“நம் கோயிலில் நம் தெய்வத்தை வழிபட நாம் அனுமதி பெற வேண்டும் என்பதே கேவலம், அறநிலையத்துறை என்பது கணக்கு வழக்கு பார்க்க வந்த நிர்வாக அமைப்புதான். அதற்கு வழிபாட்டில் முடிவு செய்யும் அதிகாரம் கொடுத்தது யார்? இதுவே சிதம்பரம் நடராஜர் கோயிலில் என்றால், சபா மண்டபத்தில் வேண்டுமென்றே ஒரு குழுவை நாடகத்தனமாக மேலேற்றி திருமுறைகள் பாட வைப்போம் என்று அரசியல் செய்யும் அறநிலையத்துறை, இங்கே அதே திருமுறைகள் பாட விடாமல் அரசியல் செய்கிறது. எல்லாம் பண வசூலில் வந்து நிற்கிறது. சாராய பாட்டிலில் வசூல், நெல் மூட்டையில் வசூல், இங்கே பக்தர்களிடம் வசூல் வேட்டை... இப்படி பணம் கோடி கோடியாய் வசூலிப்பவர்கள், தங்களின் பிணத்தின் மீது தான் அந்தப் பணத்தை உடன் புதைத்துக் கொள்வார்கள் போலும்!” என்று பக்தர்களின் தீவிரக் குரல்கள் எழும்ப இந்தச் சம்பவம் வித்திட்டுவிட்டது!



# வேலியே பயிரை மேயலாமா? - நீதிமன்ற தீர்ப்பில் அநீதி



## வழக்குரைஞர் டாக்டர் வெங்கடேஷ் அவர்களுடனான நேர்காணல்

### வழக்கு விவரம்:

தமிழகத்தையே உலுக்கிய சென்னை போரூருக்கு அருகே மதனந்தபுரம் அடுக்குமாடி குடியிருப்பில் 7 வயது சிறுமி பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டு எரித்துக் கொல்லப்பட்டாள். இந்த பாலியல் வன்கொடுமை மற்றும் கொலையில் ஈடுபட்ட தஷ்வந்த் என்ற 23 வயது இளைஞன் கைது செய்யப்பட்டு குண்டர் சட்டத்தில் சிறையில் அடைக்கப்பட்டான். குற்றப்பத்திரிகை தாக்கல் காலதாமதத்தை காரணம் காட்டி ஜாமீனில் வெளிவந்ததோடு தன் தாயை அடித்துக் கொன்று விட்டு மும்பைக்கு தப்பியோடினான் தஷ்வந்த்.

காவல்துறையின் நீண்ட தேடுதலுக்குப் பின் மும்பையில் கைது செய்யப்பட்டு, வரும் வழியில் மீண்டும் தப்பித்து, பல போராட்டங்களுக்குப் பின் மீண்டும் காவல்துறை அவனை கைது செய்து சென்னைக்கு கொண்டு வந்தனர்.

செங்கல்பட்டு நீதிமன்றம் அவனுக்கு தூக்குத் தண்டனையையும், 46 ஆண்டுகள் சிறைத் தண்டனையையும் விதித்தது. சென்னை உயர் நீதிமன்ற முறையீட்டில் கீழமை நீதிமன்ற உத்தரவை உறுதி செய்தது. 6 ஆண்டுகளாக உச்சநீதிமன்றத்தின் மேல்முறையீட்டில் இருந்த இந்த வழக்கு விசாரணையில் கடந்த அக்.8ல் காவல்துறை போதிய ஆதாரங்களை நிரூபிக்கவில்லை எனச் சொல்லி உடனடியாக தஷ்வந்தை விடுவிக்க உத்தரவிட்ட தீர்ப்பு பலரையும் அதிர்ச்சியடையச் செய்துள்ளது.

இதுகுறித்து வழக்குரைஞரும், சமூக செயற்பாட்டாளருமான டாக்டர்.வெங்கடேஷ் அவர்களுடனான நேர்காணல் இதோ..

**7 வயது சிறுமி பாலியல் வன்கொடுமை,கொலை வழக்கில் தஷ்வந்த் உச்சநீதிமன்றால் விடுவிக்கப்பட்ட தீர்ப்பை முதலில் எப்படி பார்க்கிறீர்கள்?**

இதை நீதித்துறையின் கரும்புள்ளியாகத் தான் பார்க்கிறேன். இந்த கொடுமை நடந்த போது அக்குழந்தைக்கும், அவளது குடும்பத்தினருக்கும் நீதி கிடைக்க வேண்டும் என போராடிய அனைவருக்கும் எனது வருத்தத்தை தெரிவித்துக் கொள்கிறேன். நீதித்துறையில் உச்சபட்ச இடம் என்பது நம் நாட்டின் உச்ச நீதிமன்றம் தான். அங்கேயே இது போல தீர்ப்பு கொடுக்கப்பட்டிருப்பது ஒரு கருப்பு தினமாகவே பார்க்கிறேன். ஒரு 7 வயது சிறுமியை கற்பழித்து, எரித்துக் கொன்ற வழக்கில் அக்குழந்தைக்கு முழுமையான நீதி கிடைக்கவில்லை என்றால் இது என்ன சிஸ்டம் என்று தெரியவில்லை.

ஒரு குற்றவாளி இல்லாமல் ஒரு குற்றம் நடக்க வாய்ப்பில்லை. உச்சநீதிமன்ற பார்வையில் தஷ்வந்த் குற்றவாளி இல்லை என்றால் வேறு யார் குற்றவாளி? சிறுமியை கொன்றது யார்? போதிய சாட்சியம் இல்லை என நீதிமன்றம் கூறலாம். ஆனால் முழுமையான நீதியை அக்குழந்தைக்கு

**அக்குழந்தை தானே பெட்ரோலை ஊற்றி கொளுத்திக் கொண்டிருக்காது. இது குறித்து விரிவாக உயர்நீதிமன்ற தீர்ப்பில் விவாதிக்கப்பட்டுள்ளது. விசாரணை சரியாக நடக்கவில்லை என நீதிமன்றம் கருதினால் மறு விசாரணைக்கு உத்தரவிடும் அதிகாரம் இருக்கிறதே.**

வழங்கியதா நீதிமன்றம் என்ற கேள்வி என்னை இத்தீர்ப்பு குறித்து ஆய்வு செய்ய தூண்டியது.

**2017 பிப் 5ல் சிறுமி பாலியல் வன்கொடுமை, எரித்துக் கொலை செய்யும் தஷ்வந்த் கைது செய்யப்பட்ட நிலையில் உடனடியாக ஜாமினில் வெளிவந்ததோடு தன் தாயையும் கொலை செய்கிறான். இந்த வழக்கிற்கும் சேர்த்து தான் தண்டனை வழங்கியது கீழமை நீதிமன்றம். இப்போது உச்ச நீதிமன்றத்தில் தாய் கொலையில் சாட்சியான தந்தை பிறழ் சாட்சியமாகி விட்டார், சிறுமி பாலியல் வழக்கில் டி என் ஏ மேட்ச் ஆகவில்லை எனச் சொல்லி விடுவித்துள்ளது. அப்படியென்றால் சிறுமியையும், தஷ்வந்த் தாயையும் கொன்றது யார்? காவல் துறை சிறுமி குடும்பத்தினருக்கு என்ன சொல்லப் போகிறது?**



சின்ன திருத்தம் தஷ்வந்திற்கு உடனடியாக ஜாமின் கிடைக்கவில்லை. குற்றவழக்கில் 90 நாள்களுக்குள் சார்ஜ் ஷீட் ஃபைல் செய்ய வேண்டும். அப்படி இல்லாத போது ஜாமின் கொடுப்பது நீதிமன்ற நடைமுறை. இதன் அடிப்படையில் தான் தஷ்வந்த் வெளியில் வந்தான். யார் குற்றவாளி என்ற உங்களின் கேள்வியை உச்சநீதிமன்றம் கேட்டிருக்க வேண்டும். ஆனால் கேட்கவில்லையே, மற்ற வழக்கிலெல்லாம் முழுமையான நீதி என்று சொல்லி ஆர்ட்டிகில் 142 பயன்படுத்தி ராஜீவ் கொலையாளிகளுக்கு நீதியை நிலைநாட்டுகிறேன் எனச் சொன்ன உச்சநீதிமன்றம் இந்தக் குழந்தைக்கு நீதி பெற்று தந்ததா?

அக்குழந்தை தானே பெட்ரோலை ஊற்றி கொளுத்திக் கொண்டிருக்காது. இது குறித்து விரிவாக உயர்நீதிமன்ற தீர்ப்பில் விவாதிக்கப் பட்டுள்ளது. விசாரணை சரியாக நடக்கவில்லை என நீதிமன்றம் கருதினால் மறு விசாரணைக்கு உத்தரவிடும் அதிகாரம் இருக்கிறதே. அதை ஏன் செய்யவில்லை உச்சநீதிமன்றம். உயர்நீதிமன்றம் மற்றும் உச்சநீதிமன்றம் அரசியலமைப்பு அதிகாரம் பெற்றது. கிரிமினல் வழக்கின் மெரிட் பார்ப்பதை விடுத்து மீண்டும் ரிமாண்ட் அல்லது மறு விசாரணைக்கு உத்தரவிடுவார்கள்.

ஏன் மறு விசாரணைக்கு உத்தரவிடவில்லை என்பதற்கு உச்சநீதிமன்றம் கொடுத்த வியாக்கியானம் தான் அதிர்ச்சியளிக்கிறது. இந்த சம்பவம் நடந்து 8 ஆண்டுகள் ஆகிறது. நடந்திருப்பது கொடுமை, குற்றம் என்று கூட சொல்லாமல், சம்பவம் என குறிப்பிட்டுள்ளது. இத்தனை ஆண்டுகளாக தஷ்வந்த் சிறையில் உள்ளார். மீண்டும் ஒரு விசாரணைக்கு உத்தரவிட்டால் சரியாக இருக்காது என நாங்களே முடிவெடுக்கிறோம் என குறிப்பிட்டுள்ளனர்.

குற்றம் நடந்தது 2017ல், கைது செய்யப்பட்டு, விசாரணை நடந்து 2018 லேயே செங்கல்பட்டு நீதிமன்ற தீர்ப்பு, அதன்பின் அந்த தீர்ப்பு உயர் நீதிமன்றத்தால் உறுதியும் செய்யப்பட்டு விட்டது. 2019ல் தான் இவர்கள் உச்சநீதிமன்றத்தில் SLP (Special Leave Petition) போடுகிறார்கள். அங்கு தான் 6 ஆண்டுகாலமாக வழக்கு நிலுவையில் இருந்தது. இப்போது உச்சநீதிமன்றம் அதே காலதாமதத்தை காரணம் காட்டி விடுவித்திருப்பது எந்தவகையில் நியாயம்.

**வழக்கு நடக்கும் போது ஜாமினில் இருந்தாரா?**

இல்லை, உயர்நீதி மன்ற தீர்ப்பையொட்டி சிறையில் இருந்தார். நான் ஒரு வழக்குரைஞராகவும் இருப்பதால் ஒரு தவறு எனத் தெரிந்த பின் சுட்டிக்காட்டாமல் இருக்கக் கூடாது என்பதை ஒரு கடமையாக கருதுகிறேன். மனத்தெளிவுடன், விளைவை அறிந்தே தெளிவாக குறிப்பிடுகிறேன். உச்ச நீதிமன்றத்தில் நடந்திருப்பது ஃப்ராடு.

**நீங்கள் சொல்லும் ஃப்ராடு என்ற வார்த்தை கடுமையாக இருக்கிறதே?**

தெரிந்தே சொல்கிறேன். ஆதாரத்துடன்

சொல்கிறேன். இதுபோன்ற வழக்கில் உயர் நீதிமன்றத்திலிருந்து வழக்கு மேல்முறையீட்டிற்கு செல்லும் போது Case of Fitness சான்றிதழ் வழங்குவார்கள். அரசியலமைப்பின்படி சட்ட முடிவை உச்சநீதிமன்றம் தான் சொல்ல வேண்டும் என்று கருதினால் மேலே அனுப்புவார்கள்.

**மரண தண்டனை என்பதால் தான் இவ்வழக்கை எடுத்தோம் என உச்சநீதிமன்றம் கூறியுள்ளதே?**

உயர்நீதிமன்றம் சர்டிஃபிகெட் கொடுக்காததால் தான் SLP போட்டிருக்கிறார்கள். SLP -ஐப் பொறுத்தவரை 3 பேர் கொண்ட ஃபுல் பெஞ்ச் தான் உத்தரவிடுவார்கள். 2019லேயே உச்சநீதிமன்றத்தில் SLP அட்மிஷனில் கீழமை நீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்ற தீர்ப்பில் எந்த சந்தேகமும் இல்லை என்றும், தண்டனை குறித்து மட்டுமே விவாதிக்கப்படும் என நோட்டீஸ் அனுப்பப்பட்டது. 2024ல் SLP அனுமதிக்கும்போதேதண்டனைகுறித்து மட்டுமே என்று இன்னொரு 3 பேர் அடங்கிய பெஞ்ச் தெரிவித்துள்ளது. அப்போது அப்பீலாக மாறுகிறது. இதிலும் குற்றவாளியா இல்லையா என்பதல்ல, தண்டனை காலம் குறித்தானது மட்டுமே என்பதே நடைமுறை.

இதற்குள் தஷ்வந்த் தரப்பு ஒரு சீனியர் கௌன்சில் மூலம் எங்களுக்கு உயர்நீதிமன்றம் சர்டிஃபிகெட் கொடுத்து விட்டது, நாங்கள் தவறுதலாக SLP போட்டுவிட்டோம். இந்த வழக்கில் தண்டனை மட்டுமல்ல தஷ்வந்த் குற்றவாளியா என்பது குறித்தும் விவாதிக்கப்பட வேண்டும் என அப்பீலாக தாக்கல் செய்கிறார்கள். நான் ஃபராடு எனச் சொல்வது இதைத் தான், உச்சநீதிமன்றமும் இந்த பெட்டிஷனை ஏற்றுக் கொண்டது. உயர்நீதிமன்றம் கொடுத்த சர்டிஃபிகெட்டை மறைத்து SLP போட்டால், அதை அப்பீலாக கருதக்கூடாது என்பது உச்ச நீதிமன்ற நடைமுறை. அதையும் இவ்வழக்கில் மீறியுள்ளது உச்சநீதிமன்றம் என்பதால் தான் நான் திரும்ப திரும்ப ஃப்ராடு என்ற பதத்தை பயன்படுத்துகிறேன்.

> **நான் ஒரு வழக்குரைஞராகவும் இருப்பதால் ஒரு தவறு எனத் தெரிந்த பின் சுட்டிக் காட்டாமல் இருக்கக் கூடாது என்பதை ஒரு கடமையாக கருதுகிறேன். மனத்தெளிவுடன், விளைவை அறிந்தே தெளிவாக குறிப்பிடுகிறேன். உச்சநீதிமன்றத்தில் நடந்திருப்பது ஃப்ராடு.**

இவ்வழக்கில் உச்சநீதிமன்றம் இழைத்த தவறுகளை ஆதாரங்களுடன் Dr. **வெங்கடேஷ்** தெரிவித்திருக்கும் காணொளி லிங்கை இத்துடன் இணைத்துள்ளேன்.

**<https://youtu.be/zaaz5hShQ60>**

நீதியை நிலைநாட்ட நீதிமன்றமே இறுதியான இடம் என்ற நம்பிக்கையில் மக்கள் வாழும் நம் நாட்டில் நீதிமன்றங்கள் இப்படி செயல்படுவது ஜனநாயகத்தின் அழிவிற்கு காரணமாகாதா? வேலியே பயிரை மேயலாமா?

## நல்ல தொண்டில் தோள் கொடுப்போம்

வேத விஞ்ஞான ஆராய்ச்சி மையம், அனன்யா ஃபவுண்டேஷன் மற்றும் சிருங்கேரி மடம், தியாகராய நகர் இணைந்து சென்னையில் மேற்கு ஜாஃபர்கான்பேட்டையில் உள்ள அன்னை சத்யா நகர் பகுதியில் இலவச கணிப்பொறி பயிற்சி மையம் நடத்தி வருகின்றன.

இந்த பயிற்சி மையத்தில் கல்லூரியில் (குறிப்பாக இறுதி ஆண்டில்) படிக்கும் மாணவ மாணவிகளுக்கான வேலை வாய்ப்புத் திறன் (Employability Skills) பற்றிய ஒரு அறிமுக வகுப்பு நடைபெற்றது. திரு.பால வேணுகோபால் (IT Professional, Bangalore) அவர்கள் கலந்துரையாடல் மூலம் மாணவ மாணவிகளுக்கு வழி காட்டினார். 15 மாணவ மாணவிகள் பங்கு கொண்டு பயன்பெற்றனர்.

இந்த பயிற்சி மையத்தில் 8 வகையான கணிப்பொறி பயிற்சி வகுப்புகள் நடைபெற்று வருகின்றன. இதுவரை சுமார் 400 பேர் இந்தப் பயிற்சி மையத்தில் படித்து பயன் பெற்றுள்ளனர்.

# பாரதத்தின் ஸ்திரதன்மையை ஒழிக்க சதி செய்யும் பி.பி.சி

- சு. இராஜேஷ்

இந்திய இளைஞர்கள் வீதிக்கு வந்து போராட மறுப்பதேன் ? என்ற கேள்வியுடன், பாரதத்தில் வன்முறை வெறியாட்டம் நடக்க வேண்டும் என்ற ஆதங்கத்துடன் ஒரு கட்டுரையை BBC வெளியிட்டது. இதற்கு பலதரப்பிலிருந்து கண்டனங்களும், BBC யை தடைசெய்ய வேண்டும் என்ற குரலும் ஒலிக்கின்றன.

உலகளவில் ஊடக அறத்தை காக்கவும், சூப்பர் ஜர்னலிஸத்தை நிலை நிறுத்தவும், குரலற்றவர்களின் குரலாக ஒலிக்கிறேன் என தனக்குத் தானே சான்றிதழ் வழங்கிக் கொண்டு செயல்படும் நிறுவனம் தான் BBC. ஒரு நாட்டில் அமைதி, நிம்மதி, வளர்ச்சியை முன்னெடுக்கும் ஆட்சி நடந்தால் உடனே BBC-க்கு மூக்கில் வியர்த்து விடும். ஜனநாயகத்திற்கு ஆபத்து, பேச்சு, எழுத்து சுதந்திரத்திற்கு அபாயம் என அரசுக்கு எதிராக தொடர்ந்து கட்டுரைகளை எழுதத் தொடங்கிவிடும்.

இதன் அடிப்படையில் அந்நாடுகளில் உள்ள போலி போராளிகள், எழுத்தாளர்கள், செலிப்ரட்டிகள், ஊடக வியாபாரிகள் மூலம் மக்கள் மத்தியில் அரசுக்கு எதிரான கருத்தாக்கத்தை ஏற்படுத்துவார்கள். அதைத் தொடர்ந்து அந்நாட்டில் புரட்சி போராட்டங்கள், ஆர்பாட்டங்கள் என நடக்க ஆரம்பித்து, ஒரு கட்டத்தில் ஆட்சி மாற்றமே கூட நிகழ்ந்து விடும்.

**ஒரு நாட்டில் அமைதி, நிம்மதி, வளர்ச்சியை முன்னெடுக்கும் ஆட்சி நடந்தால் உடனே BBC-க்கு மூக்கில் வியர்த்து விடும்.**

இந்த ஊடக ரவுடித்தனத்தை பல்வேறு நாடுகளிலும் அரங்கேற்றிய BBC, தற்போது பாரத்ததிலும் முயற்சிப்போம் என்ற முடிவோடு இறங்கியுள்ளது. பாரதத்தில் 370 மில்லியன் இளைஞர்கள் கொண்ட நாட்டில் வீதிக்கு வந்து போராட தயங்குவது ஏன்? என்ற கேள்வியை எழுப்பியுள்ளது. நேபாளத்தில் GenZ போராட்டத்தால் 48 மணி நேரத்தில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. இந்தோனேஷியாவில் கல்வி, வேலைவாய்ப்பு இன்னும்பல கோரிக்கைகளை முன்னிறுத்தி நடந்த GenZ புரட்சியால் பல சலுகைகள் மீண்டும் கிடைத்தது. பங்களாதேஷில் வேலை வாய்ப்பு, இடஒதுக்கீடுக்காக நடந்த மாணவர்கள் கிளர்ச்சியால் ஷேக் ஹசினா அரசாங்கம் கவிழ்க்கப்பட்டு, அவர் நாட்டை விட்டே ஓடும்நிலை ஏற்பட்டது.

சமீபத்தில் மடகாஸ்கரில் GenZ புரட்சியால் தலைமை மாற்றம் ஏற்பட்டது. ஆனால் இந்தியாவில் சமூகவலைதள பயன்பாடு அதிகமாக இருக்கிறது. ஊழல், அதிகார துஷ்பிரயோகம், வேலையின்மை ஆகியவை குறித்து சமூகவலைதளத்தில் விவாதப்போர் நடக்கிறது. ஆனால் வீதிக்கு வந்து போராட இந்திய இளைஞர்கள் தயாராக இல்லை. அப்படி நடந்தாலும் அது உள்ளூர் பிரச்சினைக்காகவோ, தலித் போராட்டமாகவோ, ஓபிஸி இட ஒதுக்கீட்டிற்காகவோ, தமிழ் கலாச்சார மீட்பு என நடக்கிறதே ஒழிய, நாடு முழுக்க ஒற்றை குறிக்கோளுடன் நடைபெறுவதில்லை.

CAA க்கு எதிராக டெல்லியில் நடந்த ஷாஹின்பாக் போராட்டம், விவசாய போராட்டம், ஜல்லிக்கட்டு போராட்டம் என நடைப்பெற்றது. இவை அப்பகுதியில் நடந்ததே அன்றி நாடு முழுவதும் பரவவில்லை. இதற்கு பல்வேறு மொழி, இனம், பழக்க வழக்கங்கள் என வேறுபாடுகள் இருப்பதால் ஒரே திசையில் இளைஞர்கள் திரள முடியவில்லை என்ற காரணத்தையும் கட்டுரை சொல்கிறது. ஒற்றைக் கலாச்சாரத்தை முன்னிறுத்தும் மோடி அரசு என பிரச்சாரம் செய்யும் இதே பத்திரிகைகள், இப்போது இந்தியாவின் பலதரப்பட்ட மக்கள் இருப்பதால் போராட்டத்தை ஒருங்கிணைக்க முடியவில்லையே என்று ஆதங்கப்படுவதன் மூலம் இவர்களின் இரட்டைநிலையை புரிந்து கொள்ள முடியும். இளைஞர்கள் வீதிக்கு வந்து போராட முன்வராமல் இருக்க, தேசதுரோகி என்ற முத்திரை குத்தப்படுவோம் என்ற அச்ச உணர்வும் ஒரு காரணம் என இக்கட்டுரை சொல்வதன் மூலம் மோடி அரசு போராட்டங்களை

அடக்கி ஒடுக்கும் சர்வாதிகார ஆட்சி என்பது போல கருத்தாக்கத்தை இக்கட்டுரை ஏற்படுத்த முயல்கிறது.

மேலும் மக்கள் நலன், அரசியல் விழிப்புணர்வு, சமூக அக்கறையை ஏற்படுத்தும் கல்வி நிறுவனங்கள், பலகலைக் கழகங்கள் இன்று அரசின் நடவடிக்கைக்கு அஞ்சி மாணவர்களின் போராட்ட குணம் குறைந்து விட்டதோ என்ற கேள்வியை கேட்பதோடு, 1970-களில் இந்திரா காந்திக்கு எதிராக இதே மாணவ சமுதாயம் தானே கொதித்தெழுந்து ஆட்சி மாற்றத்திற்கு அடிகோலியது? இப்போது அந்த கிளர்ச்சி சிந்தனை எங்கே போனது என நீள்கிறது BBC யின் ஆதங்கம்.

இந்தியாவில் போராடும் குணமே இல்லாமல் போய்விட்டது என்று சொல்ல முடியாது, மங்கலான ஜுவாலையுடன் லடாக்கில் தொடங்கிய போராட்டம் பெரும் நெருப்பாய் பரவவில்லை, நேபாளில் GenZ போராட்டத்தினால் ஆட்சி மாற்றம் நிகழ்ந்த காலத்தில் இந்தியாவில் ராகுல் காந்தி Vote Chore வாக்குத் திருட்டு என்ற பிரச்சாரத்தை தொடங்கியதோடு, ஜனநாயகத்தை காக்க GenZ க்களுக்கு போராட அழைப்பு விடுத்தார். இவ்விரு போராட்டங்களும் நாடு முழுவதும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தவில்லையே என BBC விசனப்படுகிறது.

கடந்த பாராளுமன்ற தேர்தலுக்கு முன்பு BBC India: The Modi Question என்ற கோத்ரா கலவரம் குறித்த 2 பாகம் கொண்ட டாக்குமெண்டரியை வெளியிட்டது. இக்கலவரத்திற்கு நரேந்திர மோடியை குற்றம் சுமத்தும் வகையில் தயாரித்திருந்தது. சிறப்பு புலனாய்வு விசாரணை, உச்சநீதிமன்ற தீர்ப்பு என அனைத்திலிருந்து குற்றமற்றவர் மோடி என நிரூபிக்கப்பட்ட நிலையில் தேசத்தின் நீதித்துறையை களங்கம் செய்யும் நோக்கில் வெளியிடப்பட்ட டாக்குமெண்டரியை தடைசெய்தது மத்திய அரசு. இது கருத்துச் சுதந்திரத்திற்கு எதிரான போர் என N.ராம், பிரஷாந்த் பூஷன், மொவா மொய்த்ரா ஆகியோர் சேர்ந்து வழக்கு தொடுத்தனர். கம்யூனிச, காங்கிரஸ் மாணவ அமைப்பினர் தடைசெய்யப்பட்ட டாக்குமெண்டரியை பல்கலையில் ஒளிபரப்பி முஸ்லீம் மக்களிடம் கோபத்தை கிளப்பி அதன் மூலம் மீண்டும் நாடு முழுவதும் வன்முறையை கட்டவிழ்க்க சதித் திட்டம் தீட்டினர்.

BBC-க்கு ஆதரவாக வாஷிங்டன் போஸ்ட், நியூயார்க் டைம்ஸ், தி கார்டியன் போன்ற பத்திரிகைகள் இந்தியாவில் கருத்துச் சுதந்திரத்திற்கு ஆபத்து என நீட்டி முழக்கி கட்டுரைகள் எழுதியதை நாம் மறந்து விடக்கூடாது. இந்தியாவில் அமைதியின்மையை உருவாக்க முயலும் BBC உள்ளிட்ட வெளிநாட்டு ஊடகங்கள் லாவகமாக ஒரு விஷயத்தை கையாளுகின்றன. இந்தியாவில் ஜனநாயகத்திற்கு, சிறுபான்மையினருக்கு, தலித்துகளுக்கு, கருத்துச் சுதந்திரத்திற்கு அச்சுறுத்தல், ஆபத்து என எழுத கட்டுரையாளர்களை நம் நாட்டிலிருந்தே தேர்ந்தெடுக்கிறது. கட்டுரையாளர் வேற்று நாட்டவர் எனில் அதை மக்கள் பொருட்படுத்தாமல் போகிற வாய்ப்புண்டு எனக் கருதி கலகக் குரலை உள்நாட்டிலிருந்தே ஒலிக்கச் செய்கின்றன.

தி நியூயார்க் டைம்ஸ், வாஷிங்டன் போஸ்ட் போன்ற பத்திரிகைகள் மோடி அரசை விமர்சித்து எழுதும் கட்டுரையாளர்களுக்கு ரூ.35,000/- வரை சன்மானம் கொடுத்த செய்திகள் எல்லாம் வெளியாகியதை நினைவில் கொள்ள வேண்டும்.

BBC இந்தியாவில் போராட்டத்தை தூண்டும் கட்டுரைகளை இப்போது எழுதுவதன் நோக்கம் ஏன்? என்ற கேள்விக்கு விடை கடந்த பிப்ரவரியில் தான் BBC இந்தியா அன்னிய பணப்பரிமாற்றத்தில் முறைகேடு நடந்திருப்பதாக ஆதாரங்களுடன் குறிப்பிட்டு 3.44 கோடி ரூபாய் அபராதத்தை விதித்தது. அந்த கோபத்தில் தான் தொடர்ந்து வன்மத்தை விதைக்கிறது. இது போன்ற ஊடகங்களின் வெறுப்புர்ணவு பிரச்சாரத்தை மத்தியில் ஆள்வோர் கடந்து செல்லாமல் கடிவாளம் போட வேண்டும்.

என்ன தான் காரணத்தைச் சொல்லி BBCயும், ராகுலும் போராட அழைத்தாலும், இந்திய இளைஞர்கள் StartUp, AI Technology, Drone Technology என களம் காணுவதோடு, பலருக்கும் வேலை வழங்கும் நிலைக்கு உயர்ந்து வருகின்றனர். ஆனால் பாவம் அந்நிய ஊடகங்கள் கட்டமைக்கும் பிரச்சாரத்தை வைத்து தேசத்தை இழிவு செய்யும் ராகுல் வின்ஸிக்கள் தான் வேலையில்லாமல் வெட்டியாக அலைகிறார்கள்.

BBC NEWS

# பணி நியமனத்தில் ரூ.888 கோடி ஊழல்

- ராயன்

திமுகவையும் ஊழலையும் பிரிக்க முடியாது என்பது சாதாரண மனிதருக்கும் புரியும் என்பதாலோ என்னவோ, திமுகவின் மீது ஊழல் குற்றச்சாட்டை யாரேனும் கூறினால், இது என்ன புதுசா? என்ற கேள்வியோடு கடந்து சென்று விடுவார்கள். மேலும் ஊழல் வழக்கிலிருந்து சாமார்த்தியமாக வெளியே வந்து விடுகிறார்கள் என்ற காரணமாகவும் இருக்கலாம். அதனால் தான் திமுக தைரியமாக தனது பொதுக்கூட்டங்களில் நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்டிருக்கிறோமா? என்ற கேள்வியை முன் வைப்பார்கள்.




இந்த வாரத்தின் பரபரப்பு செய்தியாக நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பணிநியமனத்தில் ரூ.888 கோடி லஞ்ச ஊழல் நடந்திருப்பதாகவும் அதன் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என காவல் துறைக்கு கடிதம் எழுதியது அமலாக்கத் துறை. உதவி பொறியாளர்கள், நகரமைப்பு திட்டமிடல் அதிகாரிகள் உட்பட, 2,538 பேரை தேர்வு செய்ததில் ஊழல் நடந்துள்ளதை துறை அமைச்சர் கே.என்.நேருவின் சகோதரர் கே.என்.ரவிச்சந்திரனின் ட்ரூ வால்யூ ஹோம் நிறுவனத்தில் கைப்பற்றப்பட்ட ஆவணம் மூலம் தெரியவந்ததாக தெரிவிக்கிறது.

“150 பேரிடம் 25 முதல் 35 லட்சம் வரை லஞ்சமாக வாங்கியிருக்கலாம் என்றும் இந்த ஊழல் குறித்து வழக்குப்பதிவு செய்து, அதன் நகலை எங்களுக்கு அனுப்புங்கள். அப்போது தான் எங்களால் சட்டவிரோத பணபரிமாற்றம் தொடர்பாக வழக்குப்பதிவு செய்ய முடியும்” என, தமிழக காவல் துறையின் பொறுப்பு டி.ஜி.பி., வெங்கடராமனுக்கு, அக்., 27ம் தேதி கடிதமும், ஊழல் தொடர்பாக, 232 பக்க ஆவணங்களையும் இணைத்துள்ளதாக அமலாக்கத்துறை தெரிவித்தது.

பணி நியமன ஊழலில், அமைச்சர் நேருவின் தம்பிகள் ரவிச்சந்திரன், மணிவண்ணன் மற்றும் இவர்களின் உதவியாளர்கள் ரமேஷ், செல்வமணி மற்றும் கவி பிரசாத் ஆகியோருக்கு தொடர்பு உள்ளதாகவும் ஊழலுக்கு ஆதாரமாக 10 ரூபாயை மையப்படுத்தி நடந்திருக்கும் சுவாரஸ்ய தகவலையும் ED தெரிவித்துள்ளது.

பணி நியமனத்திற்கு லஞ்சப்பணம் கொடுக்க 10 ரூபாய் நோட்டு எண்களை, அதை வாட்ஸ் அப்பில் காட்டும் படத்தில் இருக்கும் எண்ணும் ஒன்றாக இருந்தால் அவர் சொல்லும் நிறுவனத்தில் பணத்தை செலுத்த வேண்டும் என தெரிவித்துள்ளனர். அமலாக்கத்துறையின் இந்தக் குற்றச்சாட்டை, திராவிட மாடலை களங்கப்படுத்தும் செயல் என்றும், அதிமுக ஆட்சியிலும் அண்ணா பல்கலையில் தான் பணி நியமன தேர்வு நடைப்பெற்றது. அப்போது சொல்லாத குற்றச்சாட்டை இப்போது சொல்வது உள்நோக்கம் கொண்டது என கே.என்.நேரு விளக்கம் அளிக்கிறார்.

திமுகவிற்கும் இந்த 10 ரூபாய்க்கும் என்ன பூர்வஜென்ம பந்தமோ தெரியவில்லை. ஆனால் 10 ரூபாய் (டாஸ்மாக் எக்ஸ்ட்ரா)என்பது சாதாரண மதிப்பு என நினைக்கும் நம்மைப் போன்றவர்களுக்கு அதன் பின்னால் உள்ள கோடிகள் திராவிட மாடலின் கண்களுக்குத் தான் தீட்சண்யமாக தெரிகிறது.

ஏற்கனவே பணி நியமன ஊழலில் சிறைக்குச் சென்று திரும்பிய செந்தில் பாலாஜி போன்றவர்களின் அனுபவம் திமுகவுக்கு இருப்பதால், இந்த வழக்கையும் இடதுகையால் டீல் செய்துவிடலாம் என நினைத்திருக்கலாம்.

இவ்வழக்கிலும் நீதிமன்றம் பதவியா? பெயிலா? என சுண்டிவிடப் போகிறதா? என பொறுத்திருந்து பார்ப்போம்.

**அரசியல் கட்சி தலைவருக்கு உடல் எங்கும் கண்கள் வேண்டும் - துரைமுருகன்**

◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇

அவர் கட்சித் தலைவரை சொல்லிருப்பாரோ ! ஒரு விஷயத்தை பூடகமா சொல்றதுல அண்ணன் PhD வாங்குனவராச்சே......

**அன்புள்ள மகளிர் உரிமைத் தொகை பயனாளிகளே...அமைச்சர் கீதாஜீவன்**

◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇

அரசியல் பயனாளர்களே.... னு உங்களை மக்கள் அழைக்கலாமா ?

**நம்பிக்கை உள்ளவர்களுக்கு தீபாவளி வாழ்த்துக்கள் - துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின்**

◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇

இதே பாணியில,
கிறிஸ்மஸ், ரமலானுக்கும்
வாழ்த்து சொல்லத்
துணிவு இருக்குமா
நம்ம உ.ஸ் க்கு.....

**முதல்வர் தீபாவளி வாழ்த்து கூற வேண்டும் என கேட்டால் சபாநாயகர் பதறுகிறார் - வானதி சீனிவாசன்**

◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇

நீங்க ஏன் ஒவ்வொரு
பண்டிகைக்கும் நம்பிக்கை
இல்லாதவங்க வாழ்த்தை
எதிர்பாக்குறீங்கனு இந்த
பதற்றம் மக்களுக்கே இருக்கு.




**- நா.பாஸ்கரன்**

**கரூர் துக்க சம்பவத்தின் காரணமாக தவெகவினர் இந்த ஆண்டு தீபாவளி கொண்டாடவேண்டாம் - ஜோசப் விஜய்**

◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇

கிறிஸ்மஸ், புத்தாண்டு, ரம்ஜான் கொண்டாட வேண்டாம்னு அறிக்கை வருமா? ஏன்னா? துக்கம் ஒரு வருஷம் ஆச்சே....

**கூடுதல் தொகுதிகள் வேண்டும்; கூட்டணியில் சேதம் ஏற்பட்டால் அது திமுகவுக்கே பலவீனம் - கம்யூனிஸ்ட் பெ. சண்முகம்**

◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇

25 கோடிக்கு பதிலா, 50 கோடி கொடுத்தா கட்சியே கலைச்சிட்டு போயிடுவீங்க. கூட்டணி சேதம் பற்றி எல்லாம் நீங்க பேசலாமா ?

**இரு திராவிட இயக்கங்களை ஒழிப்பதே பா.ஜ.க எண்ணம் - திருமாவளவன்**


◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇

விசிக வை ஒழிக்கிற எண்ணம் இல்லங்குறத இப்பவாவது உங்களுக்கு புரிஞ்சிதே....

**இந்தியாவின் தொழில்நுட்ப மாற்றத்திற்கு வித்திட்டவர்கள் நாங்கள் - அன்பில் மகேஷ் பொய்யாமொழி**

◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇

சர்காரிய கமிஷன் முதல் 2G, செந்தில் பாலாஜி வரை தொழில்நுட்ப ஊழலில் இந்தியாவே உங்களை பார்த்து வியந்ததுன்னா சும்மாவா !



# ஹிஜாப் - அடிப்படை உரிமையா? ஆதிக்கத்தின் அடையாளமா?

- வேலு நாச்சியார்

கேரளாவிலும் வெடித்த ஹிஜாப் பிரச்சினை! கேரள மாநிலம் கொச்சி அருகிலுள்ள பள்ளுருத்தி செயிண்ட் ரீட்டா பப்ளிக் ஸ்கூல் 8ம் வகுப்பு படிக்கும் முஸ்லீம் மாணவி பள்ளிக்கு ஹிஜாப் அணிந்து வந்ததார். பள்ளிச் சீருடையை விடுத்து ஹிஜாப் அணிந்த தவறுக்காக பள்ளி நிர்வாகம் மாணவியின் பெற்றோரை அழைக்க, அவர்கள் சோஷியல் டெமாக்ரெடிட் ஃபார்ட்டி ஆப் இந்தியா (SDPI) அமைப்பினரையும் உடன் அழைத்து வந்தனர். பள்ளி நிர்வாகத்தினரை மிரட்டியதோடு ரகளையில் ஈடுபட்டனர். பள்ளி நிர்வாகம் பள்ளிக்கு விடுமுறை அறிவித்து நீதிமன்றம் நாடி பாதுகாப்புப்பெற்று மீண்டும் இயங்கத் தொடங்கியது.



இந்தப் பள்ளியின் முதல்வர் ஹெலீனா அல்பி, இந்தப் பள்ளிகூடத்தில் 100க்கும் மேற்பட்ட முஸ்லீம் மாணவிகள் பயில்கின்றனர் ஆனால் இந்த ஒரு மாணவி மட்டும் தான் ஹிஜாப் அணிய வேண்டும் என்கிறார் என்றார்.

இந்நிலையில் கேரள பள்ளிக்கல்வி அமைச்சர் சிவன்குட்டி அவர்கள், கிறிஸ்தவ பள்ளியில் தலையில் முக்காடு அணிந்த ஆசிரியை, ஹிஜாப் அணிந்த மாணவியை வெளியேற்றுவது முரண்பாடானது என்று கருத்து தெரிவித்ததோடு மட்டுமல்லாமல், மாணவி ஹிஜாப் அணிந்து வர பள்ளி நிர்வாகம் அனுமதிக்க வேண்டும் என்ற உத்தரவையும் பிறப்பித்தார். பள்ளியின் இந்த யூனிபார்ம் கொள்கை அரசியலைப்பு சட்டத்திற்கு எதிரானது, கேரள அரசு மத அடிப்படையில் பாகுபாடுகளை ஒருபோதும் அனுமதிக்காது என்றும் தெரிவித்தார். அமைச்சரின் இந்த உத்தரவை தடை செய்யவேண்டும் என்ற கோரிக்கையுடன் பள்ளி நிர்வாகம் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தது.

இந்த மனுவை விசாரித்த நீதிபதி என். நாகரேஷ் அவர்கள், 1998 பள்ளி நிறுவப்பட்ட ஆண்டு முதல் அது மதச் சார்பற்ற கல்வி நிலையமாக இயங்கி வருவதாகவும், அனைத்து பெற்றோர்களும் பள்ளியின் யூனிபார்ம் முறையை பின்பற்ற சம்மதித்து அறிவிப்பில் கையெழுத்திட்டிருப்பதாகவும் குறிப்பிட்டார்.

அடிப்படைவாதிகளால் ஹிந்துக்களுக்கு பிரச்சினை ஏற்படும் போதெல்லாம் வாய்திறவாத சைரோ மலபார் சர்ச், அமைச்சரின் இந்த கருத்து கிறிஸ்வத நிறுவனங்களில் பிரச்சினைகளை ஏற்படுத்தி வரும் மதவாத அமைப்புகளுக்கு சாதகமாகவே உள்ளது என்று தன் அதிருப்தியை வெளிபடுத்தியது. அதே போன்று, கத்தோலிக்க சர்சுகளின் குரலாக வெளிவரும் தீபிகா டெய்லியும் தன் தலையங்கத்தில் முஸ்லீம்களை தாஜா செய்யும் போக்கை அமைச்சர் வெளிப்படையாகவே வெளிப்படுத்தியுள்ளார்

என்று குற்றம் சாட்டியது. கிறிஸ்தவர்களின் இந்த அறிக்கைகள் வெளிவந்தவுடன் அப்படியே பல்டி அடித்தார் பள்ளிக்கல்வி அமைச்சர்..

பெற்றோருக்கும், பள்ளி நிர்வாகத்திற்குமிடையே உடன்படிக்கை ஏற்பட்டுவிட்டது. தற்போது அந்தப் பெண்ணின் தந்தை, ஹிஜாப் இன்றி தனது மகளை பள்ளிக்கு அனுப்பத் தயாராக உள்ளார். சிலர் பிரச்சினையைத் தூண்ட முயல்கின்றனர். சமூக பிளவை ஏற்படுத்த விடமாட்டோம் என்று கூறியுள்ளார்.

அந்த மாணவியின் தந்தையும், பள்ளியின் யூனிபார்ம் விதிமுறையை பின்பற்றி ஹிஜாப் இல்லாமல் அதே பள்ளிக்கூடத்தில் தன் படிப்பைத் தொடர்வார். சிலர் இந்த விவகாரத்தை துஷ்பிரோயகம் செய்யப் பார்க்கின்றனர் அதை நான் விரும்பவில்லை என்று பேட்டியளித்தார்.

அப்படியென்றால் எதற்காக இந்த நாடகம் அரங்கேற்றப்பட்டது?

இந்தப் பிரச்சினை ஏற்பட்டவுடன் டி.வி விவாதத்தில் பங்குபெற்ற கம்யூனிஸ்ட்காரர்கள், ஹிஜாப் அணிவது அடிப்படை உரிமை என்று முழங்கினர். ஹிஜாப் அணியாமல் பல முஸ்லீம்கள் உள்ளனரே? அதே பள்ளியில் இந்த மாணவி மட்டும் தானே இந்த கோரிக்கையை வைக்கிறார் என்று கேள்வி கேட்க, நெறியாளர்களை சாடத் தொடங்கினர். கருப்புத் துண்டுடன் ஐயப்ப பக்தர்கள் பள்ளிக்கு வரலாமா என்ற கேள்விக்கு முடியாது என்றனர். இதை பாரபட்சம் என்று நெறியாளரும், பங்கெடுப்பவர்களும் சுட்டிக்காட்டி கம்யூனிஸ்டுகளின் இரட்டை வேடத்தை அம்பலப்படுத்தினர்.

முஸ்லீம்களின் ஓட்டுக்களுக்காக அடிப்படைவாதிகளை ஆதரிக்க கம்யூனிஸ்டுகள் தவறாக கிறிஸ்தவப் பள்ளியைத் தேர்ந்தெடுத்துவிட்டதை உணர்ந்து, மாணவியின் பெற்றோருக்கும், பள்ளி நிர்வாகத்திற்கும் இடையே பஞ்சாயத்து செய்து, பிரச்சினையை வேகமாக முடிவுக்குக் கொண்டு வந்தனர். மைனாரிட்டிக்கள் ஒற்றுமை, ஹிந்துக்களின் பிரிவினை ஆகியவற்றை வைத்து அரசியல் நடத்தும் கட்சிகளும், அவர்களை இயக்கும் மைனாரிட்டி சமுதாயங்களும் தங்கள் லட்சியத்திற்கு பாதிப்பு வராமல் பார்த்துக் கொண்டனர்.

மேலூர் அருகே வாக்குச் சாவடியில் அடையாளத்தை நிரூபிக்க முகத்திரையை விலக்கச் சொன்ன பூத் ஏஜெண்டை ஜெயிலில் அடைத்த தி.மு.க ஆட்சியாளர்களும்,

**அடிப்படைவாதிகளால் ஹிந்துக்களுக்கு பிரச்சினை ஏற்படும் போதெல்லாம் வாய்திறவாத சைரோ மலபார் சர்ச், அமைச்சரின் இந்த கருத்து கிறிஸ்வத நிறுவனங்களில் பிரச்சினைகளை ஏற்படுத்தி வரும் மதவாத அமைப்புகளுக்கு சாதகமாகவே உள்ளது என்று தன் அதிருப்தியை வெளிபடுத்தியது.**

பக்க வாத்தியம் வாசித்த காங்கிரஸ்காரர்களும் கிறிஸ்தவர்களுக்கு எதிரான பிரச்சினை என்பதால் மௌனம் காத்தனர். கர்நாடகத்திலும் ஹிஜாபை வைத்துப் பிரச்சினை செய்த நேரத்தில், இந்தக் கட்சிகளெல்லாம் வானமே இடிந்து விழுந்ததாகக் கூவின.

திருநெல்வேலி நெல்லையப்பர் கோவில், திருப்புல்லாணி ஆதி ஜெகந்நாதர் கோவில், பழனி முருகன் கோயில், சென்னை கபாலீஸ்வரர் கோவில் ஆகியவற்றில் ஹிஜாபுடன் நுழைந்து திட்டமிட்டு ஹிந்துக்களை அவமானப்படுத்தும் முயற்சியை முஸ்லீம்கள் மேற் கொண்டனர். தஞ்சை பெரிய கோவில், திருப்பரங்குன்றம் முருகன் கோவில் வளாகங்களில் அசைவ உணவு சாப்பிட்டனர். அதை ரசித்து, உணவு சுதந்திரம், உடை சுதந்திரம் என்று பேசிய சிலர், கிறிஸ்தவப் பள்ளி என்றவுடன் பொங்கினர். முஸ்லீம் ஆதரவாளர்கள் பலர் அமைதியாகினர்

இந்த நிகழ்வு நமக்குத் தந்த பாடம் என்ன?

ஹிஜாப் என்பது அடிப்படை உரிமையல்ல! மத அடிப்படைவாத ஆதிக்கத்தின் அடையாளாம்!

கிறிஸ்தவ முஸ்லீம்கள் பிரச்சினை என்றால் அடக்கி வாசித்து சமரசம் செய்யும் அரசியல் கட்சிகள் ஹிந்துக்களை பிரித்தாளும் சூழ்ச்சியைச் செய்யும்!

ஹிந்து நிறுவனங்களிலும், வழிபாட்டுத் தலங்களிலும் கிறிஸ்தவ, முஸ்லீம்கள் அத்துமீறி நுழைந்து சட்டத்திற்குப் புறம்பாகச் செயல்பட்டால் ஆதரிக்கும் அதே நேரத்தில் கிறிஸ்தவ முஸ்லீம்களுக்குள் பிரச்சனை ஏற்பட்டால், ஹிந்துக்களை பொது எதிரிகளாகச் சித்தரித்து கிறிஸ்தவ முஸ்லீம் ஒற்றுமைக்குப் பாடுபடும்!

# செய்திகள்...

### பள்ளிக்கட்டிடங்கள் கட்ட கோயில் உபரிநிதி - சட்டசபையில் மசோதா நிறைவேற்றம்

உயர்நீதிமன்றங்கள், உச்ச நீதிமன்றம் ஆகியவை கோவில் நிதியை மடைமாற்றுவது சட்ட விரோதம் என்ற தீர்ப்பு வழங்கிய பின் இந்த மசோதா கொண்டு வந்திருப்பது சட்டவிரோதமே!

### அவிநாசியில் தீபாவளியன்று
போலீஸ் தாக்குதல்

ஹிந்து திருவி
திருவிழாக்களுக்கு
சட்டமும் பொறுந்
வேற்று மதத்தினர்

### காலிஸ்தானி பயங்கரவாதிகளை ஆதரிக்கும் தேன்மொழி சௌந்தரராஜனுக்கு வைக்கம் விருது

இந்தியாவால் தடை செய்யப்பட்ட காலிஸ்தான் பயங்கரவாத அமைப்புகளின் ஆதரவாளருக்கு மாநில அரசின் விருது. பிரிவினைவாத பிரச்சாரத்திற்கு வலுசேர்க்கும் மாநில அரசு. ஆழ்ந்த உறக்கத்தில் தட்டிக் கேட்க வேண்டிய மத்திய அரசு!

### அரசுப் பள்ளி மாணவர்களிட
கண்டனம்

கள்ள சாராய
குடித்து இறந்தால்
சிலைக்கும், விள
கற்கும் மாணவனு
அரசின் முன்னுரி
அரசியலுக்கே

### மது ஆலை நடத்துவோர் குறித்து கணக்கெடுக்க முடியாது - அமைச்சர் முத்துசாமி தடாலடி

மதுவை வாங்குவது டாஸ்மாக் மட்டுமே. கணக்கு தெரியாமல் வாங்குகிறார்களா? ப்ளாட்பார்ம் கடை வரை கணக்கெடுப்பவர்களுக்கு ஆலைகளை கணக்கெடுக்க முடியாதா? அவங்க தொழிலுக்கு பாதிப்பு வராமல் பார்த்துகிட்டாரு.

# சிந்தனைகள்...

**பட்டாசு வெடித்த சிறுவர்கள் மீது**

ழாக்களை முடக்கும் சதி. ஹிந்து கட்டுபாடு மற்றவர்களுக்கோ எந்த தாது. தாக்கிய காவல்துறையினர் துவேஷத்தை காட்டியுள்ளனர்.

**வேலூர் தாஜ்புராவில் பாஜக பேனரை கிழித்த முஸ்லீம் இளைஞர்கள்**

*பிரச்சாரம் செய்யும் அடிப்படை உரிமையை ஒழித்த இஸ்லாமிய அடிப்படைவாதம்! மதச் சார்ப்பின்மை, கருத்துச் சுதந்திரம் பேசுபவர்களும், அரசும் இஸ்லாமிய அடிப்படைவாதத்திற்கு அடிமைகளான அவலம். போராடும் தன்மானம் உள்ள ஹிந்துக்கள்.*

**டம் வினாத்தாள் கட்டணம்** - ABVP

*ம் காய்ச்சுபவனுக்கு 50,000! 10 லட்சம்! கட்சி தலைவர்கள் ம்பரத்திற்கும் தாராளம்! கல்வி க்கோ கட்டணம்! தமிழக மை கல்விக்கு இல்லை! மலிவு*

**திருப்பூர் கோவிலுக்குள் அத்துமீறி நுழைந்த இஸ்லாமிய இளைஞர்**

*தஞ்சை திருப்பரங்குன்றம் கோவில்களில் அசைவ உணவு. திருநெல்வேலி, பழனி, மயிலை கோவில்களில் பர்தா அணிந்து நுழைவு. வி.களத்தூரில் தேர் எரிக்க முயற்சி. இந்த கோவிலில் தொழுகை நடத்தியவன் போதை ஆசாமியாம் வழக்கை மூட வழக்கமான டெக்னிக்.*

**பர்வேஸ் முஷாரஃபை விலைக்கு வாங்கியது அமெரிக்கா - முன்னாள் CIA அதிகாரியின் திடுக்கிடும் தகவல்**

*பாகிஸ்தானின் அணு ஆயுதங்கள் அமெரிக்காவின் கட்டுபாட்டிற்கு முஷாரப் கொடுத்தாராம், ஆபரேஷன் சிந்தூரில் பாகிஸ்தானின் அணு ஆயுத கிடங்கை முடக்கியது இந்தியா. அப்படியெனில் அடி வாங்கியது அமெரிக்காவும் தான்!*

# 'தீபாவளி பரிசாக' ஜிஎஸ்டியில் அதிரடி மாற்றங்கள்

கே.ஆர். இரமேஷ், பொருளாதார ஆலோசகர்

## அறிமுகம்
## ஒரு ஒற்றை வரி சீரமைப்பின் பயணம்

ஜூலை 2017ல் ஒரே நாடு, ஒரே வரி என்ற முழக்கத்துடன் இந்தியாவில் அறிமுகப்படுத்தப்பட்ட பொருட்கள் மற்றும் சேவை வரி (ஜிஎஸ்டி) நாட்டின் பொருளாதார வரலாற்றில் ஒரு மைல்கல்லாகும். ஆரம்பத்தில் சில சவால்கள் இருந்தாலும், காலப்போக்கில் இது வணிகங்களுக்கு எளிமையான, வெளிப்படையான மற்றும் ஒருங்கிணைந்த வரி முறையை வழங்கியது. இந்த தொடர்ச்சியான முன்னேற்றத்தின் ஒரு பகுதியாக, ஜிஎஸ்டி கவுன்சில் சமீபத்தில் அறிமுகப்படுத்திய புதிய திருத்தங்கள் மற்றும் முடிவுகள் மிகவும் குறிப்பிடத்தக்கவை.

தீபாவளி பரிசாக அறிவிக்கப்பட்ட புதிய ஜிஎஸ்டி வரி கட்டமைப்பு இரண்டு முக்கிய அடுக்குகளாக அதாவது 5% மற்றும் 18% என்று மாற்றியமைக்கப்பட்டு எளிமையாக்கப் பட்டுள்ளன. செப்டம்பர் 22, 2025 முதல் அமலுக்கு வந்தது இந்த சீர்திருத்தங்கள். இதன் காரணமாக பல நுகர்வோர் பொருட்கள், வாகனங்கள் மற்றும் மருந்துகள் மீதான வரி விகிதங்கள் குறைந்துள்ளது. இது நுகர்வோர்கள் சந்தையில் பொருட்களை மலிவு விலையில் பெறுவதற்கான சூழ்நிலையை ஏற்படுத்தியுள்ளது.

**அன்றாட உபயோகப் பொருட்கள்:**

- சோப்புகள், பற்பசை, ஹேர் ஆயில் போன்றவை 5% ஆகக் குறைக்கப்பட்டுள்ளன.
- குறிப்பிட்ட விலைக்குக் கீழ் உள்ள காலணிகள் மற்றும் ஜவுளிகள் 12% முதல் 5% வரை குறைக்கப்பட்டுள்ளன.
- வாஷிங்மெஷின்கள், தொலைக்காட்சிகள், ப்ரிட்ஜ் மற்றும் பாத்திரங்கழுவி இயந்திரங்கள் 28% லிருந்து 18% ஆக குறைக்கப்பட்டுள்ளன

**வாகனங்கள்:**

சிறிய கார்கள், இரு சக்கர வாகனங்கள் (350 சிசி வரை) மற்றும் ஆம்புலன்ஸ்கள் 28% லிருந்து 18% ஆகக் குறைக்கப்பட்டுள்ளன.

**சுகாதாரம்:**

- 33 உயிர்காக்கும் மருந்துகளின் வரி 12% இலிருந்து பூஜ்யமாக்கப்பட்டுள்ளது.
- பிற மருந்துகள் ஆயுர்வேதம், சித்தா, யுனானி மருந்துகள் உட்பட வரி 12%லிருந்து 5% ஆகக் குறைக்கப்பட்டுள்ளன.
- சுகாதார காப்பீட்டு பிரீமியங்களுக்கு ஜிஎஸ்டியில் இருந்து விலக்கு அளிக்கப் பட்டுள்ளது.

**விவசாயம்:**

- விவசாய பயன்பாடு கருவிகள், உரங்கள் மற்றும் நீர்ப்பாசன உபகரணங்களுக்கான வரி 12% லிருந்து 5% ஆகக் குறைக்கப்பட்டுள்ளது.

**பிற துறைகள்:**

- கட்டுமானப் பொருட்களான சிமெண்ட் 28% லிருந்து 18% ஆகவும், மார்பிள், கிராணைட் போன்றவை 12% லிருந்து 5% ஆகவும் குறைக்கப்பட்டுள்ளன.
- புகையிலை மற்றும் குளிர்பானங்கள் மீதான வரி தொடர்ந்து அதிக விகிதத்தில் (40%) உள்ளது.

இந்த புதிய ஜிஎஸ்டி திருத்தங்கள் இந்திய பொருளாதாரத்தின் பல்வேறு பிரிவுகளின் தேவைகளைக் கவனித்து, அவர்களின் வளர்ச்சிக்கு வழிவகுக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன. சிறு வணிகர்கள், விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் மீதான நேரடி நேர்மறையான தாக்கத்தை கருத்தில் கொண்டு, இந்த திருத்தங்கள் ஒரே நாடு, ஒரே வரி என்ற ஜிஎஸ்டியின் அசல் கனவை வலுப்படுத்துவதாகக் கருதலாம்.

இது இந்தியா நவீன, சீரான, மற்றும் உற்பத்தித் திறன் மிக்க பொருளாதாரத்திற்கான பயணத்தைத் தொடர்கிறது என்பதற்கான அறிகுறியாகும்.

17 வருடங்களுக்கு முன்பு, 2008 ஆம் வருடத்தில், இந்தியாவின் 615 மாவட்டங்களில் நக்சல்வாத குழுக்களால் பாதிக்கப்பட்ட மாவட்டங்கள் 180 ஆக இருந்தன. அதாவது 10 மாவட்டங்களில் 3 மாவட்டங்கள் இந்திய இறையாண்மைக்கு கட்டுப்படாமல் இருந்தன.

நேபாளத்தின் பசுபதிநாதர் ஆலயத்தில் இருந்து ஆந்திரா திருப்பதி வரையிலுமான ஒரு நிலப்பகுதி, இந்த நிலப்பரப்பிற்கு "சிகப்பு தாழ்வாரம்"/Red Corridor என்ற பெயர் சூட்டப்பட்டு இந்திய தேசத்திற்கும், இந்திய ஒருமைப்பாட்டிற்கும் எதிரான ஒரு குழு ஆட்சி செய்து வந்தது. இவர்களுக்கு இந்திய ஜனநாயக ஆட்சி முறையிலும், தேர்தல் அரசியலிலும் நம்பிக்கை கிடையாது. இவர்களின் அதிகாரத்திற்கு உட்பட்ட பகுதிகளிலே அரசு பள்ளிகள், மருத்துவ மனைகள், ஏன் சாலைகளுக்கு கூட தடை விதித்திருந்தார்கள்.

அதன் பின் 2013இல் 126 மாவட்டங்களில் என்ற நிலை வந்தது. 2018இல் இதுவே

அதன் பின் 2005 ஆம் ஆண்டு பாதிக்கப்பட்ட பகுதி மக்களைக்கொண்டே சல்வா ஜூதும் என்ற அமைப்பு சத்தீஸ்கர் மாநில அரசால் உருவாக்கப்பட்டது. இது ஒரு தனியார் படை போல் செயல்பட்டு நக்ச ல்வாதிகளோடு ஆயுத போர் நடத்தியது. இதன் செயல்பாடுகள் ஆரம்பத்திலிருந்தே பல விமர்ச னங்களுக்கு ஆளானது.

மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டதாகக்கூறி இந்த அமைப்பிற்கு பல முட்டுக்கட்டைகள் போடப்பட்டு வந்தன. முழுதாக செயல்பட முடியாமல் போன இந்த அமைப்புக்கு 2011ம் ஆண்டு உச்ச நீதிமன்றம் தடை விதித்தது. அதற்கு காரணமாக இருந்தவர் பேராசிரியர் நந்தினி சுந்தர் பேரா. நந்தினி சுந்தர் IAS அதிகாரிகளின் குடும்பத்தை சே ர்ந்தவர் மட்டுமல்லாமல் இவருடைய கணவர் The Hindu நாளேட்டின் முன்னாள் தலைமை ஆசிரியர் திரு சித்தார்த் வரதராஜன் ஆவார் என்பது குறிப்பிடத்தக்கது. அதன் பின்பு

# நக்ஸல் நச்சுப் பாம்பை நசுக்கியது எப்படி?

— சி.சுரேந்திரநாத்

90ஆக குறைந்து, 2023இல் 38 ஆக குறைந்து இன்று வெறும் 18 மாவட்டங்கள் மட்டும் நக்ஸல் பாதிப்புள்ள மாவட்டம் என்ற நிலை ஏற்பட்டுள்ளது. உள்துறை அமைச்சர் அமித்ஷா அவர்கள் இந்தியாவிலிருந்து நக்ஸல் பாதிப்பை மார்ச் 2026 ஆறாம் மாதத்திற்குள் முழுமையாக தகர்த்து எறிவதாக உத்தரவாதம் கொடுத்து உள்ளார்.

இதற்கு முன்பு அரசுகள் பல வகையான அணுகு முறைகளை எடுத்தார்கள்

- நக்ஸல் குழுக்களோடு பேச்சுவார்த்தைகள் நடத்தி அவர்களுக்கு சலுகைகள் அளிப்பது
- மத்திய துணை ராணுவ படை களைக்கொண்டு (குறிப்பாக CRPF - மத்திய இருப்பு காவல் படை) அடக்க முயற்சிப்பது.


ஆனால் இந்த அணுகுமுறைகள் பெரிய அளவில் வெற்றியடைவில்லை.

நக்சல்வாதிகளின் செயல்பாட்டுக்கு பெரிய தடைகள் எதுவும் இல்லாமற்போனது. நக்ச ல்வாத இயக்கம் தொடங்கப்பட்ட காலத்தில் இருந்தே இவ்வாறு அவர்களுக்கு இந்திய சமூகத்தின் அறிவுஜீவி வர்க்கத்தில் ஒரு சாரார் அனுதாபிகளாக செயல்பட்டு வந்தார்கள்.

**2014 ஆண்டிற்கு பின்பு நடந்த பெரும் மாற்றம்:**

பிரதமர் மோதி அவர்கள் பாரதத்தின் தலைமை ஏற்ற பிறகு நக்சல்வாதிகளுக்கும் இந்திய இறையாண்மைக்கு எதிராக செயல்படுபவர்களுக்கும், இந்திய அரசியல் பிரதான நீரோட்டமான தேர்தல் அரசியலை புறக்கணிப்பவர்களுக்கும் இந்திய ஜனநாயகத் தின் சாதனங்களை துஷ்ப்ரயோகம் செய்யும் எல்லா வழிகளையும் அடைத்தார்.

முதலாவதாக பொது சிந்தனையில் தேசியவாதம் மேலோங்குவதற்கான கருத்துக்கள் கட்டமைப்பிற்கான முன்னெடுப்பு




ஆரம்பமானது. இதற்கு இந்தி பட இயக்குனர் விவேக் அக்னிஹோத்ரி தனது பொது வெளி எழுத்துக்களிலும் பேச்சுக்களிலும் "அர்பன் நக்சல்" என்ற சொல்லாடலையும் அதற்கு ஒரு வர்ணனையும் முன்னெடுத்தார்.

அடுத்ததாக பெரு நகரங்களில் வசிக்கும் அறிவு ஜீவிகளுக்கும் கிராம பகுதிகளிலும் வனப்பகுதிகளிலும் வசிக்கும் நக்சல் இயக்க தீவிரவாதிகளுக்கும் பாலமாக செயல்பட்ட பாதிரியார் ஸ்டான் ஸ்வாமி, மருத்துவர் பினாயக் சென், கோபட் காந்தி போன்றவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டார்கள்.

2019 ஆம் ஆண்டு அமித்ஷா உள்துறை அமைச்சராக பொறுப்பேற்ற பிறகு வெளி நாடுகளில் இருந்து பெறப்படும் நிதிக்கு பல கட்டுப்பாடுகளை விதித்து, கண்காணிப்புகளை அதிகரித்து சட்ட திருத்தங்களை கொண்டு வந்தார். இதுவே ஊடகங்கள், JNU, Hyderabad University, Jadavpur University போன்ற கல்வி நிறுவனங்கள் மற்றும் சட்டத்துறையில் செயல் பட்டு வந்த உஷா ராமநாதன், முரளிதர், சுதா பரத்வாஜ், காலின் கொன்சால்வேஸ் போன்ற சட்ட போராட்ட வல்லுநர்கள் போன்றோர்களை நக்சல் இயக்கத்தவர்களுக்கு உதவ முடியாமல் அடக்கியது

அதன்பின் போராட்ட களமான சத்தீஸ்கர், தெலங்கானா, மத்திய பிரதேசம், ஆந்திரம் போன்ற மாநிலங்களின் வனப்பகுதிகளில் ஒரு பன்முனை தாக்குதலுக்கு இயக்கங்கள் உருவாக்கபட்டன

- ஆழ்ந்த வன தாக்குதலை CRPF முன்னெடுக்கும். இதில் சிறப்பு பயிற்சிபெற்ற COBRA Battalion செயல்படும்
- மாநில காவலர்களின் சிறப்பு தாக்குதல் படை (STF) தேவைப்படும்போது வீரர்களை அளிக்கும்
- மாநில காவல் துறை பாதிப்பு குறைந்த பின் சட்டம் ஒழுங்கை சீராக பேணும்
- அந்த பகுதியை சேர்ந்த இளைஞர்களால் கொண்ட சிறப்பு படை ஒன்று வழித்தடம், பகுதி வாழ் மக்களோடு தொடர்பு கொள்வதற்கு போன்ற குறிப்பிட்ட தேவைகளுக்கு உதவும்
- பாதிக்கப்பட்ட அனைத்து மாநிலங்களின் உளவுத்துறைக்கும் மத்திய புலனாய்வு மற்றும் உளவுத்துறைக்கும் இடையே புரிதலும், ஒருங்கிணைப்பும் ஏற்படுத்தப்பட்டது.

எல்லாவற்றிற்கும் முக்கியமாக பாதிப்பு குறைந்தவுடனே அந்த பகுதிகளுக்கு துரிதமாக சாலைகள் அமைத்து, போக்குவரத்து வசதி ஏற்படுத்தி தரப்பட்டது. இதனால் அப்பகுதி மக்களுக்கு வாழ்வாதாரம் உயர்ந்தது. அவர்கள் தங்கள் பகுதி கிராமத்திற்குள்ளேயே முடங்காமல் வெளியே சென்று வர்த்தகம் செய்து, வேலை வாய்ப்புகள் பெற்று முன்னேற முடிந்தது.

இதற்குப் பின்பு முதன்மைப்பள்ளிகள், ரேஷன் கடைகள், முதன்மை சுகாதார கூடம் போன்ற அடிப்படை அரசு இயந்திரம் செயல்பட ஆரம்பித்தது. கல்வி, சுகாதாரம் மற்றும் அரசு வழங்கும் உணவுப்பொருட்கள், மானியங்கள் இன்ன பிற வசதிகள் அம்மக்களுக்கு நக்சல்வாதிகளால் மறுக்கப்பட்டு வந்தவை அனைத்தும் கிடைக்க ஆரம்பித்த பின் நக்சல்வாதிகளுக்கு மக்களின் ஒத்துழைப்பு முற்றிலுமாக நின்றது.

பொது மக்கள் ஒத்துழைப்பு, வெளிநாட்டுப் பணம், சர்வதேச அளவில் கட்டமைக்கப்பட்ட போராளி பிம்பம் எல்லாம் இழந்துவிட்டார்கள்.

கடைசியாக ஆயுதத்தை ஒப்படைத்தால் உயிர்வாழ்வீர்கள், இல்லையெனில் முடிவுரை எழுதப்படும் என்ற அமித்ஷாவின் கடைசி எச்சரிக்கையால் நக்ஸல்,மாவோயிஸ்ட் தலைவர்கள், கமாண்டர்கள் அடுத்தடுத்து சரணடைய ஆரம்பித்துள்ளனர்.

அரசின் தீர்க்கமான நடவடிக்கையால்

# புதிய உலக ஒழுங்கின் எழுச்சியும் ஐக்கிய நாடுகள் சபையின் வீழ்ச்சியும்

- இராஜா பரத்வாஜ்

1945-இல் ஐக்கிய நாடுகள் சபை (ஐ.நா.) நிறுவப்பட்டபோது, உலகைப் பாதுகாத்து நல்வழிப்படுத்தும் தார்மீகப் பொறுப்பை தன் தோளில் சுமந்தது. முதல் உலகப்போர், லீக் ஆப் நேஷன்ஸ் (உலக நாடுகளின் சங்கம் எனப்படும் ஐ.நா.வின் முன்னோடி) துவங்கப்பட்டு தோல்வி அடைந்தது, இரண்டாம் உலகப்போர் என்ற முப்பெரும் நிகழ்வுகளுக்குப் பின் மிகுந்த எதிர்பார்ப்புக்களுடன் துவங்கப்பட்ட இயக்கம் ஐ.நா. சபை. துவங்கி எட்டு தசாப்தங்கள் ஆன பின் அது காலத்துக்கு ஒவ்வாத அமைப்பு என்ற புள்ளியை நெருங்கிக்கொண்டிருக்கிறது.

**காலத்தால் உறைந்து போன பாதுகாப்பு கவுன்சில்**

அமெரிக்கா, பிரிட்டன், சீனா, பிரான்ஸ் மற்றும் ரஷ்யா என்று ஐந்து நிரந்தர உறுப்பினர்கள் கொண்ட பாதுகாப்பு சபை எவ்விதத்திலும் இன்றைய உலகத்திற்கு ஒவ்வாத தொகுப்பு. இன்றைய உலகின் மக்கள் தொகையில் வெறும் 6% மட்டுமே உள்ள ஐரோப்பாவிலிருந்து இரண்டு நாடுகள். கூட்டாக இரண்டு பில்லியன் மக்கள் தொகை கொண்ட ஆப்ரிக்கா மற்றும் தென் அமெரிக்காவில் இருந்து ஒரு நாடு கூட பாதுகாப்பு சபை உறுப்பினர் கிடையாது. உலகின் ஐந்தாவது மிகப்பெரிய பொருளாதாரம், உலகிலேயே மிகுந்த மக்கள் தொகை கொண்ட பாரதத்திற்கு அங்கு இன்றளவிலும் இடமில்லை. ஐந்து நிரந்தர உறுப்பினர்களிடம் இருக்கும் வீடோ என்ற தீர்மானங்களை நீர்த்துப்போகச் செய்யும் திறனை வைத்து தவிடு பொடி ஆக்கப்பட்ட தீர்மானங்கள் கணக்கிலடங்கா.

**வாய்ப்பேச்சில் வீரரடி**

இன்றைய ஐ.நா. வெற்றுப்பேச்சு மேடையாக மட்டுமே செயல்படுகிறது. ஐக்கிய நாடுகள் பொதுச் சபையில் உறுப்பினர் நாடுகள் ஒவ்வொன்றிற்கும் ஒரு ஓட்டு என்பது வெறும் குறியீட்டளவில் இருப்பதைத் தவிர எந்தப் பயனும் கிடையாது.

நாடுகளால் ஏவிவிடப்பட்ட எல்லை தாண்டிய பயங்கரவாதம், ஆக்கிரமிப்புச் செயல்கள் என்று எந்த ஒரு நிகழ்விற்கும் தீர்மானம் இயற்றுவதைத் தாண்டி எந்த ஒரு நடவடிக்கையும் ஐ.நா. எடுத்ததாக தரவுகள் இல்லை. பாகிஸ்தான் பயங்கரவாதி மசூத் அஸர், உலகளாவிய பயங்கரவாதியாக அறிவிக்கப்படவேண்டும் என்ற பாரதத்தின் கோரிக்கை சீனாவால் பலமுறை தடுக்கப்பட்டது நிதர்சனம். ஒருமித்த கருத்துடன் உலகத்தை காப்போம் என்ற முழக்கத்தோடு துவங்கப்பட்ட ஐ.நா.வின் பிற அமைப்புக்களான, யுனெஸ்கோ, மனித உரிமை மன்றம் போன்றவை வெளியிடும் பலநூறு பக்க அறிக்கைகள் ஆகியவற்றிற்கு ஒரு பழம்காசுக்கான மதிப்பு கூடக் கிடையாது. உலகம் கோவிட் நோயை எதிர்கொண்ட பொழுது, உலக சுகாதார நிறுவனம் ஒரு முறைகூட சீனா என்ற வார்த்தையை மறந்தும் உபயோகிக்கவில்லை. மொத்தத்தில் இன்றைய ஐ.நா. ஒரு முட்டுச்சந்து.

**காலி பெருங்காய டப்பா**

முன்னொரு காலத்தில், ஐ.நா.-வின் தீர்மானங்களுக்கு உலக நாடுகள் கட்டுப் பட்டன. இன்று பல நாடுகள் அவற்றை ஒரு பொருட்டாகவே மதிப்பதில்லை. 2003-இல் அமெரிக்கா தலைமையிலான ஈராக் யுத்தம் ஐ.நா.-வின் தீர்மானங்களை மீறியே நடந்தது.

ஒருகாலத்தில் ஐ.நா.-வின் அமைதிப்படை உலகில் மிகச்சிறந்த கட்டமைப்புகளில் ஒன்றாக இருந்தது. ஆனால் இன்று, கூலிப்படை களையும் உள்ளூர் அரசியல்வாதிகளையும் எதிர்க்க முடியாமல் மாலி நாட்டிலிருந்து, அமைதிப்படையை திரும்பப் பெற்றுக்கொண்டது ஐ.நா. காங்கோ மற்றும் சூடானில் உள்ள அமைதிப்படையை, அந்நாட்டு மக்கள் சந்தேகப்பார்வை கொண்டு நோக்குகிறார்கள். ஐ.நா. ஒருபுறம் ஜனநாயம் பற்றிய பெரும் பிரசங்கங்களை செய்துவிட்டு, மற்றொருபுறம் பல சர்வாதிகார நாடுகளுடன் கைகோர்த்து செயல்படுகிறது. பெண் விடுதலை பற்றி விவாதிக்கும் குழுக்களில் ஈரான், சவூதி அரேபியா போன்ற நாடுகளுக்கு முக்கிய இடம் கொடுக்கப்படுகிறது. பேச்சுக்கும் செயலிற்கும் இடையேயான தூரம் நாளுக்கு நாள் நீண்டுகொண்டே போகிறது.

**இரும்படிக்கும் இடத்தில ஈ?**

இன்றைய உலகத்தை தொழில்நுட்பம் புரட்டிப்போட்டு விட்டது, ஒற்றைப்புள்ளியில் இருந்த அதிகாரம் இன்று பன்முனைகளுக்கு பரவிவிட்டது. ஜனரஞ்சகவாதம் மற்றும் தேசியவாதம் ஆகியவை பல நாடுகளை புரட்டிப்போட்டுக்கொண்டு இருக்கின்றன. காலநிலை மாற்றம், தொற்றுநோய்கள் மற்றும் இணையப் போர் போன்ற பன்னாட்டு அச்சுறுத்தல்களுக்கு தீர்வு கொடுக்க முடியாமல் திக்குமுக்காடுகிறது இன்றைய ஐ.நா. ஒருகாலத்தில் ஐ.நா. மனித உரிமைக் காவலன் என்று அழைக்கப்பட்டது. ஆனால் இன்றோ, சீனா, ஈரான் போன்ற நாடுகள் மனித உரிமை மன்றத்தில் அவர்களுக்கு இருக்கும் சக்தியைப் பயன்படுத்தி தங்களுக்கு எதிரான மனித உரிமை புகார்களை நீர்த்துப்போகச் செய்கிறார்கள். மொத்தத்தில், இன்றைய ஐ.நா. இரும்படிக்கும் இடத்தில பறக்கும் ஈ.




**புதிய பாரதத்தின் எழுச்சி**

கடந்த தசாப்தத்தில் பாரதம், பிரதமர் நரேந்திர மோடியின் வழிகாட்டுதலில் விஸ்வகுரு இலக்கை நோக்கி வேகமாக நகர்ந்து கொண்டிருக்கிறது. இன்றைய பாரதம் தன் மென்சக்தியின் ஆகர்ஷணத்தால் உலகத்தை கவர்ந்து ஈர்த்துக் கொண்டிருக்கிறது. யோகா, ஆயுர்வேதம் போன்ற கலாசார குறியீடுகள் உலகத்தில் அனைத்து தரப்பினரும் ஏற்றுக்கொண்ட விஷயங்கள் ஆகிவிட்டன. உலக யோகா தினம், சவூதி அரேபியா உட்பட அனைத்து நாடுகளாலும் கொண்டாடப்பட்டு வருகிறது.

மருந்தியலில் நாம் பீடு நடை போட்டு முன்னேறிக்கொண்டிருக்கிறோம். கோவிட் பேரிடரின் பொழுது வாக்சின் மைத்ரி திட்டத்தின் மூலம் பல நட்பு மற்றும் ஏழை நாடுகள் பயன் பெற்றன. ஈரான், இஸ்ரேல், உக்ரைன், சிரியா, ஏமன் என்று பல போர் நடக்கும் பகுதிகளில் இருந்து இந்தியர்கள் மட்டுமல்லாது அங்கு சிக்கிக்கொண்ட பிற நாட்டு மக்களையும் பாதுகாப்பாக மீட்டிருக்கிறது பாரதம். சூரிய ஒளியை பயன்படுத்தி மின்சாரம் உற்பத்தி செய்வதை ஊக்குவிக்கும் சர்வதேச சோலார் கூட்டணியின் முன்னோடி மற்றும் கருத்தியல் தாய், நம் பாரதம். 2023ல், G20 அமைப்பின் தலைமைப் பொறுப்பை ஏற்ற பொழுது, எல்லோராலும் இருண்ட கண்டம் என்றழைக்கப்பட்ட ஆப்பிரிக்காவுக்கும் மரியாதை செய்தது பாரதம். நம் பணப்பரிமாற்றத்தை எளிதாக்கிய UPI (ஒருங்கிணைந்த பரிவர்த்தனை இடைமுகம்) இன்று பலநாடுகள் வியந்து நோக்கும் ஒரு முன்னுதாரணம். உலகத் தலைவன் என்று எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட அமெரிக்கா தன் குடிமக்கள் தடுப்பூசி பெற்றுக்கொண்டதன் சான்றை காகிதங்களில் கொடுத்துக்கொண்டிருந்த சமயத்தில் அதை எளிதாக உங்கள் கைபேசியில் டிஜிட்டல் முறையில் கொடுக்க முடியும் என்று செய்து காட்டியது நம் பாரதம்.

ரஷ்ய - உக்கிரைன் போரில் பாரதத்தின் நிலைப்பாடு, அமெரிக்க உள்ளிட்ட பலநாடுகளுக்கு எரிச்சலூட்டினாலும், பாரதம் தன் பாதையில் பீடுநடை போடுகிறது. இன்றைய பாரதம், நாளைய விஸ்வகுரு.

ஐ.நா. உலகம் என்னும் படகை இயக்கும் மாலுமி என்ற இடத்தில் இருந்து, இன்று படகில் அழையாது தொற்றிக்கொண்ட பெருச்சாளி என்ற இடத்திற்கு வந்துவிட்டது.

இன்றைய உலகத்தின் சக்திவாய்ந்த அமைப்புக்கள் பிராந்திய பார்வையோடு செயல்படுபவை, G20, QUAD (க்வாட்), BRICS (பிரிக்ஸ்), ASEAN (ஆசியான்) போன்ற அமைப்புக்கள், வீட்டோக்கள் இல்லாமல் விரைவில் முடிவெடுத்து அதை சிறப்பாக செயல்படுத்தவும் செய்கின்றன.

ஐ.நா. உலகிற்கு பயன்படும் விதத்தில் தன்னை மாற்றிக்கொள்ளவேண்டும். இன்றைய புதிய உலக ஒழுங்கு, ஒரு தலைவனின் பின் நடப்பதை விரும்பவில்லை, அனைவருடன் கைகோர்த்து முன்னேறவே விரும்புகிறது. இதை உணரும் வரை ஐ.நா.விற்கும் நம் ஊர் டீக்கடை பெஞ்சிற்கும் வித்தியாசம் ஏதும் கிடையாது. சுவாரசியமாக பேசிவிட்டு நடையைக்கட்ட வேண்டியதுதான்.


**தொகச்சொல்லித் தூவாத நீக்கி நகச்சொல்லி**
**நன்றி பயப்பதாந் தூது. (குறள் 685)**

“சொல்லவேண்டியவற்றைத் தொகுத்துச் சொல்லியும், வெறுப்பு ஊட்டக் கூடியவற்றை விலக்கியும், இனிய சொற்களால் கூறியும், நன்மையைத் தேடி தரவேண்டியது தூதரின் பண்பாகும்” என்று கூறுகிறார் திருவள்ளுவர். உலகத்தின் தூதுவனான ஐ.நா. இன்று இதில் ஒன்றைக்கூட செய்யவில்லை என்பதே நிதர்சனம்.










- தொகுப்பு : சி.பாண்டிக்குமார்










# இன்வெஸ்ட்மெண்ட் டிப்ஸ்

கோ. ரமேஷ், பொருளாதர நிபுணர்.

இப்பொழுது தங்கம் விலை ஏறிக்கொண்டே இருக்கிறது, நமக்கு தங்கத்தின் முதலீடு செய்யலாமா என்கிற ஒரு ஆசை வருகிறது.

அது போலவே 2023 - 24 ஆண்டுகளில் பங்கு சந்தை மிகப்பெரிய ஏற்றத்தை அடைந்தபோது அனைவருக்கும் பங்கு சந்தையில் முதலீடு செய்ய ஆசை வந்தது.

2007 முதல் 2012 வரை ரியல் எஸ்டேட் தொழில் வளர்ச்சி அடைந்ததால் அனைவருக்கும் நிலத்தின் மீது முதலீடு செய்ய ஆசை வந்தது.

இது பொதுவாகவே நமது அனைவருக்கும் மனதிற்குள் ஏற்படும் ஒரு ஆசை, இது எதனால் வருகிறது என்றால் இவ்வளவு பெரிய ஏற்றத்தை பார்த்த பொழுது நாம் இதை பயன்படுத்த முடியவில்லை என்கிற ஏக்கமும், இனிமேலாவது இந்த வாய்ப்பை விட்டு விடக்கூடாது என்கிற ஆதங்கமும் தான் காரணம்.

இது போல தான் கரன்சி மார்க்கெட் மற்றும் கிரிப்டோ கரன்சி மார்க்கெட். அதிலும் இதைப் பற்றி ஒன்றுமே தெரியாதவர்களும், மற்றவர்கள் பேசுவதை அல்லது தொலைகாட்சியில் வரும் செய்திகளை கேட்டு முதலீடு செய்ய மிக ஆர்வமாக உள்ளார்கள்.

**அனைத்து முதலீடுகளுக்குமே ரிஸ்க் உள்ளது. அதனால் தான் நாம் இங்கு முதலீட்டை நான்கு பிரிவுகளாக பிரிக்கிறோம். எனவே ஒரு சந்தை இறங்கினாலும் ஒரு சந்தை ஏறும்.**

ஆம், மேலே குறிப்பிட்டுள்ள அனைத்து விதமான முதலீடுகளிலும் லாபம் பெற முடியும். ஆனால் முதலீடு செய்வதற்கான நேரத்திற்காக நாம் காத்திருக்க வேண்டும், எப்பொழுதெல்லாம் பங்கு சந்தையோ, கரன்சி மார்க்கெட்டோ, புல்லியன் மார்க்கெட் எனப்படுகிற தங்கம் வெள்ளி சந்தைகளோ, கிரிப்டோ கரன்சி சம்பந்தப்பட்ட காயின்களோ ஏற்றம் அடைகிறதோ அப்பொழுதெல்லாம் முதலிடு செய்ய அனைவருக்கும் ஆர்வம் வருகிறது, முதலில் அது தவறு.

**முதலீட்டிற்கான முக்கியமான வழிகள்:**

ரூல் நம்பர் 1: முதலீடு செய்வதற்காக பணம் கடன் வாங்க கூடாது.

ரூல் நம்பர் 2: நம்மிடம் உள்ள அனைத்து பணத்தையும் ஏதாவது ஒரு குறிப்பிட்ட ப்ராடெக்ட்களில் முதலீடு செய்யக்கூடாது. முதலில் நம்மிடம் உள்ள பணத்தில், உதாரணத்திற்கு ரூபாய் ஒரு லட்சம் இருக்கிறது என்று வைத்துக் கொள்ளுங்கள், அதில் 20% அதாவது 20000 பணமாக நமது வங்கி கணக்கில் வைத்திருக்க வேண்டும். மீதமுள்ள 80000த்தில் 20000 நிலத்திலும், 20000 தங்கம் அல்லது வெள்ளியிலும், 20000 பங்கு சந்தையிலும் மற்றும் ஒரு 20000 மியூச்சுவல் ஃபண்ட்லும் முதலீடு செய்யலாம். மேலே குறிப்பிட்டவற்றில் கிரிப்டோ கரன்சி மட்டும் இங்கு நான் முதலீட்டிற்கு பரிந்துரை செய்யவில்லை, காரணம் கிரிப்டோ கரன்சி வர்த்தகத்திற்கான நெறிமுறை இந்தியாவில் இன்னும் முழுமையாக வரவில்லை. எனவே இதில் முதலீட்டிற்கு பரிந்துரை செய்யாதது லாபம் தராது என்பதற்காக அல்ல அதிக ரிஸ்க் உள்ளதால்...

சரி நீங்கள் கேட்க நினைப்பது புரிகிறது, மற்றவற்றில் ரிஸ்க் இல்லையா?

அனைத்து முதலீடுகளுக்குமே ரிஸ்க் உள்ளது. அதனால்தான் நாம் இங்கு முதலீட்டை நான்கு பிரிவுகளாக பிரிக்கிறோம். எனவே ஒரு சந்தை இறங்கினாலும் ஒரு சந்தை ஏறும். உதாரணத்திற்கு நாம் 2023 - 24 இல் பங்கு சந்தையில் 20000 முதலீடு செய்திருந்தோம் என்றால் முதலீடு செய்த பணமே சற்று கூடவோ அல்லது குறையவோ தற்பொழுது இருக்கும், ஆனால் நம்முடைய மற்றொரு 20000 முதலீடு தங்கத்தில் இருந்திருந்தால் இன்று ஒரு பெரிய லாபத்தை கொடுத்திருக்கும்.

அதுபோலவே பங்கு சந்தையும் 2008 முதல் 2013- 14 வரை பெரிய ஏற்றங்களை சந்திக்கவில்லை, ஆனால் அந்த நேரம் ரியல் எஸ்டேட் மிகப்பெரிய ஏற்றத்தை அடைந்தது. அந்த நேரத்தில் நமக்கு ரியல் எஸ்டேட்டில் லாபம் கிடைத்திருக்கும்.

அதற்காகவே நமது முதலிடம் நான்காக பிரித்து முதலில் செய்ய பரிந்துரை அளிக்கிறேன்.

இது முதல் படி, இரண்டாவது படி: இப்பொழுது ஒரு லட்சம் என்னிடம் இருக்கிறது நான் 20000 வங்கியில் டெபாசிட் வைத்திருக்கிறேன் மீதமுள்ள 80000தை உடனே இப்போ உள்ள விலைக்கு ஷேர் மார்க்கெட், தங்கம், மியூச்சுவல் ஃபண்ட் முதலியவற்றில் முதலீடு செய்யலாமா என்றால் கூடாது.



ஒரு லட்சம் முதலீடு செய்ய தயார் என்றால் அப்பொழுது முதல் நீங்கள் மேற்கூறிய அனைத்து வகையான மார்கெட்டுகளின் ஏற்ற இறக்கங்களை கவனிக்க ஆரம்பிக்க வேண்டும் ஒவ்வொரு துறையும் குறிப்பிட்ட ஏற்றத்திற்கு பின்பு ஒரு சிறிய இறக்கம் அதாவது டெக்னிக்கல் வார்த்தையில் சொன்னால் கரெக்ஷன் வரும். அந்த நேரத்தை நாம் பயன்படுத்தி முதலீடு செய்ய வேண்டும்.

ஏன் இப்படி வரும் என்றால், உதாரணத்திற்கு நாம் ஐந்து கிலோ மீட்டர் ஓட்டப்பந்தயத்தில் ஓடுகிறோம் என்றால், வேகமாக ஓட்டத்தை ஆரம்பித்து ஐந்து கிலோ முழுவதும் மிக வேகமாக ஓடி இலக்கை அடைய இயலாது, சிறிது தூரம் வேகமாக ஓடிய பின் மூச்சு வாங்கும் அப்போது சிறிது நிற்க வேண்டும் அல்லது ஓட்டத்தை மெதுவாக்கி சற்று ஓய்வெடுக்க வேண்டும். மூச்சிரைப்பது குறைந்த பின்பு மீண்டும் ஓட தொடங்குவோம்,

அதுபோலவே அனைத்து சந்தைகளும் பங்கு சந்தை உட்பட மிக வேகமாக ஏறும் போது அது ஒரு குறிப்பிட்ட ஏற்றத்தை அடைந்து பின்பு நான் குறிப்பிட்ட அந்த மூச்சு வாங்குவது போல அது ஒரு இடத்தில் நிற்கும் அல்லது இறக்கத்தில் வரும், அதை இறக்கமாக பார்க்காமல் அந்த இடத்தில் முதலீடு செய்வதே புத்திசாலித்தனம். அவ்வாறு செய்யும்போது நமக்கு ரிஸ்க் குறைகிறது. மீண்டும் அந்த ஏற்றத்தில் நம்மால் பங்கு கொள்ள முடியும்.

மேலும் ஒரே நேரத்தில் அனைத்து சந்தைகளுக்கும் முதலீடு வாய்ப்பு வருமா? என்றாலும் வராது. எந்த சந்தை நாம் குறிப்பிட்ட ஏற்றத்திற்கு பிறகு இறக்கத்தை சந்தித்து வாய்ப்பு கொடுக்கிறதோ அதில் முதலீடு செய்ய வேண்டும். பின்பு வாய்ப்பு கிடைக்கும் போது அடுத்தடுத்த சந்தைகளில் முதலீடு செய்யலாம். இதுவே முதலீடு செய்யும் முறை.

இன்னும் விரிவாக ஒவ்வொரு சந்தை பற்றியும் அலசி தெரிந்துக் கொள்ள தயாராக இருங்கள்..

**(தொடரும்...)**

# ஆர்.எஸ்.எஸ். 100–இந்த நாடு ஹிந்து நாடு (பகுதி 1)

– இராம . வெங்கடாத்ரி

## ஹிந்து ராஷ்ட்ரம்

நூற்றாண்டு கண்ட ஆர்.எஸ்.எஸ்-ன் சித்தாந்த அடிப்படை "இந்த நாடு ஹிந்து நாடு''. 'ஹிந்து பூமியே உனக்காக இந்த உடல் வீழட்டும்சு என்றுதான் ஆர்.எஸ்.எஸ்.-ல் பாடப்படும் தினசரி பிரார்த்தனை ஆரம்பிக்கிறது. ஆர்.எஸ். எஸ் நிறுவனர் டாக்டர் ஹெட்கேவார், "இது ஹிந்து ராஷ்ட்ரம்" என்று ஆணித்தரமாகக் கூறுவார். "இது ஹிந்து ராஷ்ட்ரம்'' என்ற இந்த சித்தாந்த அடிப்படையைத் தமிழ்ப்படுத்தி "இந்த நாடு ஹிந்து நாடு" என்று இந்தக் கட்டுரையில் குறிப்பிடுகிறோம்.

## ஹிந்து மதமும் ஹிந்து ராஷ்ட்ரமும்

ஹிந்து மதம் என்பது வேறு, ஹிந்து ராஷ்ட்ரம் என்பது வேறு. ஹிந்து மதம் என்றதும் நாம் எல்லோரும் முருகன், பெருமாள், சிவன் போன்ற ஒரு ஹிந்துக் கடவுளை வழிபடுவதைக் குறிப்பதாகக் கருதுகிறோம். ஹிந்து மதம் என்பது வழிபாட்டுக் கூறுகளுடன் நின்றுவிடாமல், வாழ்வியல், பண்பாடு என்று அனைத்தையும் உள்ளடக்கியது. ஹிந்து ராஷ்ட்ரம் என்பது இந்த நாட்டின் அடையாளம் ஹிந்துத் தன்மை என்பதைக் குறிக்கிறது.

## இந்த தேசத்தின் தன்மை ஹிந்துத் தன்மை

இந்த நாட்டின் புகழ்மிக்க மன்னன் ஒருவரைச் சொல்லுங்கள் என்றால் ராஜராஜராஜ சோழனைப் போன்ற ஒரு மன்னனின் பெயரைச் சொல்வோமே அன்றி பாபரைச் செ ால்ல மாட்டோம். ராஜ ராஜ சோழன் ஒரு ஹிந்து மன்னன். இந்த நாட்டிற்குப் பெருமை சேர்க்கும் புகழ் மிக்க மன்னனாக நாம் கருதுவது ஒரு ஹிந்து மன்னனைத்தான்

இந்த நாட்டின் பாரம்பரியமான புத்தகம் ஒன்று சொல்லுங்கள் என்று யாராவது கேட்டால் ராமாயணம், மகாபாரதம், பகவத்கீதை, திருக்குறள் இப்படிப்பட்ட நூல்களின் பெயர்களைச் சொல்லுவோம். இப்படி நாம் சொல்லக்கூடிய நூல்கள் எல்லாமே ஹிந்து நூல்களாகத்தான் இருக்கும்.

இந்த நாட்டின் மருத்துவ முறை என்று கேட்டால் ஆயுர்வேதா, சித்த மருத்துவ முறை என்போம். இவை எல்லாம் ஹிந்து பாரம்பரிய மருத்துவ முறைகள். இது போல இந்த நாட்டின் கலை, பண்பாடு என்று எதைப் பார்த்தாலும் அதில் ஹிந்து அடையாளம் இருக்கும்.

ஹிந்து மன்னர்கள் பெற்ற வெற்றியைத்தான் இந்த நாட்டின் வெற்றியாக இந்த நாட்டின் வரலாறு கூறுகிறது. ஹிந்து மன்னர்களின் தோல்வியை இந்த நாட்டின் வரலாறு இந்த நாட்டின் தோல்வி என்றே குறிப்பிடும். சுருக்கமாகச் சொன்னால் ஹிந்து என்பதை இந்த நாட்டில் இருந்து பிரித்தால் இந்த நாடு என்ற ஒன்றே இருக்காது.

இந்த நாட்டின் பாரம்பரியம் என்பது ஹிந்து பாரம்பரியம். இந்த நாட்டின் கலாச்சாரம் என்பது ஹிந்து கலாச்சாரம். இந்த மண்ணின் வாசனை ஹிந்துத்தன்மை. இந்த ஹிந்துத் தன்மையைத்தான் ஹிந்து ராஷ்ட்ரம் என்று சொல்கிறோம்.

தொன்றுதொட்டு வரும் இந்த தேசிய அடையாளத்தை "இந்த நாடு ஹிந்து நாடு'' என்றும், "ஹிந்துஸ்தானம்'' என்றும், "ஹிந்து ராஷ்ட்ரம்'' என்றும் பல வகையாகக் குறிப்பிடுகிறோம்.

## குழப்பம் ஏன்?

இந்த நாடு ஹிந்து நாடு என்பது "உள்ளங்கை நெல்லிக் கனி'' போல இவ்வளவு தெளிவாகப் புரிந்தாலும், இதை பலர் ஏற்க மறுப்பது ஏன்? இதை நம் நாட்டின் அறிவு ஜீவிகள் ஏற்றுக் கொள்ள முடியாமல் தானும் குழம்பி, மற்றவர்களையும் குழப்பிக் கொண்டிருப்பதற்கான காரணங்கள் என்னென்ன? இவற்றை அடுத்தடுத்த பகுதிகளில் காண்போம். **(தொடரும்...)**

> ஹிந்துத்தன்மை என்பது இந்த மண்ணின் வாசனை. இந்த ஹிந்துத் தன்மையைத்தான், ஹிந்து என்கிற தேசிய அடையாளத்தைத்தான் ஹிந்து ராஷ்ட்ரம் என்று சொல்கிறோம்.

# வெளிச்சம் படாத வேர்கள்

# வீரன் அழகு முத்துக்கோன்

– யா.சு. கண்ணன்



இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சி ப்ளாஸி போருக்குப் பின் 1757 ஆம் ஆண்டு தொடங்கியது. முதலில் வங்கத்தில் தன் அரசியல் ஆதிக்கத்தை கிழக்கு இந்திய கம்பெனி தொடங்கியது. 1857 ஆம் ஆண்டு முதலாம் இந்திய சுதந்திரப் போருக்குப் பிறகு, பிரிட்டிஷ் அரசாங்கம் இந்திய ஆளுகையை எடுத்துக் கொண்டது.

பாரதத்திற்குள் வர்த்தகம் செய்ய வந்தவர்கள் நாட்டையே அடிமைப்படுத்தினார்கள்.

ஆனால், இந்த தொடக்கக்காலம் முதலே, நாடெங்கும், ஆங்காங்கே ஆங்கிலேயர்களை எதிர்த்து, நம்மவர்கள் போரிட்டுத்தான் வந்திருக்கிறார்கள்.

அவர்களின் வீர வரலாற்றைத் தான் நாம் இங்கு பதிவுச் செய்ய உள்ளோம். வெளிச்சம் படாத பல வேர்களை நாம் காண முயற்சிக்கலாம்.

**தமிழ்நாட்டில் ஆங்கிலேயரை எதிர்த்துப் போரிட்டு உயிர் துறந்த முதல் சுதந்திரப் போராட்ட வீரர் அழகு முத்துக்கோன்**

1757 ஆம் ஆண்டு ப்ளாஸி போருக்கு பல ஆண்டுகளுக்கு முன்பாகவே கூட கொஞ்சம் கொஞ்சமாக, பல்வேறு பகுதிகளிலிருந்த நவாப்களின் சார்பாக வரி வசூலிக்கும் பணியை ஆங்கிலேயர்கள் மேற்கொண்டு, நாட்டின் கட்டமைப்பிற்குள் உள் புகுந்தார்கள். ஆங்கிலேயர்களை எதிர்த்தவர்கள் கலகக்காரர்கள் என்று முத்திரை குத்தப்பட்டு ஒடுக்கப்பட்டார்கள்.

இப்போதும், தமிழ்நாட்டில் ஆங்கிலேயரை எதிர்த்துப் போரிட்டு உயிர் துறந்த முதல் சுதந்திரப் போராட்ட வீரர் அழகு முத்துக்கோன் பற்றி பார்க்கலாம்.

இந்தியாவின் முதல் விடுதலைப் போர் 1857ல் நடந்தது என வரலாற்று நூல்கள் கூறுகின்றன. ஆனால் அதற்கு 100 ஆண்டுகளுக்கு முன்பே பிரிட்டிஷாருக்கு எதிராக நமது தமிழ்நாட்டில் போர் நடந்திருக்கிறது. அந்த போரில் வீரமரணம் அடைந்தவர்தான் அழகுமுத்துக்கோன், ஆங்கிலேய அரசுக்கு எதிராக வரிகட்ட மறுத்து தூக்கிலிடப்பட்டவர் வீரபாண்டிய கட்டபொம்மன். ஆனால் அவருக்கு முன்பே ஆங்கிலேயர்களை எதிர்த்து வரிகட்ட மறுத்து வீர மரணமடைந்தவர் அழகுமுத்துக்கோன்.

1728ல் தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள கட்டாலங்குளத்தில் பிறந்தவர். இவரது தந்தை அழகுமுத்துக்கோன் - தாய் அழகு முத்தம்மாள்.அந்த கால வழக்கப்படி தந்தை பெயரே இவருக்கும் சூட்டப்பட்டு வீர அழகுமுத்துக்கோன் என அழைத்தனர். 1729ஆம் ஆண்டு இவரது தம்பி சின்ன அழகு முத்துக்கோன் பிறந்தார். இவர்கள் அழகுமுத்து சகோதரர்கள் என்று அழைக்கப்பட்டனர்.

1750ல் தந்தை மன்னர் அழகுமுத்துக்கோன் அனுமந்தகுடி போரில் மரணம் அடைந்தார். தந்தையின் மரணத்தை தொடர்ந்து தனது 22 வயதில் அண்ணன் அழகுமுத்துக்கோன் கட்டாலங்குள சீமையின் மன்னரானார்.

வீர அழகுமுத்துக்கோனுக்கு எட்டயபுரம் மன்னரான ஜெகவீரராமபாண்டிய எட்டப்பர் மன்னர் சிறந்த நண்பராக இருந்தார்.

அழகுமுத்துக்கோன் ஆங்கிலேயர்கள் தன்னுடைய நாட்டில் வியாபாரம் செய்வதை விரும்பாத நிலையில், 1750ஆம் ஆண்டில் பிரிட்டிஷ் தளபதி அலெக்சாண்டர் கிரேன் மற்றும் மருதநாயகம் என்கிற கான்சாகிப் ஆகியோர் எட்டயபுரம் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளுக்கு வரி வசூலிக்க வந்தனர்.

அழகுமுத்து சகோதரர்கள், ஜெகவீரராம எட்டப்பர் உள்ளிட்டோர் ஆங்கிலேயர்களுக்கு வரி செலுத்துவதில்லை என முடிவு செய்தனர். அதோடு நில்லாமல், “வரி வசூல் செய்ய வந்தால் ஆங்கிலேயர்களின் தலை இந்த மண்ணில் உருளும்” என்று கடிதமும் அனுப்பினர்.

இதனால் ஆத்திரம் கொண்ட பிரிட்டிஷார்கள் எட்டயபுரபாளையத்தில் தனது படைகளை குவித்தனர். எட்டயபுரம் பாளையத்துக்கு ஆதரவாக அழகுமுத்து சகோதரர்கள் ஆங்கிலேயர்களுக்கு எதிராகப் போராடி போரில் வென்றனர். இதுதான் பிரிட்டிஷாருக்கு எதிராக நடந்த முதல் போர் என வரலாறு கூறுகிறது. இதைத்தொடர்ந்து பல இடங்களில் ஆங்கிலேயர்களுக்கு எதிர்ப்பு கிளம்பிய நிலையில், 1755 பிப்ரவரி மாத தொடக்கத்தில் திருநெல்வேலி சீமை நோக்கி ஒரு பெரிய ஆங்கிலேய படை அணிவகுத்தது. இந்தப் படையெடுப்பின் முக்கிய நோக்கம் தென்நாட்டு அரசர்களிடம் இருந்து கப்பம் வசூலிப்பதும், கும்பினிகளின் அதிகாரத்தை தென் நாட்டில் நிலைநிறுத்துவதுமாகும்.



1755ல் மதுரையில் இருந்து ஆங்கிலேயப் படை திருநெல்வேலிக்கு வருவதை அறிந்து அவர்களை எதிர்க்க முடிவு செய்த மன்னர் பூலித்தேவனுக்கு அழகுமுத்துக்கோன் சகோதரர்கள் உதவி செய்ய முன் வந்தனர். இதுவே குறுநில மன்னர்களின் கூட்டமைப்புக்கான முதல் படியாக அமைந்தது.

1755ல் ஏப்ரல் 7ம் தேதியன்று எட்டயபுரம் பெருமாள் கோவிலை தாக்க வந்த ஆங்கிலேய கிழக்கிந்திய கம்பெனிக்கு எதிராக வீர அழகுமுத்துக்கோனின் படையை வழிநடத்திய சின்ன அழகுமுத்துக்கோனை ஆங்கிலயர்கள் சுட்டுக் கொன்றனர்.

தனது தம்பியின் மரணத்தை தாங்கிக் கொள்ள முடியாத மன்னர் வீர அழகுமுத்துக்கோனும், அவரது வீரர்களும் கடும் போரில் ஈடுபட்டனர். போர் முடிவடையும் தருவாயில் பிரிட்டிஷ் படைகள் பின்வாங்கின. அப்போது அழகுமுத்துக்கோனின் வீரத்தை நன்கறிந்த கான்சாகிப் (மருதநாயகம்) எட்டயபுரம் அரண்மனையை தாக்கப்போவதாக அறிவித்தார். அந்த நிலையில் அழகுமுத்துக்கோன் எட்டயபுரம் மன்னரையும், மக்களையும் பாதுகாப்பான இடத்திற்கு அனுப்பி வைத்தோடு படையைத் திரட்டி பெத்தநாயக்கனூர் கோட்டையில் இருந்த போது கான்சாகிப் படைகள் தாக்குதலில் ஈடுபட்டன. வீர அழகுமுத்துக்கோனும் அவரது தளபதிகளும் கடுமையாகப் போரிட்டனர். அப்போது அழகுமுத்துக்கோனின் குதிரை சுட்டுதள்ளப்பட்டது.

அழகுமுத்துகோனின் வலது காலிலும் சுடப்பட்டது. இருந்தபோதிலும் ரத்தம் சொட்ட, சொட்ட தொடர்ந்து மூன்று மணி நேரம் போர் புரிந்தார் அழகுமுத்துக்கோன். பல வீரர்கள் இறந்தனர்.

அழகுமுத்துக்கோனையும், அவரது 6 தளபதிகளையும், 248 வீரர்களையும் ஆங்கிலேயப்படை சிறை பிடித்தது. நடுக்காட்டுச்சீமை பகுதிக்கு அழைத்துச் சென்று பீரங்கி முன்பு நிறுத்தி வரி செலுத்துமாறு வற்புறுத்தினர்.

**தாய்நாட்டுக்காக மரணத்துக்கு முத்தம்:**

மன்னிப்பு கேட்டால் உயிர் மிஞ்சும் என எச்சரித்தனர். ஆனால் எதற்கும் அஞ்சாத அழகுமுத்துக்கோன், வரி கட்ட ஒப்புக்கொள்ள முடியாது என்று மறுத்துவிட்ட நிலையில் வீரன் அழகுமுத்துக்கோனும் 6 தளபதிகளும் பீரங்கியால் சுட்டுக் கொல்லப்பட்டனர். இதில், 7 பேர் உடல்களும் சிதறி உயிரிழந்தனர். அவர்களின் உடல்கள் சேகரிக்கப்பட்டு, எட்டயபுரம் அருகில் உள்ள சோழாபுரம் கண்மாயில் எரியூட்டப்பட்டது. “சேவைக்காரர் சண்டை கும்மி” பாடல் அழகுமுத்துக்கோனின் போரையும் அவர் போரில் கொல்லப்பட்டதையும் கூறுகிறது. தனது நாட்டுக்காகவும், நாட்டு மக்களுக்காகவும் இவர் மரணத்தை முத்தமிட்ட ஆண்டு 1759 அழகுமுத்து வரலாறுகளில் “அழகுமுத்து சேர்வைக்காரன்” என்றே குறிக்கப்பட்டுள்ளது. இவரின் முன்னோர்கள் மதுரையை ஆண்டு வந்த திருமலை நாயக்கர் படையில் இருந்த கோனார்கள் என்றும், அவர் காட்டிய தீரத்திற்காக மன்னர் கொடுத்த பட்டமே சேர்வைக்காரன் என்றும் கூறப்படுகிறது.

வரலாற்றில் முகம் தெரியாமல் மறைக்கப்பட்ட வீரர்களில் அழகுமுத்துவும் ஒருவர்.

# விழாக்களும் விரதங்களும்

-செல்வம்

**நவம்பர் 02 -துளசி விவாகம்:** துளசியை நாம் ஒரு தெய்வமாக போற்றுகிறோம் . “விஷ்ணுப்ரியா”, “விஷ்ணுவிற்கு பிரியமானது” எனவும் அழைக்கப்படுகிறது. விஷ்ணு - சாளகிராமம் வடிவில், பிரபோதினி ஏகாதசி அன்று, துளசியை மணந்தார். இந்த நிகழ்வின் நினைவாக, துளசி விவாகம் நடத்தப்படுகிறது.

துளசி விவாஹம் நடத்தும் பக்தர்கள் துளசி செடியை தங்கள் சொந்த மகளாகக் கொடுத்து, கன்னியாதான சடங்கை மேற்கொள்வார்கள். கன்னியாதானம் என்பது, ஒருவர் செய்யக்கூடிய தானங்களில் மிகப்பெரிய தானம் அல்லது தர்மச் செயலாக நம்பப்படுகிறது. எனவே, கன்னியாதானத்துடன் திருமணம் தொடர்பான சடங்குகள் மற்றும் விழாக்களை நடத்துவதற்கு இந்த நாள் மிகவும் புனிதமான நாளாகக் கருதப்படுகிறது. கடவுள்களுக்கு துளசி இலைகளை காணிக்கையாக செலுத்தாமல் எந்த பூஜையும் முழுமையடையாது. இது கிருஷ்ணர், விஷ்ணு மற்றும் லட்சுமி தேவி ஆகியோரால் விரும்பப்படுகிறது,





**நவம்பர் 4- வைகுந்த சதுர்தசி:** இது சிவபெருமானையும், விஷ்ணுவையும் வழிபடும் நாள். இந்த நாளில் சிவன் விஷ்ணுவுக்கு சுதர்சன சக்கரத்தை அளித்ததாக நம்பப்படுகிறது. ஶ்ரீ மஹா விஷ்ணு, சிவபெருமானை காசியில் ஆயிரம் தாமரை மலர்களால் பூஜை செய்ய எண்ணினார், அவ்வாறு பூஜை செய்யும் போது ஒரு மலர் குறைந்து, இதனால் வருந்தின மஹாவிஷ்ணு, பூஜையை நிறைவு செய்யும் பொருட்டு, தனது கண்ணையே எடுத்து சிவனை பூஜித்தார். இதனால் மனம் குளிர்ந்த சிவபெருமான், ஶ்ரீ மஹா விஷ்ணுவிற்கு சுதர்சன சக்கரத்தை அளித்தார். இந்த நாளில் பக்தர்கள் விரதம் இருந்து சிவன் மற்றும் விஷ்ணுவை வழிபடலாம் .

வைகுந்த சதுர்த்தசி வடக்கில் காசியில் மிகச் சிறப்பாக வழிபாடு செய்யப்படுகிறது. அதிகாலையில் சிவனையும், நள்ளிரவில் விஷ்ணுவையும் வழிபடுவார்கள். நள்ளிரவில் நடக்கும் வழிபாட்டில் விஷ்ணுவிற்கு தாமரை மலர்களால் சகஸ்ரநாம அர்ச்சனை செய்யப்படும். காலையில் மணிகர்ணிகா கட்டத்தில் ஸ்நானம் செய்து சிவபூஜை செய்வார்கள். இந்த வழிபாடு சகல பாவங்களையும் நீக்குவதாக நம்பப்படுகிறது.

**நவம்பர் 12 -காலபைரவ ஜெயந்தி:** சிவனின் அவதாரமான கால பைரவருக்கு அர்ப்பணிக்கப்பட்ட ஒரு முக்கியமான பண்டிகையாகும். தீய சக்திகளிலிருந்து பாதுகாத்துக் கொள்ளவும், எந்தவொரு ஆபத்துகளிலிருந்தும் அல்லது இயற்கைக்கு மாறான மரணத்திலிருந்தும் விடுவித்துக் கொள்ளவும், இயற்கைக்கு மாறான நிகழ்வுகளிலிருந்து பாதுகாத்துக் கொள்ளவும் இந்த விழா கொண்டாடப்படுகிறது.

கால பைரவரை வழிபடுபவர்கள் மற்றும் அவரது ஜெயந்தி அன்று விரதம் அனுஷ்டிப்பவர்கள் எல்லா பாவங்களிலிருந்தும் விடுபட்டு வாழ்க்கையின் அனைத்துத் துறைகளிலும் வெற்றி பெறுகிறார்கள். இந்த புனித நாளில், பக்தியுடன் பைரவ அஷ்டக பாராயணம் செய்வதால் பயமுறுத்தும் கனவுகளை அழித்து அனைத்து முயற்சிகளிலும் வெற்றி கிடைக்கும்.

# அன்னாபிஷேகம்

**நவம்பர் 5:** அன்னாபிஷேகம், ஐப்பசி பௌர்ணமி நாளில் சிவாலயங்களில் நடைபெறும் ஒரு சிறப்பு வழிபாடு ஆகும். இந்த பூஜையின் போது, சிவபெருமானை அன்னத்தினால் அலங்காரம் செய்து சிறப்பு பூஜைகள் செய்யப்படும்.

அன்னத்தின் முக்கியத்துவத்தையும், தெய்வீகத்தன்மையையும் உணர்த்துவதே இதன் நோக்கமாகும். அனைவருக்கும் அன்னம் பாலிக்கும் அன்ன பூரணியை தனது வாம பாகத்திலேக் கொண்ட மாதொரு பாகனை அன்னாபிஷேகம் செய்து வழிபடுவதால் உலகில் பஞ்சம் வராது என்பது உண்மை.

தில்லையிலே அனுதினமும் காலை பதினோறு மணியளவில் ரத்ன சபாபதிக்கு அன்னாபிஷேகம் நடைபெற்று அந்த அன்னம் பக்தர்கள் அனைவருக்கும் பிரசாதமாக வழங்கப்படுகின்றது. எனவேதான் இத்தலத்தை அப்பர் பெருமான் அன்னம் பாலிக்கும் தில்லை சிற்றம்பலம் என்று சிறப்பித்துப் பாடினார். இந்த அன்னாபிஷேகத்தை தரிசித்து பிரசாதத்தை ஏற்றுக் கொண்டவர்களுக்கு என்றுமே அன்ன ஆகாரத்திற்கு கவலையே இல்லை.

அன்னத்தின் பெருமையை தைத்ரிய உபநிஷத் இவ்வாறு கூறுகிறது, "நானே உணவு, நான் உணவை உண்பவன், நான் படைப்பவன், உயிர்களை வாழ்விக்கும் அம்ருதத்தின் மையமாக உள்ளேன். யார் அன்னமாக உள்ள என்னைப் பகிர்ந்துகொள்கிறானோ அவ்விதம் செய்வதனால் அவன் என்னைக் காக்கிறான். உணவாக இருக்கின்ற நான், பகிர்ந்துகொள்ளாமல் உணவு உண்பவனை உண்ணுகிறேன். நான். ஸூர்யனுடைய ஒளியைப்போல முழு உலகையும் வ்யாபிக்கிறேன். யார் இவ்விதம் அறிகிறானோ அவன் முக்தியடைகிறான்." என்று கூறுகிறது, மேலும், அன்னத்தை எப்போதும் அதிகமாகவே சமைக்க வேண்டும் என்றும், உணவை வீணாக்க கூடாது என்றும், இதனை ஒரு விரதமாக கொள்ள வேண்டும் என்றும் வலியுறுத்துகிறது.



மேலும் ரிக் வேதம், "பூமியை சார்ந்துள்ள உயிரினங்கள் அனைத்தும் உணவிலிருந்து தோன்றுகின்றன. மேலும், உணவினாலேயே வாழ்கின்றன. முடிவில் இந்த உணவையே அடைகின்றன. உயிரினங்களுக்குள் உணவே முக்கியமாகவும் முதன்மையாகவும் உள்ளது. ஆகவே உணவு அனைவருக்கும் மருந்தாக சொல்லப்படுகிறது. எவர்கள் உணவை ப்ரஹ்மனாக தியானம் செய்கிறார்களோ அவர்கள் அனைத்து விதமான உணவையும் அடைவார்கள். உயிரினங்கள் உணவிலிருந்து தோன்றுகின்றன. தோன்றியவை உணவினால் வளர்கின்றன. உயிரினங்களால் உணவு சாப்பிடப்படுகிறது. உணவு உயிரினங்களை சாப்பிடுகிறது . ஆகவே அந்த உணவு அன்னம் என்று சொல்லப்படுகிறது" என்று சொல்கிறது.

நீண்ட காலமாக குழந்தை பெற்று மகிழ முடியாத தம்பதிகள், அன்னாபிஷேக பிரசாதம் சாப்பிட்டால், குழந்தை பாக்கியம் பெற்று மகிழ்வர். சிவப்பிரசாத அன்னம் உண்பவர்களுக்கு உண்ணா குறைபாடுகள் எப்போதும் இல்லை. அவர்களின் வீட்டில் எப்போதும் தானியங்கள் நிரம்பி இருக்கும். ஊர் செழிக்கும், கலைகள் மேம்படும், மக்களின் மனதில் மகிழ்ச்சி நிலவுமென நம்பப்படுகிறது.

# மஹான்கள் தரிசனம் – மஹான் கோடகநல்லூர் ஸ்ரீஸுந்தர ஸ்வாமிகள்

--ராமகிருஷ்ணன் சுப்ரமணியன்,அரிமழம்

நம் சனாதன தர்மத்திற்கு சவால்கள் ஏற்படும்போது, இறை அவதாரங்களும், மஹான்களும் உதித்து நம் தேசத்தையும் தர்மத்தையும் பாதுகாத்து வருகின்றனர். 19-ம் நூற்றாண்டில் நமது சனாதன தேசம் பல இன்னல்களுக்கு ஆளானது. மதமாற்றம், தீண்டாமை, பெண்ணடிமைத்தனம், நாத்தீகவாதம் என்று தர்மத்தையும், தேசத்தையும் பலவீனப்படுத்தும் கேடுகள் பலமடைந்தது. இந்த சவால்களை எதிர்கொள்ள ஸ்ரீ பரமேஸ்வரன் இப்புவியில் ஸ்ரீ சுந்தர ஸ்வாமிகளாக ஜனித்தார். கலி நாலாயிரத்து தொள்ளாயிரத்து முப்பத்து மூன்றாம் ஆண்டில், கரவருஷம் கார்த்திகை மாதம் இருபதாம்நாள், அமாவாசை, அனுஷ நக்ஷத்ரம், சனிக்கிழமை (03.12.1831) ஸ்ரீ சுந்தர ஸ்வாமிகள் அவதரித்தார்.

நம் தேசத்தின் தென்பகுதியில் தக்ஷிண கங்கை என்று போற்றப்படும் தாமிரபரணி நதி பாயும் திருநெல்வேலி நகருக்கு வடக்கே 12கல் தொலைவில் சித்திரா நதிக் கரையில் கங்கைகொண்டான் என்ற புனிதஸ்தலம் உள்ளது இங்கு அப்பய்ய தீக்ஷிதரின் பெண்வழிப் பரம்பரையில் வந்த ஸ்ரீயக்னேஸ்வரன் - காமாக்ஷி அம்மாள் தம்பதிக்கு மிகுந்த தேஜஸுடனும்,தெய்வீக அம்சத்துடன் பிறந்த குழந்தைக்கு “சுந்தரன்” என்று பெயர் சூட்டினர்.

சுந்தரனுக்கு ஒருவயது மூன்று மாதம் ஆனபோது தாயார் காமாக்ஷி அம்மாளும், ஒரு மாத இடைவெளியில் தந்தை ஸ்ரீயக்னேஸ்வர சிவனும் பரகதி அடைந்தனர். சுந்தரனையும், அவனுடைய அண்ணன் குப்பாணிசிவனையும் வளர்க்கும் பொறுப்பை குழந்தைகளின் தாய்மாமன் பத்தமடை ராமவேங்கடசுப்பையர் ஏற்றுக் கொண்டார். குழந்தைகளுக்கு வயது வந்தவுடன் முறைப்படி உபநயன சடங்குகள் செய்து வைக்கப்பட்டன.

உபநயனம் நடந்த பதினைந்தாம் நாளிலிருந்து ஆரம்பித்து ஆறு ஆண்டுகாலத் திற்குள் ஒருகோடியே நூற்றி எட்டு காயத்ரி ஜபஹோமத்தை பூர்த்தி செய்தான் சுந்தரன். சின்னஞ்சிறு வயதிலேயே தாமிரபரணி நதியை மூன்று வகையில் நதி பிரதக்ஷணம் செய்த ஒருவர் இவர் மட்டுமே!. ஏழு ஆசிரியர்களிடம் கல்வி பயின்று தலைமாணாக்கனாய் விளங்கினார். இளம் வயதிலேயே வாக்குப் பலிதம் பெற்று பலரின் குறைகளைத் தீர்த்து வைத்தார்.


1843-ம் ஆண்டு அவரது பன்னிரெண்டாம் வயதில், அடைச்சாணியைச் சேர்ந்த எட்டுவயது நிரம்பிய ஜானகியை மணந்தார். சில ஆண்டு கள் சென்று நடந்த சாந்தி முஹூர்த்தத்தன்று, மனைவி செவியில் மந்திரோபதேசம் செய்து தன்னுடைய சிஷ்யையாக ஏற்றுக்கொண்டார். தன்னுடைய ஆறாவது குருவான மஹாகணபதி முனீந்திரரை வாரணாசி மணிகர்ணிகா கட்டத்தில், கங்கை ஆற்றின் ஆழத்தில் சென்று சந்தித்து ஜலசமாதியில் அமர்ந்து அஷ்டமா சித்திகளையும் அவரிடம் கற்றார். தனது 16ஆம் வயதில், 1847-ம் ஆண்டு ஆவணி மாதத்தில் சுத்தமல்லி என்ற ஊரில் “சூதசம்ஹிதை” பிரவசனம் செய்து கொண்டிருக்கும் பொழுது, தன்னுள் எழுந்த இறைக்கட்டளையை ஏற்று “வித்வத் சந்நியாசம்”பூண்டார்.

**மஹான் சுந்தரர் நிகழ்த்திய அற்புத லீலைகளில் சிலதுளிகள்:**

மதுரை ஸ்ரீமீனாக்ஷி- சுந்தரேஸ்வரர் ஆலயத்தின் பொற்றாமரைக் குளத்தில் மூழ்கி சடலமாய் மிதந்த நாராயணசிவன் அவர்களுக்கு மந்திரம் ஜபித்து விபூதி பூசி போன உயிரை மீட்டார்.

கோடகநல்லூரில் தாமிரபரணி ஆற்றின் நாணற்காட்டில் சுந்தர ஸ்வாமிகள் நிஷ்டையில் இருந்தபோது, சிவபெருமானே “அந்த சிவன் வேறல்ல; இந்த சிவன் வேறல்ல” என்று திருவாய் மலர்ந்தருளி, சுந்தரருக்கு இட்ட பிக்ஷையை தம் திருக்கரங்களால் பெற்றுக்கொண்ட அற்புதம் நடந்தது;

ஒரே நாளில் ஒரே நேரத்தில் ஸப்தஸ்தானங்களில் நிகழ்ந்த குடமுழுக்கு அனைத்திலும் 7 இடங்களிலும் ஒரே நேரத்தில் அன்பர்களுக்குக் காட்சி தந்தார். கோடகநல்லூரில் நீரில் மூழ்கி இறந்த சிறுவன் யக்னேஸ்வரனையும், ஸ்வாமிமலையில் சர்பம் தீண்டி மாண்ட குப்புஸ்வாமியையும் திருவெண்ணீறு பூசி உயிர்ப்பித்தார்.




தாம் ஜீவியவந்தராய் இருந்த குறுகிய காலத்திற்குள் 27-கோயில்களுக்கு கும்பாபிஷேகம் நடத்தினார். மரக்காணத்தில் இவரை அவமானப்படுத்த வேண்டும் என்று நினைத்த சிறுமதியாளர், ஒரு தாம்பாளத்தில் இறைச்சி உணவைத் துணியால் மூடி இவர்முன் படைக்க, அத்துணியின் மேல் நீர்தெளித்து இறைச்சியை கனிகளாக்கிய லீலையை அரங்கேற்றினார்; தில்லை சிவகங்கை தீர்த்தத்தில் மூழ்கி திருக்கயிலாய தரிசனம் செய்து ,பத்மாசனக் கோலத்தில் நீரில் மிதந்தபடியே பக்தர்களுக்குக் காட்சி அளித்தார்.

வையைச்சேரி ஆலயத்தில் ஸ்ரீ சிவகாமசுந்தரி அம்மன்-நடராஜர் சிலைகளைத் தம் அற்புதங்களால் வெளிப்படுத்தினார். திருவிதாங்கூர் சம்ஸ்தானத்தில் புகழ் பெற்று விளங்கிய சட்டம்பி ஸ்வாமிகளின் குருவாக விளங்கினார்.

சிருங்கேரி மஹாசந்நிதானம் ஸ்ரீஉக்ரநரஸிம்மபாரதி அவர்களால் கலியுக சுந்தரம், “அவதார புருஷர்”, “மஹாசந்நிதானம்” என்று மரியாதையுடன் அழைக்கப்பட்டார். தனது சக்தியால் பக்தர்களை ஆகாச மார்கமாக திருக்கோவில்களுக்கு அழைத்து செல்வது, கூடு விட்டு கூடு பாய்தல், விலங்குகளுக்கும் மருத்துவமளித்தல் என்று எண்ணற்ற அசாத்திய செயல்களை புரிந்துள்ளார் சுந்தர ஸ்வாமிகள்.

மன்னர்கள் காலத்திற்குப்பின் கோயில்களையும், வேத, ஆகம, தேவாரப் பாடசாலைகளைக் காப்பாற்றிய பெரும் பங்கு நகரத்தார் சமுதாயத்தைச் சாரும். இந்த சமுதாயத்தினரிடையே நாத்திகம் மேலோங்கிய போதும், தர்ம சிந்தனை குன்றியபோதும், ஏக ருத்ராட்ச தீட்சை கொடுத்து அவர்களை மீட்டெடுத்தவர் ஸ்ரீ சுந்தர ஸ்வாமிகள் என்றார் காஞ்சி மஹான் ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள். திருநெல்வேலி பகுதியில் கிறிஸ்தவ மதமாற்றத்தில் வீழாமல் பாரம்பரிய சைவர்களைக் காத்தார். இன்றும் திருநெல்வேலி நெல்லையப்பர் கோவிலில் ஆண்டுதோறும் நடைபெற்றுவரும் இலட்சதீப விழா, சுந்தர ஸ்வாமிகளால் ஏற்படுத்தப்பட்டது.

ஸ்ரீ சுந்தர ஸ்வாமிகள் மதமாற்றத்தைத் தடுத்த மஹான் மட்டுமின்றி, சமுதாய சமத்துவத்தையும் நிலை நாட்டியவர். பட்டியலின சமூகத்தினருக்கும், பெண்களுக்கும் தீட்சை கொடுத்து இறைவன் முன் அனைவரும் சமம் என்பதை உணர்த்திய சமூகப் புரட்சியாளராகவும் பரிணமித்தார்.

புதுக்கோட்டை மாவட்டம், அரிமழம் நகரைத் தன் “சொந்த ஊர்” என்று கூறி ஊரினுள் தம் திருவடிகளைப் பதித்தவர், வெகுதானிய வருஷம், ஐப்பசி மாதம் 6-ம் தேதி கிருஷ்ணபக்ஷ தசமி, திங்கட்கிழமை-1878, அக்டோபர் 21-ஜீவசமாதியுள் நுழைந்தார். இன்றும் மஹான் சுந்தரஸ்வாமிகள் தம் பக்தர்களுக்கு அருளாசிகளை வாரிவாரி வழங்கிக் கொண்டிருக்கிறார். சுந்தர ஸ்வாமிகளை வேண்டி வாழ்க்கையில் மேன்மை அடைந்தவர்களின் அனுபவங்கள் நம்மை பிரமிப்பூட்டச் செய்கிறது.

***பொன்னாடு செயும் தவத்தால்***
***பொற்புறு கயிலையில் அமர்ந்தாய்***
***தென்னாடு செயும் தவத்தாற்***
***சிறப்புற ஈண்டு அவதரித்தாய்***
***முன்னாடும் செயல் அனைத்தும் முடித்து***
***அரிமழம் தன்னில்***
***என்னாடும் தொழ அமர்ந்தாய்***
***சுந்தர தேசிக மணியே!***



# உள்ளுணர்வை உசுப்பி விடு

வ ரங்கநாதன், ஆளுமைத் திறன் பயிற்றுநர்

*வருமுன் காப்போம் என்கிறது ஆன்றொர் வாக்கு.*
*எது வரலாம் என முன் கூட்டியே அறிந்தால் தானே காப்பதற்கான வழிமுறையை வகுக்க முடியும்.?*

**ஆனால் வாழ்க்கை எதிர்பாராத திருப்புமுனைகளை மறைத்து வைத்திருக்கிறது. அவற்றை முன் கூட்டியே அறிய முடியுமா?**

**முடியும். உள்ளுணர்வு சுட்டிக் காட்டும்.**

இன்றைய கல்வி முறையால் உள்ளுணர்வை எழுப்ப முடியுமா? முடியாது. முகாந்திரமே இல்லாத ஒன்றை முன் கூட்டியே அறிய நவீனக் கல்வி முறைக்குத் தெரியாது.

**உள்ளுணர்வை வளர்க்க வழிதான் என்ன?**

தியானம், செறிவு மற்றும் மனதை முழுமையாக ஈடுபடுத்துதல் மூலம் உள்ளுணர்வு அறிவைப் பெறலாம் என்று சுவாமி விவேகானந்தர் கற்பித்தார்.

**பாரதத்து மெய்ஞ்ஞானிகள் விஞ்ஞானிகளாகவும் இருந்தனரே!**

எப்படி? மனதின் இயக்கத்தை நன்கு அறிந்தவராக இருந்தனர். அண்ட சராசரத்தில் உள்ளவற்றை அறிந்ததோடு அல்லாமல் அவைகளின் இயக்கத்தைப் பற்றிய நுண்ணிய தகவல்களையும் அறிந்தவராக இருந்தனரே? உள்ளுணர்வை கருவியாக்கி புறக் கண் காணாததையும் அகக்கண்ணால் கண்டறிந்தனர். அதனாலேயே அண்டத்தில் உள்ளது பிண்டத்தில் உள்ளது என்று கண்டுபிடித்தனர்.

**உள்மனது உற்ற நண்பன்**

உங்கள் வாழ்க்கையின் சிக்கல்களுக்கு சங்கடங்களுக்கு விடை உள்மனசில் உள்ளது..

**அகத்தை மௌனமாக்கி**
**அகத்தை தகுதியாக்கி**
**அகத்தை உற்று நோக்கி**
**அகத்தை அறிந்து கொள்** என்கிறது ஒரு சித்தர் பாடல் மனத்தின் எண்ண ஓட்டம் அடங்கும் அளவு உள்ளுணர்வு பலம் பெறுகிறது சந்தேகம் பயம் படபடப்பு இல்லாத உள்ளமே உள்ளுணர்வின் இருப்பிடம்.வீடு வாங்குவது, துல்லியமாக முடிவு எடுப்பது, சந்திக்கும் நபரின் நம்பகத்தன்மையை அறிவது, அடுத்து என்ன செய்வது என்ற வாழ்க்கையின் எந்த ஒரு முக்கிய சந்தர்ப்பத்திலும் சரியான வழி காட்டுதல் கிடைக்க உள்ளுணர்வு உதவி செய்யும்.


**உள்ளுணர்வு உற்ற நண்பன். எந்த நாளும் கைவிடாது.**

உள்ளுணர்வை எழுப்ப என்ன செய்ய வேண்டும்?.


- 10 நிமிடம் வெறுமனே கண்ணைமூடி அமர்ந்து மனசில் ஓடும் எண்ணத்தை வெறுமனே கவனிக்க வேண்டும்.
- 5 நிமிடம் ஏதேனும் ஒரு பொருளை எடுத்து உற்று நோக்க வேண்டும். அவற்றின் விவரங்களை கவனிக்க வேண்டும். பிறகு கண்ணை மூடிய படி அந்தப் பொருளை கையால் தடவி உணர வேண்டும்.
- 5 நிமிடம் கண்களை மூடியபடி சுற்றி கேட்கும் ஒலிகளை கவனிக்கணும்.
- 10 நிமிடம் மனம் ஒருமித்து இறைவனிடம் பேசலாம். சுலோகங்கள் பிரார்த்தனைகள் என செய்யலாம்.

இப்படி செய்வதன் மூலம் மனசின் சலசலப்பு குறையும்.

**மன அமைதி வரும் அமைதியான மனசில் உள்ளுணர்வு விழிக்கும், விழிப்புற்ற மனம் வெற்றி தரும்!**



# ஆலயம் தொழுவது சாலவும் நன்று!



-கலாவதி

அலுவலகத்தில் இருந்து வந்ததும், "எல்லோரும் புறப்பட்டாச்சா?" என்று கேட்டபடியே அப்பா உள்ளே நுழைந்தார்.

"அப்பா.. கோயிலுக்கு போய்தான் சாமி கும்பிடணுமா? அவர்தான் தூணிலும் இருக்கார், துரும்பிலும் இருக்காரே" என்று கேட்டாள் மாலதி.

"அதுதான் நானும் கேட்கறேன். வீட்டுப்பாடம் வேற நிறையவே இருக்கு" என்று சரண் சலித்துக் கொண்டான். "அதெல்லாம் நாளை ஞாயித்துக்கிழம பார்த்துக்கலாம். இருங்க குளிச்சிட்டு வந்துடறேன்" என்றார் அப்பா.

அவர்களின் வாகனம், மாலதியும் சரணும் இதுவரைக்கும் வராத கோயிலுக்கு சென்றது. காரில் இருந்து இறங்கியதும், வாசலில் இருந்த கடைக்காரர்கள் ஓடி வந்து, "என்னங்க எங்களையெல்லாம் மறந்துட்டீங்களா?" என்று நலம் விசாரித்தார்கள்."இவங்களை உங்களுக்கு ஏற்கனவே தெரியுமா?" என்று ஆச்சரியமாக கேட்டான் சரண். "ஆமா, இங்க பக்கத்துல இருந்தப்போ அடிக்கடி வருவோம். உங்க அக்கா கை குழந்தையா இருந்தப்போ, இப்போ இருக்கற வீட்டை வாங்கி வந்துட்டோம்" என்றார் அம்மா. "அட... இவ்வளவு பெரிய பொண்ணா ஆயிட்டாளா?" என்று பூக்காரம்மா கேட்க, "ஆமாக்கா, அஞ்சாவது படிக்கறா" என்றார்.

உள்ளே நுழைந்ததும் அர்ச்சகர், "பொண்ணு ரேவதி நட்சத்திரம் தானே? பையனுக்கு" என்று சினேகமாக பேசினார். சிவலிங்கம் அலங்கார ரூபத்தில் காட்சியளித்தது. அர்ச்சனை செய்ததும், ஓதுவார் தேவாரம் பாட மணியாட்டும் ஒலி கேட்டது. மாலதி, சரண் இருவரும் தங்களை அறியாமலேயே மெய் சிலிர்த்தனர். கோயிலில் அம்பாள் சன்னதி, அறுபத்து மூவர் சிலைகள், நவகிரகங்கள் என ஒவ்வொன்றும் பாரம்பரியத்தை விளக்கின.

பிரகாரம் சுற்றிவிட்டு, கொடிமரத்தை நமஸ்காரம் செய்து, எல்லோரும் அமர்ந்தார்கள். இரண்டு நடுத்தர வயதுக்காரர்கள் "என்னப்பா சரவணன், பார்த்து ரொம்ப வருஷமாச்சு" என்று கேட்க, "ஆமாண்ணே, இங்க வர நேரம் கிடைக்கல. நீங்க எப்படி இருக்கீங்க" என்று அப்பா பதிலுக்கு நலம் விசாரித்தார்.

"எனக்கு என்னப்பா, ஜோரா இருக்கேன்" என்று ஒருவர் மகிழ்ச்சியுடன் சொல்ல, மற்றொருவரோ "என் கதை தனிப்பா, கடை வச்சிருந்தேன்ல. அதுல ஏகப்பட்ட நஷ்டம். எல்லாத்தையும் மூடிட்டு வேலைக்கு போயிட்டேன். இப்பதான் மூச்சு விட முடியுது" என்று புலம்பி தீர்த்தார்.

"கவலைப்படாதீங்க சார், கடவுள் பார்த்துப்பார்" என்று அப்பா ஆறுதல் கூறியதற்கு, அவர்கள் இருவரும் ஆமோதித்தார்கள். குழந்தைகள் இருவரையும் விசாரித்து, கொஞ்ச நேரம் பேசிக் கொண்டிருந்தார்கள்.

காரில் ஏறி வீட்டுக்கு புறப்பட்டார்கள். அப்போது, "எல்லா வாரமும் ஏதாவது கோயிலுக்கு போறோம்ல. இன்னைக்கு எப்படி இருந்தது?" என்று அம்மா ஆரம்பித்தார்.

"நிறைய ஆட்களை பார்க்க முடியுது. அதுவும் அந்த சாமி சிலையில் இருந்து கிடைக்கற சக்தி. அது வீட்டுல இருந்து கிடைக்காதும்மா" என்று மாலதி அடுக்கிக் கொண்டே செல்ல, "அடுத்த வாரம் எந்த கோயிலுக்கு போறோம்ப்பா" என்று சரண் ஆர்வமாக கேட்டான்.



# சீறிப்பாயும் இந்தியா

- வெங்கட் பிரசாத்,
அரசியல் மற்றும் விளையாட்டு ஆய்வாளர்

**கடந்த ஒரு மாதத்தில் இந்தியா பங்கு கொண்ட விளையாட்டுப் போட்டிகளையும், அவற்றின் முடிவுகளின் தொகுப்பையும் இந்தக் கட்டுரையில் காண்போம்.**

**பெண்களுக்கான ICC ODI உலகக்கோப்பை:**




இந்தியா மற்றும் இலங்கை இணைந்து நடத்தும் 2025 ஐசிசி ஒடிஐ உலகக் கோப்பையில் முதல் இரண்டு ஆட்டத்தில் இந்தியா அதிரடி வெற்றி பெற்றது. இந்திய பெண்கள் கிரிக்கெட் அணி மிதாலி ராஜ் காலத்தில் தொடங்கி திறன் மேம்பட்டு வளர்வதைக் காண முடிகிறது. இந்திய ஆண்கள் அணியை போலவே முதல் கட்டமாக ஆசிய அணிகள் மீது முழு ஆதிக்கத்தைச் செலுத்தி வீழ்த்த முடியாத நிலைக்கு வந்துள்ளது. சமீப காலங்களாக SENA countries எனப்படும் ஆஸ்திரேலியா, இங்கிலாந்து, நியூசிலாந்து, தென் ஆப்பிரிக்கா அணிகளுக்கும் சவால் விடும் விதமாக இந்திய பெண்கள் அணி விளையாடினாலும் அவர்களை வீழ்த்தும் அளவிற்கு இன்னும் திறனை மேம்படுத்த வேண்டி உள்ளது.

ஆயினும் இந்த உலகக் கோப்பையில் ஆஸ்திரேலியா மற்றும் இங்கிலாந்துக்கு எதிராக நமது பெண்கள் செய்த பெரும் முயற்சி அனைவரையும் நின்று கைதட்ட வைத்தது. நியூசிலாந்தை தோற்கடித்ததால் அரை இறுதிக்கு தகுதி பெற்றுள்ள இந்தியப் பெண்கள் அணி ஆஸ்திரேலியாவை எதிர்கொண்டது. முதலில் பேட் செய்த ஆஸ்திரேலிய அணி 338 ரன் எடுத்தது. இந்த இலக்கை 48.3 ஓவர்களில் கடந்து இந்திய பெண்கள் அணி வெற்றி பெற்று உலக சாதனை படைத்துள்ளது. அவர்களுக்கு நமது வாழ்த்துக்கள். தொடக்க ஆட்டக்காரர்களாக ஸ்ம்ருதி மந்தனா மற்றும் பிரித்திகா பல சாதனைகளைப் படைத்து வருவது பெருமை அளிக்கிறது.

**கபடியில் தீபாவளி பரிசு:**

பக்ரைனில் நடந்து வரும் 2025 ஆண்டு Youth Games, கபடியில் ஆண்கள், பெண்கள் இரண்டு பிரிவிலும் இந்திய அணி தங்கம் வென்றுள்ளது, முக்கியமாக தீபாவளி அன்று பாகிஸ்தானுக்கு எதிரான ஆட்டத்தில் 81-19 என்ற மிகப்பெரிய புள்ளி வித்தியாசத்தில் அதிரடி வெற்றி பெற்ற இந்திய அணி Toss நேரத்திலும்,ஆட்டத்தின் முடிவிலும் பாகிஸ்தானுடன் கைகுலுக்க மறுத்து வீரநடை போட்டது. தற்போது 12 பதக்கங்களுடன் ஐந்தாவது இடத்தில் இருக்கிறது.

**பேட்மிண்டனில் அசத்தல்:** 2025 டென்மார்க் ஓபன் பேட்மிண்டன் போட்டிகளில் இந்தியாவின் லக்ஷ்யா சென், உலகத் தரவரிசையில் இரண்டாம் இடம் பெற்றுள்ள அண்டன்ஸனை தோற்கடித்து மிகுந்த பாராட்டைப் பெற்றார், துரதிஷ்டவசமாக கால் இறுதியில் தோல்வியுற்றாலும், அண்டன்ஸனுக்கு எதிரான ஆட்டம் இந்திய பேட்மிட்டன் மிளிர்வதை உலகிற்குக் காட்டியது. இந்திய பேட்மிட்டனின் மின்னல் இரட்டையர்கள் ரங்கி ரெட்டி - சிராக்ஷெட்டி அற்புதமாக விளையாடிய போதும் அரை இறுதியில் தோல்வியைத் தழுவினர்

**ஆண்கள் கிரிக்கெட் அணி:** T20 ஆசிய கோப்பையை அதிரடியாக வென்ற போதும், சொந்த மண்ணில் வெஸ்ட் இண்டீஸ் அணியை பெரிதாக வென்ற போதும், ஆஸ்திரேலியாவிடம் அவர்களின் சொந்த மண்ணில் ஒரு நாள் போட்டி தொடரை இழந்திருப்பது பெரும் வருத்தத்தை தந்துள்ளது ரோஹித் சர்மா-விராட்கோலி-கௌதம் கம்பீர் இடையே முரண்பாடு இருப்பதாக குரல்கள் ஒலிக்கத் தொடங்கியுள்ளது. எனினும் டி20 தொடரை இந்தியா கண்டிப்பாக கைப்பற்றும் என்பதே நமது கணிப்பு, அதற்கு தவறாமல் சுழற்பந்து வீச்சாளர்களை சரிவர பயன்படுத்த வேண்டும்.


# சினிமா சாரல்

திடல் தாலியறுப்பு சிந்தனை திரையில்

## DUDE பட விமர்சனம்

-சேஷு

தீபாவளியை ஒட்டி வெளியான தமிழ் படவரிசையில் டியூட் படமும் ஒன்று. அறிமுக இயக்குநர் கீர்த்தீஸ்வரன் இயக்கத்தில், மைத்ரி மூவி மேக்கர்ஸ் தயாரிப்பில் பிரதீப் ரங்கநாதன், மமிதா பைஜூ,சரத்குமார், ரோகிணி மற்றும் ஹிருது ஹாரூண் ஆகியோர் நடிப்பில் வெளி வந்துள்ளது. ஆல்பம் இசை மூலம் இளைஞர்களிடம் பெரும் வரவேற்பைப் பெற்ற சாய் அப்யங்கர் இப்படத்திற்கு இசை அமைத்துள்ளார்.




சரி இந்தப் படம் எப்படி இருக்கிறது? என்று கேட்டால் ஒரு யூடியூப் தளத்தில் ரசிகர்களின் கருத்தை பதிவிட்டிருந்தார்கள். அதில் ஒரு இளைஞர் சொன்னது "இந்தப் படத்திற்கு DUDE என பெயர் வெச்சதிற்குப் பதிலாக ....(அச்சில் ஏற்ற முடியாது) என வெச்சிருக்கனும் என்றார். சமுதாயத் தின் மீது அக்கறையுள்ளவர்கள் இப்படிச் சொன்னாலும், இப்படம் 100 கோடி வசூலை தாண்டியிருக்கிறது என சொல்லப்படுவதிலிருந்து எப்படிப்பட்ட தாக்கத்தை இப்படத்தின் கருத்து ஏற்படுத்தப் போகிறது என்பது போகப் போகத்தான் தெரியும்.

காதல் என்பது ஒரு விபத்து போல ஹீரோ, ஹீரோயின், தோழி என எல்லாருக்கும் அவ்வப்போது வந்து போகிறது. சில காலம் முன்பு வரை இயக்குநரின் முதல் ஷாட் என்பதே ஒரு கோயிலின் கோபுரம் காட்டுவதோ, பொழுது விடிவதைக் காட்டுவதாகவோ இருக்கும். ஆனால் இப்படத்தின் முதல் காட்சியே தாலி அறுப்பதை காட்டுகிறார்கள்.அதை ஒரு காமெடியாக காட்டுவதில் இருந்தே இயக்குநர் "திடல்" சிந்தனை கொண்டவர் என தெரிந்து விடுகிறது.

அதை மெய்ப்பிக்கும் வகையில் படத்தின் சக்சஸ் மீட்டில் (5 நாட்களுக்குள் தியேட் டரிலிருந்து தூக்காமல் இருந்தாலே நடப்பது) இங்கு ஒரு பெரியவர் இருந்தார், அவர் பிரச்சாரம் செய்ததைத் தான் சினிமாத்தனமாக சொல்லியிருக்கிறோம் என கீர்த்தீஸ்வரன் தெரிவித்தார். தன் முதல் படத்திலேயே இச்சமூகத்திற்கு ஒரு கருத்தைச் சொல்ல வேண்டும் என வலிந்து ஆணவக் கொலைக்கு எதிராக சமர் புரிந்திருப்பதாக அவரே கூறிக்கொள்கிறார்.

சாதி ஆணவம் மிக்கவராக தமிழ் சினிமாவின் அக்மார்க் ஹிந்து சின்னங்களுடன் அமைச்சராக சரத்குமாரை காட்டியிருப்பது, தற்போதைய திமுக அமைச்சரை குறியீடாக காட்டப்பட்டுள்ளது என சிலர் செ ால்கின்றனர். பெண் கதாபாத்திரங்கள் எல்லாம் செகண்ட் ஹாண்ட் போல கொச்சைப்படுத் தியுள்ளனர்.

ஹீரோ தன் காதலை ஏற்கவில்லை என்றவுடன் மனதை தேற்றிக்கொள்ள படிக்கப் போகிறேன் என ஹீரோயின் கிளம்புகிறார். திரும்பி வந்தவர் என்ன படித்தார் எனத் தெரியவில்லை ஆனால், கல்லூரியில் காதலித்த நபரால் வயிற்றில் குழந்தையை சுமக்கிறார். அதை ஏதோ ஒரு ட்விஸ்ட் போல பில்டப் செய்வது மிக செயற்கையாக உள்ளது. பிரதீப்பின் நடிப்பு பல இடங்களில் தனுஷின் மேனரிஸத்தின் காப்பி போலவே இருக்கிறது. அப்யங்கரின் பின்னணி இசை அவரது அனுபவமின்மையை காட்டுகிறது. இளைஞர்கள் அதிகமாக முனுமுனுத்த பாடலின் காட்சிப்படுத்தல் சொல்லிக்கொள்ளும்படியாக இல்லை.

சமூகக்கேட்டை ஆதரிக்கும் DUDE படத்திற்காக, வனவாசி மக்களின் தெய்வ நம்பிக்கையை மையமாக வைத்து எடுக்கப்பட்டு, வரவேற்பை பெற்ற காந்தாரா-1 படத்திற்கான ஸ்கிரீனை குறைத்திருப்பது பலருக்கு வருத்தத்தைக் கொடுத்திருக்கிறது.

ஆணவக்கொலைக்கு எந்தவொரு பண்பட்ட சமுதாயமும் ஆதரவு தரப் போவதில்லை ஆனால் , ஆணவக்கொலைக்கு எதிரான படம் என்ற கருத்தாக்கத்திற்குப் பின்னால் ஒளிந்துக் கொண்டு சமூகத்தில் மோசமான தாக்கத்தை ஏற்படுத்தும் DUDE போன்ற படங்கள் மக்களால் புறக்கணிப்படுவதே நல்லது.

# சித்தாந்தவாதியின் குமுறல்

பாரதிய ஜனதா கட்சியினர் பசு மாட்டின் மீது பக்தி செலுத்துவது அவர்களது இயல்பு. திரையில் வந்த காளை மாட்டின் மீது சிலர் திடீர் கரிசனம் காட்டுவது ஏன் என்று தெரியாமல் குழம்பிப் போய் இருக்கிறார்கள் பாஜக சித்தாந்தவாதிகள்.

வெறும் கதை அல்ல, இது வரலாறு என்று சொல்லித்தான் படம் எடுக்கிறார்கள். அதில் உண்மைக்கு மாறாக ஜாதிய வன்மத்தை, வெறுப்பு அரசியலைக் கலக்கிறார்கள். உண்மையிலேயே நிலவும் நல்லிணக்க விஷயங்களை மறைக்கிறார்கள்.

சமூகத்தைப் பிளவுபடுத்தும் நோக்கோடு நசுக்கப்பட்டோம், பிதுக்கப்பட்டோம் என்றே தொடர்ந்து வெளியிடப்படும் திரைப்படங்களை கலைக் கண்ணோடு பார்ப்போம், பாராட்டுவோம் என்று இலக்கியவாதிகள்




சொன்னாலே ஏற்றுக் கொள்ள முடிவதில்லை. அரசியல் கண்ணோட்டம் இருக்க வேண்டிய அரசியல்வாதிகளும் அப்படிச் சொன்னால் சகிக்க முடிவதில்லை.

உரலுக்கு ஒரு பக்கம் இடி. மத்தளத்துக்கும் சித்தாந்தவாதிகளுக்கும் இரண்டு பக்கமும் இடி. "நல்லவேளை "பேட் கேர்ள்" படம் இன்னும் வெளியாகவில்லை! என அவர்களுக்கு நாம் ஆறுதல் சொல்ல வேண்டியதுதான்.

ஸ்ரீ தமிழ்
உண்மை நின்றிட வேண்டும்

70102 81932
shreemedia.news@gmail.com

வாசகப் பெருமக்களுக்கு அன்பான வணக்கம்,
ஸ்ரீதமிழ் இதழின் ஆண்டு சந்தாதாரராக இணைய
ரூ.600/-ஐ பின்வரும் கணக்கில் செலுத்தி,
மொபைல் எண்ணில் வாட்ஸ் அப் செய்தி அனுப்பவும்

Account Name: Shree Tamizh
Acc no : 510909010376328
IFSC code : CIUB0000067
Branch: Chinmaya Nagar

ஸ்ரீ தமிழ் இதழுக்கு செய்திகள் அனுப்ப, விளம்பரம் செய்ய, கீழ்காணும் முகவரியில் தொடர்பு கொள்ளவும்.

77/6, 10th Avenue, Ashok Nagar, Chennai - 600083.



# ஸ்ரீடிவியின் 10வது ஆண்டு விழா

**வீரத்துறவி விதைத்த வித்து:**

2016-ஆம் ஆண்டு வீரத்துறவி இராம கோபாலன் ஜி அவர்களின் வழிகாட்டுதலின்படி, அவரது ஆசியுடன் விஜயதசமி நன்னாளில் ஆரம்பிக்கப்பட்ட ஸ்ரீடிவி, 10 வது ஆண்டில் வெற்றிகரமாக அடி எடுத்து வைத்துள்ளது.

**ஸ்ரீடிவி10:**

ஸ்ரீடிவியின் 10வது ஆண்டு விழா அக்டோபர் 11,2025 சனிக்கிழமை அன்று சென்னை தியாகராஜ நகர் ராமகிருஷ்ணா பள்ளி வளாகத்தில் சிறப்புற நடைபெற்றது. திருமதி ஆனந்தவல்லி குத்துவிளக்கு ஏற்ற, வேத பண்டிதர்களின் நான் மறைகள் ஓதலுடன் இனிதே துவங்கியது ஆண்டு விழா. ஸ்ரீடிவியின் இயக்குநர்களில் ஒருவரான ஓமாம்புலியூர் ஜெயராமன் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார். ஸ்ரீடிவியின் "ஸ்பெஷல் டீ ஷாப்" நையாண்டி காணொளியுடன் விழா உற்சாகத்துடன் துவங்கியது.

**தடைகள் பல தகர்த்து தொடரும் பயணம்:**

"ஸ்ரீடிவி யின் 9 ஆண்டு காலப் பயணம் முள் நிறைந்த பாதை. தடைகளைத் தகர்த்து எறிந்து தொடருகின்ற வெற்றிப் பயணம். வீரத் துறவியின் ஆசியாலும், இறை அருளாலும், வாசகர்களின் ஆதரவாலும், ஸ்ரீடிவி பணியாளர்களின் அர்ப்பணிப்பினாலும், கடந்த 9 ஆண்டுகளாக பல வகையான நெருக்கடிகளைத் தாண்டி எதிர் நீச்சல் போட்டு, 10 வது ஆண்டில் வெற்றிப் பயணத்தைத் துவங்குகிறது" என ஸ்ரீடிவி நிர்வாக இயக்குநர் திருமதி.பிரியா வெங்கட் குறிப்பிட்டார். ஸ்ரீடிவி பணியாளர்கள் அனைவரும் மேடையிலே அறிமுகம் செய்யப்பட்டு கௌரவிக்கப்பட்டனர்.

**பலமே வாழ்வு:**

ஸ்வாமி மோக்ஷ வித்யானந்த சரஸ்வதி அவர்கள் ஸ்ரீடிவி ஆண்டு விழாவில் ஆசியுரை வழங்கினார். "அறிவுதான் சனாதன தர்மத்தின் பெரும் சொத்து" என்பதை விளக்கிய ஸ்வாமிஜி, "நாம் பலம் பெற்று விட்டால், நம்மை யாரும் அசைத்து பார்க்க முடியாது. நாம் சார்ந்திருக்கும் சமய நெறிகளுக்கு எந்த நிலையிலும், எந்த தடைகள் வந்தாலும், அதை விடக்கூடாது. உடல் பலம், மனதளவில் பலம், அறிவு பலம் இந்த மூன்று பலமும் நம்மிடம் இருந்தால், யாரும் நம்மை அசைத்து பார்க்க முடியாது" என்று உரை நிகழ்த்திய ஸ்வாமிஜி ஸ்ரீடிவி மேன்மேலும் வளர ஆசி வழங்கினார்.

**மத நல்லிணக்கம் என்பது கொடுத்து வாங்குவது:**

தினமலர் நாளிதழ் இணை ஆசிரியர் இரா.கிருஷ்ணமூர்த்தி அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். அவர் பேசுகையில் "துவக்கப்பட்ட நாளில் இருந்தே ஸ்ரீடிவியின் விழாக்களில் நான் பங்கேற்கிறேன். சட்டம் நமக்கு கொடுத் திருக்கும் உரிமையான கருத்துச் சுதந்திரம் என்பது ஹிந்துக்களைப் பொறுத்தவரை வெறும் ஏட்டளவில்தான் இருக்கிறது; அது செயல்பாட்டில் கொண்டு வர, நாம் தொடர்ந்து முயற்சி செய்து கொண்டே இருக்க வேண்டும். மத நல்லிணக்கம் என்பது கொடுக்கல் வாங்கல் சமாச்சாரம். மாற்று மதத்தினர் நமது புனித நூல்களையும், நமது மத நம்பிக்கைகளையும், நமது கடவுளர்களையும், நமது புனிதத் தலங்களையும், நமது பண்டிகை களையும் எந்த அளவு மதிக்கிறார்களோ நாமும் அவர்களது புனித நூல்களையும், அவர்களது மத

நம்பிக்கைகளையும், அவர்களது கடவுள்களையும், அவர்களது புனிதத் தலங்களையும், பண்டிகைகளையும் அதே அளவில் மதிக்க வேண்டும்'' என்று கூறினார்.

**நாரதர் ஊடகங்களின் முன்னோடி:**

அடுத்து பேசிய ஹிந்து முன்னணி அமைப்பின் தென் பாரத அமைப்பாளர் பக்தன் ஜி அவர்கள், "இன்றைய ஊடகவியல் துறைக்கு முன்னோடி நாரதர். தமிழக ஊடகங்கள் உண்மையான மக்கள் பிரச்சனைகளை திசை திருப்புகின்றன. தேசியம் தழைக்க, உண்மை நின்றிட ஸ்ரீடிவியை நமது பகுதியில் உள்ள ஒவ்வொருவருக்கும் கொண்டு செல்வது நம் ஒவ்வொருவரின் கடமை'' என்று பேசினார்.

**ஸ்ரீதமிழ் இதழ் வெளியீடு:**

இதுவரை யுடியூப் வலைத்தளத்தில் ShreeTv, ShreeTvSpiritual, ShreeTvLanguage, ShreeTv-Culture, ShreeTvHistory, ShreetvKids ஆகிய 6 சானல்களாகச் செயல்பட்டு வந்த ஸ்ரீடிவி அச்சு ஊடகத்தில், ஸ்ரீதமிழ் என்ற மாதம் இருமுறை இதழாக கால் பதிக்கிறது. ஸ்ரீதமிழ் முதல் இதழ், தினமலர் நாளிதழ் இணை ஆசிரியர் இரா.கிருஷ்ணமூர்த்தி அவர்களால் வெளியிடப்பட்டது.

**விருதுகள்:**

ஹிந்து சமுதாயத்தில் சிறப்பாகக் களப் பணியாற்றி வருபவர்களுக்கு ஆண்டு தோறும் ஹிந்து தர்ம காவலர் விருது வழங்கி ஸ்ரீடிவி கௌரவிக்கிறது. இந்த ஆண்டிற்கான ஹிந்து தர்ம காவலர் விருதுகள் தென்திருப்பேரை மாரிதுரைசாமி அவர்களுக்கும், திருநெல்வேலி திரு.குற்றாலநாதன் அவர்களுக்கும் வழங்கப்பட்டது.

ஹிந்து தர்மம் காக்கும் பணியில் ஊர் மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து, செயல்படும் கிராமங்களுக்கு ஹிந்து எழுச்சி கிராம விருது வழங்கப்படுகிறது. இந்த ஆண்டிற்கான ஹிந்து எழுச்சி கிராம விருது, சேலம் மாவட்டம் தீவட்டிப்பட்டி அடுத்த அய்யர் காட்டு வளவு கிராமத்திற்கு வழங்கப்படுகிறது.

**ஹிந்து தர்ம காவலர் திரு.மாரி.துரைசாமி:**

தூத்துக்குடி மாவட்டம் தென்திருப்பேரை மகர நெடுங்குழைக்காதர் ஆலயத்தில் ஆண்டு தோறும் பங்குனி உற்சவத்தின் போது பெருமாள் சுற்றுவட்டாரத்தில் உள்ள 25 கிராமங்களுக்கு குதிரை வாகனத்தில் சென்று அருள்பாலிப்பார். இந்த பாரி வேட்டை நிகழ்வு கிறிஸ்தவ மிஷனரிகளின் சதியால் கடந்த 85 ஆண்டு களாக தென் திருப்பேரை எல்லைக்குள்ளாகச் சுருங்கியது, இதனால் மதமாற்றம் அதிகரித்தது.

திரு.மாரிதுரைசாமி அவர்கள் பெருமுயற்சி செய்து தடைப்பட்ட பங்குனி உற்சவ பாரி வேட்டை விழாவை அனைத்து சமுதாய மக்களின் ஒத்துழைப்புடன் 2014ம் ஆண்டு முதல் மீண்டும் நடைபெறச் செய்தார். இதனால் மதமாற்றம் குறைந்து பலர் தாய்மதம் திரும்பினர். திரு.மாரிதுரைசாமி அவர்களுக்கு ஹிந்து தர்ம காவலர் விருது வழங்கப்பட்டது.

**ஹிந்து தர்ம காவலர் திரு.குற்றாலநாதன்:**

இஸ்லாமும் பெரியாரும் என்ற கருத்தரங்கத்தை மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைகழகத்தில் தடுத்து நிறுத்தியது, கோவில் நிலத்தை அபகரிக்க முயன்ற பல்கலைகழகத்தின் அநீதியை தடுத்து நிறுத்தியது, மேலப்பாளையம் கோவில் முன்பு நிறுவப்பட்ட பிறைக்கொடியை அகற்றியது, நெல்லையப்பர் கோவில் திருத்தேர் வடங்களை மாற்றி வெற்றி கண்டது, இது போன்ற எண்ணற்ற போராட்டங்கள், நீதிமன்ற வழக்குகள், மதமாற்ற தடுப்பு நடவடிக்கைகள், கோவில் உரிமை மீட்பு போராட்டங்கள் என எல்லா தளங்களிலும் கடந்த 32 வருடங்களாக தொடர்ந்து போராடி வரும் திருநெல்வேலி திரு.குற்றாலநாதன் அவர்களுக்கு ஹிந்து தர்ம காவலர் விருது வழங்கப்பட்டது.

**ஹிந்து எழுச்சி கிராமம்- "அய்யர் காட்டுவளவு''**

சேலம் மாவட்டம் தீவட்டிப்பட்டி பஞ்சாயத்து அய்யர் காட்டுவளவு கிராம ஹிந்துக்கள் தங்களது குல தெய்வமாக கருப்பண்ணார் -சாமுண்டீஸ்வரி ஸ்வாமியை வழிபட்டு வருகிறார்கள். ஆண்டுதோறும் இந்த கோவிலின் தேவதைக்கு பலியிடும் பலிபீடம் அகற்றப்பட்டு முஸ்லீம் தொழுகைக்காக கட்டுமானப் பணி மேற்கொள்ளப்பட்டது.

ஒரு முஸ்லீம் கூட இல்லாத அவர்களது கிராமத்தில் ஈத்கா தொழுகைக்கு இடத்தைக் கொடுத்து பாரம்பரிய வழிபாட்டு உரிமை மறுக்கப்பட்டதை எதிர்த்து ஒன்று திரண்ட அந்த கிராம மக்கள், காவல் நிலையம், மாவட்ட ஆட்சித் தலைவர், முதல்வர் வரை அனைவருக்கும் கோரிக்கை வைத்தனர். இதை ஒளிபரப்பிய ஸ்ரீடிவி மீது தீவட்டிப்பட்டி போலீசார் வழக்குப் பதிவு செய்தனர். காவல் துறை பாதுகாப்புடன் ஹிந்துக்களின் ரம்ஜான் நாளன்று வெளியூர்களிலிருந்து



நூற்றுக்கணக்கான முஸ்லீம்கள் குவிந்தனர். ஹிந்துக்களை வீடுகளிலிருந்து வெளியே வரவிடாமல் காவல்துறையினர் தடுத்து ஊரையே சிறைச்சாலையாக மாற்றினர். இதை எதிர்த்து இந்த கிராமத்தைச் சேர்ந்த திரு.கோவிந்தராஜ் அவர்கள் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். நீதிமன்றத் தடை உத்தரவுக்குப் பின்னும் கட்டுமானப் பணி தொடர்ந்தது.

இதை சுட்டிக்காட்டி நீதிமன்ற அவமதிப்பு வழக்கும் தொடரப்பட்டது. இந்த வழக்கில் வட்டாச்சியர் இந்த இடத்தை முஸ்லீம்களுக்கு ஒதுக்கி விட்டோம் என்று பிரமாண பத்திரம் தாக்கல் செய்தார். அரசு நிலத்தை ஈத்கா மைதானம் ஆக்குகிறார்கள் என்று ஸ்ரீடிவி செய்தி வெளியிடும் போது துஷ்பிரச்சாரம் என்று சொன்ன அரசு வேறொரு வழக்கில் இது முஸ்லீம்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது என்று பிரமாண பத்திரம் தாக்கல் செய்கிறது.

அரசு நிலத்தை முஸ்லீம்களுக்கு தாரை வார்த்து, அரசு உதவியுடன் ஹிந்து க்களின் அடையாளத்தை அழிக்கும் இந்த நவீன லேண்ட் ஜிகாத்தை நடத்தி வருபவர் காடையாம்பட்டி வட்டாச்சியர் நாகூர் மீரான் அவர்கள். இந்த அடக்குமுறையை எதிர்த்து பல இன்னல்களுக்கிடையே போராடி வரும் தீவட்டிப்பட்டி பஞ்சாயத்து அய்யர் காட்டுவளவு கிராம மக்களுக்கு ஹிந்து எழுச்சி கிராம விருது வழங்கப்பட்டது.

**விருது காணொளிகள்:**

ஹிந்து தர்ம காவலர்கள், ஹிந்து எழுச்சி கிராம விருது பற்றிய குறும்படங்கள் காணொளிகளாக காட்டப்பட்டது அவையோர் மனதில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது.

**தேசபக்த ஊடகவியலாளர்கள்:**

எந்த வித எதிர்பார்ப்பும் இன்றி பலவிதமான இன்னல்களுக்கிடையிலும் ஸ்ரீடிவிக்கு உண்மைச் செய்திகளை வழங்கி வரும் தேசபக்த ஊடகவியலாளர்கள் விழா அரங்கில் கௌரவிக்கப்பட்டனர்.

**ராமர் பணியில் அணில்:**

ஸ்ரீடிவி இயக்குநர்களில் ஒருவரான சீனிவாசன் நன்றி நவில, எல்லோரும் சேர்ந்து நாட்டுப் பண் இசைத்தனர். ஊடகப் பணியோடு களப் பணியும் செய்து வரும் ஸ்ரீடிவி யின் ஹிந்து சமுதாயப் பணியில் நானும் எனது பங்களிப்பைச் செய்ய வேண்டும் என்ற உணர்வில் அவையோர் திளைக்க விழா இனிதே நிறைவு பெற்றது.

**உண்ணாமல் கெட்டது உறவு:**

உண்டு வளர்வது உறவு. ஸ்ரீடிவி ஒரு குடும்பம். ஸ்ரீடிவி குடும்பத்தினர் விழா முடிந்ததும் விழா அரங்கில் உண்டு, உறவாடி, வீடேக மனமின்றி விடைபெற்றுச் சென்றனர்.

**இதுவரை யுடியூப் வலைத்தளத்தில் ShreeTv, ShreeTvSpiritual, ShreeTvLanguage, ShreeTv-Culture, ShreeTvHistory, ShreetvKids ஆகிய 6 சானல்களாகச் செயல்பட்டு வந்த ஸ்ரீடிவி அச்சு ஊடகத்தில், ஸ்ரீதமிழ் என்ற மாதம் இருமுறை இதழாகக் கால் பதிக்கிறது.**

Printed by Published by Padmapriya L on behalf of Padmapriya L, Published at 77/6, 10th Avenue, Ashok Nagar, Chennai - 600 083 Printed at Chennai Offset Printers, No. 19/1 & 21/2, Kitabath Khan Bahadur Street, Ellis Road, Chennai - 600 002, Editor Padmapriya L.